# புனித இந்து மத விளக்கம்



- இந்து மதத்தின் பிறப்பு
- இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகள்
- ஸ்மிருதி சாத்திரம் - சாதாரணமாகக் கேட்கப்படும் கேள்விகளும் அவற்றின் பதில்களும்
- வேத அடிப்படையில் இந்து மதம் - வேத சுலோகங்கள்
- பகவான் கிருஷ்ணரும் பகவத் கீதையும்
- அன்றாடப் பிரார்த்தனை
- பஜனை
- சுவர்க்கமும் நரகமும்
- உருவ வழிபாடு
- சாதி வேற்றுமை முறை
- மனு ஸ்மிருதி
- உபநிடதங்கள்
- விஷ்ணுவின் பத்து அவதாரச் சக்கரங்கள்
- ஸ்வாமி விவேகானந்தரும் அவருடைய தத்துவமும்



வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட என்னை உலகத்துக்கு அனுப்பியவர் எப்பொழுதும் என்னுள்ளேயே இருக்கிறார். ஈஸ்வரன் தனியாக என்னை இந்தப் போராட்டத்துக்கு அனுப்பவில்லை.

வேதம்

கோழைத்தனத்தைக் கைக்கொள்ளாதே. அது பலவீனத்துக்கு அடையாளம். இதயத்தின் பலவீனத்தை உதறித் தள்ளிவிட்டு எழுந்து நில், எதிரிகளைக் கொல். இதுவே தருமம்.

பகவத் கீதை

மாடு பொய் சொல்லுவதில்லை, கல் திருடுவதில்லை; ஆனால் மாடு மாடாகவே இருக்கிறது. கல் கல்லாகவே இருக்கிறது. மனிதன் சில சமயம் பொய் சொல்லுகிறான். சில மனிதர்கள் திருடவும் செய்கிறார்கள். ஆனால் இந்த மனிதர்களே நல்ல காரியங்கள் செய்வதன் மூலம் தேவதைகளாகப் பூஜிக்கப்படுகிறார்கள்.

புலனின்பத்தின் அனுபவம் இல்லாவிட்டால் தியாகத்தின் பெருமையை உணர இயலாது. புலனின்பம் அனுபவிக்க யாரால் இயலுமோ அவனது தியாகம் தான் பெருமைக்குறியது.

உபநிடதம்

நீ சம்சாரத்தில் (உலக வாழ்க்கையில்) ஈடுபட்டுள்ளவன். யாராவது உனக்குத் தீங்கிழைத்தால் , நீ அவனைக் கண்ணுக்குப் பதில் கண், பல்லுக்குப் பதில் பல் என்று பழி வாங்காவிட்டால், நீ பாவி ஆவாய்.

மனு சம்ஹிதை

'வீர போக்யா வசுந்தரா' - அதாவது வீரமுள்ளவன் உலகத்தை அனுபவிக்கும் உரிமை பெற்றவன். நீ உன் வீரத்தைக் காட்டு. தேவைப்பட்டால் 'சாமம், தானம், பேதம், தண்டம்' ஆகிய நான்கு உபாயங்களையும் பயன்படுத்தி தனக்கேற்படும் இடையூறுகளை வென்று உலகத்தை அனுபவித்தால் தான் 'தார்மீகன்' ஆவாய்.

ஸ்ம்ருதி சாத்திரம்

'Heroic' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் 'வீரம்' (veera). வீரம் என்ற சொல் நற்குணம் (virtue) என்ற சொல்லிலிருந்து பிறந்தது. முன் காலத்தில் போர் வீரர்களே சிறந்த மனிதர்களாகக் கருதப்பட்டனர். வீரமுள்ள மனிதனே நல்ல மனிதனாகக் கருதப்படத் தகுதி பெற்றவன்.

ஸ்வாமி விவேகானந்தர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இந்து மதத்தின் பிறப்பு | 5 |
| 2. | இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகள் | 9 |
| 3. | ஸ்மிருதி சாத்திரம் - சாதாரணமாகக் கேட்கப்படும் கேள்விகளும் அவற்றின் பதில்களும் | 11 |
| 4. | வேத அடிப்படையில் இந்து மதம் - வேத சுலோகங்கள் | 50 |
| 5. | பகவான் கிருஷ்ணரும் பகவத் கீதையும் | 84 |
| 6. | அன்றாடப் பிரார்த்தனை | 105 |
| 7. | பஜனை | 110 |
| 8. | சுவர்க்கமும் நரகமும் | 111 |
| 9. | உருவ வழிபாடு | 112 |
| 10. | சாதி வேற்றுமை முறை | 116 |
| 11. | மனு ஸ்மிருதி | 124 |
| 12. | உபநிடதங்கள் | 126 |
| 13. | விஷ்ணுவின் பத்து அவதாரச் சக்கரங்கள் | 128 |
| 14. | சுவாமி விவேகானந்தரும் அவருடைய தத்துவமும் | 131 |
| 15. | சில சொற்களின் விளக்கம் | 135 |

## வெளியீட்டாளர் முன்னுரை

'புனித இந்து மத விளக்கம்' இந்து தரும சாத்திரங்களின் கருத்தை வெளியிடுகிறது. இது பரந்துபட்ட இந்து மத இலக்கியத்திலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் பல்வேறு சாத்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்ட மந்திரங்கள், சுலோகங்கள் இந்துக்களின் அன்றாட வழிபாட்டுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

சநாதன தருமம் (இந்து மதம்) பல்வேறு ரிஷிகளாலும், முனிவர்களாலும் மனித இனத்துக்கு அளிக்கப்பட்ட விளக்கமாகும். மற்ற மதங்கள் யாராவது ஒரு தனி மனிதரின் சக்தியாலும் ஒரு குறிப்பிட்ட கொள்கையாலும் நிலை பெற்றுள்ளன. இக்கொள்கைகள் வேறெந்த ஆன்மீக வழியையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் இந்து மதம் ஒரு தாராளமான கருத்து மரபைக் கொண்டது. இந்து மதம் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு அவரவர் விருப்பத்துக்கேற்ப வழிபட முழு உரிமை அளிக்கிறது. மத நம்பிக்கை கொண்டவர்களாகச் சொல்லிக் கொள்பவர்களின் குருட்டு மத வெறி இந்த உரிமையில் தலையிட இயலாது.

இந்த நூலின் ஆசிரியர் கடவுளின் ஆணையினால் மட்டுமே மனிதனின் நலத்துக்காக இயக்கப்பட்டுள்ளார். அவர் இந்த நூலை எழுதியிருப்பதற்காக எந்தச் சிறப்பையும் கோரவில்லை. இந்து மதம் பற்றிய நம்பகத் தன்மை வாய்ந்த எந்த நூலையாவது யாராவது ஆசிரியருக்கு அளித்தால் அதை அவர் இந்த நூலின் மறு பதிப்பில் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்வார்.

இந்த நூலை வங்காளியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கத் திரு.சு.கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்ட சிரமத்துக்காக அவருக்கு நன்றி.

இந்த நூலின் வாசகர்கள் இம்மையிலும் மறுமையிலும் அனைத்து நலன்களும் பெறுமாறு கடவுள் ஆசியருள்வாராக !

பேராசிரியர் முனைவர் சத்யஜித் சக்ரவர்த்தி
காப்பாளர்
இந்து மத மற்றும் பொது நல அறக்கட்டளை

# இந்து மதத்தின் பிறப்பு

இந்து மதம் சுமார் 20000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மதம்.

ஒரு காலத்தில் பிரும்மா, விஷ்ணு, மகேசுவரன் என்ற பெயர்களுள்ள மூன்று தெய்வீக மனிதர்கள் ஈசுவரனின் செய்திகளைத் தெரிவித்தார்கள். பிரும்மா மத்திய பாரதத்தில் தோன்றினார். விஷ்ணு (நாராயணன், வெங்கடேசுவரன், பாலாஜி ஆகியவை இவருடைய வேறு பெயர்கள் ) தென்னிந்தியாவைச் சேர்ந்தவர். மகேசுவரன் (இவருடைய வேறு பெயர்கள் - சிவன், ருத்ரன், சங்கரன்) காஷ்மீர் அதாவது வட இந்தியாவைச் சேர்ந்தவர்.

இந்த மூவரின் தெய்வீக உரைகள் மிகவும் சக்தி வாய்ந்தவையாக இருந்ததால் அவற்றின் தாக்கம் பாரத உபகண்டத்திலும் வேறு பல நாடுகளிலும் பரவியது. செய்தி மற்றும் போக்குவரத்துத் தொடர்பு சிறிதும் வளர்ச்சி பெறாதிருந்த அந்தப் பழைய காலத்திலும் அவர்களுடைய தெய்வீக அறிவிப்புகள் பல திசைகளிலும் பரவி 'சநாதன தருமம்' என்ற பெயரில் நிலை பெற்றன.

ஈசுவரனால் அனுப்பப் பெற்ற இந்த மூன்று தெய்வீகப் பெரியாரும் ஆதி தேவதைகளாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பூசிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் தாம் சநாதன தருமத்தின் நிறுவனர்களாவர். பிற்காலத்தில் இந்த 'சநாதன தருமம்' 'இந்து தருமம்' அல்லது 'இந்து மதம்' என்று பெயர் பெற்றது. இந்த மூன்று தேவதைகள் மூலம் வேதங்கள் வெளிப்பட்டன.

இந்து மதம் எந்த ஒரு நூலையும் ஆதாரமாகக் கொண்டதல்ல. எந்த ஒரு மனிதரும் இதை நிறுவியதாகச் சொல்ல முடியாது. இந்துக்கள் வேதத்தை 'அபௌருஷேயம்' (மனிதரால் உண்டாக்கப்படாதது) என்று சொல்கிறார்கள். வேதம் என்பது மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக ஈசுவரனால் அனுப்பப்பெற்ற மூல மந்திரமாகும்.

மத்திய ஆசியாவிலிருந்து இந்தியா மேல் படையெடுத்து வந்தவர்கள் சிந்து நதியின் கீழ்க்கரையில் அப்போது வழங்கி வந்த நாகரீகத்தை 'இந்து' என்று அழைத்தார்கள். அவர்கள் 'ஸி' என்ற எழுத்தை 'ஹி' என்று உச்சரித்தார்கள். ஆகவே ஸி (சி) என்பது ஹி (இ) ஆகிவிட்டது. சிந்துக்கரை வாசிகள் இந்துக்கள் என அழைக்கப்பட்டனர். படையெடுத்து வந்தவர்கள் இந்தியர்களைத் தங்கள் ஆதிக்கத்துக்கு உள்ளாக்கி ஆட்சி செய்யத்தொடங்கினர். அவர்கள் இந்தியர்களுக்கு அளித்த 'இந்து' என்ற பெயரே நிலைத்துவிட்டது.

உண்மையில் இந்து மதத்தின் ஆதிப்பெயர் 'சநாதன மதம்'. அதன்

முக்கியத் தத்துவம் வைதீக மதம் அல்லது வேதத்தால் விளக்கப்பட்ட தத்துவம்.

வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சி செலுத்தியவர்கள் நாளாவட்டத்தில் இந்தியர்களுடன் கலந்து இந்து தத்துவத்தின் அடிப்படைக் கொள்ககளை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களது அன்னியத் தன்மை மறைந்து போய் விட்டது.

இந்துக்களால் பூசிக்கப்பட்ட தெய்வத்தின் பெயர் ஈசுவரன். ஈசுவரன் பரம புருஷன், எங்கும் நிறைந்தவர், முதலும் முடிவும் அற்றவர், உருவமற்றவர், நிறமற்றவர். அவர் படைப்பவர், எல்லாக் காரணங்களுக்கும் மூல காரணமானவர். அவர் எல்லையற்ற சக்தி வாய்ந்தவர். தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அவருக்கு வேறு எந்தப் பணியாளின் உதவியும் தேவைப்படாது.

அவர் தம் சக்தியின் பிரதிபலிப்பாகத் தெய்வீக மனிதர்களை உலகத்தின் பல பாகங்களுக்கும் அனுப்புகிறார். சில இந்திய மொழிகளில் அவர்கள் தேவதைகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

பக்தர்கள் ஈசுவரனைப் பூசிக்கிறார்கள். கோவில்களில் தேவதைகளின் வாழ்க்கை, பெருமை, உபதேசங்கள் இவற்றின் நினைவாக விழா கொண்டாடுகிறார்கள். தேவதைகள் தெய்வீக (அசாதாரண) சக்தி வாய்ந்த மனிதர்கள். ஆனால் அவர்கள் எவ்வாறு தோன்றுவார்கள் என்பது இடம், காலம் ஆகியவற்றையும் சமூகச் சூழலையும் பொறுத்த விஷயம்.

சாதாரண மக்கள் கோவில்களில் தேவதைகளின் உருவச் சிலைகளை அணுகுகிறார்கள். உருவச் சிலை என்பது பக்தர்கள் பூசிப்பதற்கான வெறும் கருவி மட்டுமல்ல; அது ஈசுவரத் தியானத்தை மனதில் ஒருமுகப்படுத்தும் மையமாகவும் செயல்படுகிறது.

வேதத்தைப் பயின்று அதன் உட்பொருளை உள்ளூரப் புரிந்து கொண்டவருக்கு, அதாவது மதத் தத்துவத்தை முழுமையாக அறிந்து கொண்டவர்களுக்கு, உருவ வழிபாடு தேவையில்லை. அவர் ஈசுவரனின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து விட்டார்.

ஈசுவரன் ஒருவரே பூசனைக்குறியவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் எங்கும் நிறைந்தவர், எல்லையற்ற சக்தி வாய்ந்தவர், உலகம், சூரிய மண்டலம் ஆகிய எல்லைகளைக் கடந்தவர். உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மனிதர் எல்லோரும் அவர் இருப்பதாக நம்பி அவரைப் பூசிக்கிறார்கள். ஈசுவரனை எந்தப் பெயரில், எந்த முறையில் அவர்கள் பூசித்தாலும் அவர் அதை ஏற்றுக் கொள்கிறார்.

சநாதன மதத்தின் தொடக்கக் காலத்தில் எல்லா இந்துக்களும் ஒரே ஈசுவரனை அல்லது கடவுளை நம்புபவர்களாக இருந்தார்கள். அவர்கள் மொகஞ்சதாரோவின் கவர்ச்சிகரமான நகரப் பண்பாட்டிலிருந்து உருவ வழிபாட்டைக் கற்றுக்கொண்டார்கள். மொகஞ்சதாரோ, ஹரப்பா வாசிகள் சூரிய தேவதை, சிவலிங்கம், அன்னை உருவம் மற்றும் சில மிருகச் சின்னங்களைப் பூசித்து வந்தார்கள்.

இந்த உருவ வழிபாடு மெசப்படோமியா (எகிப்து), சுமேரியா (பாரசீகம்) நாகரீகங்களின் தாக்கத்தின் விளைவு ஆகும். அந்தக் காலத்தில் மொகஞ்சதாரோ, ஹரப்பாவில் 'கியூனிபார்ம்' (cuneiform) எழுத்து செய்தித் தொடர்பு ஊடகமாக வழங்கி வந்தது. இந்த எழுத்து முறையில் பல உருவச் சின்னங்கள் பயன்படுத்தப்பட்டன. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகம் கி.மு 1475 க்கு முன்னால் உச்ச நிலையை எட்டியது. 1475ம் ஆண்டில் கடலின் ஆழத்தில் ஒரு பெரும் பூகம்பம் நிகழ்ந்ததாக இந்துப் புராணங்கள் கூறுகின்றன. அதன் விளைவாக மேலெழும்பிய பேரலைகள் சிந்து நதிக்கரையை மூழ்கடித்தன. மொகஞ்சதாரோ, ஹரப்பா பிராந்தியங்களைச் சேறு மூடிவிட்டது. ஒரு கண நேரத்தில் மனிதர்கள், விலங்குகள், மரங்கள், செடி கொடிகள் எல்லாம் அழிந்தன. தண்ணீர் பின் வாங்கிய பிறகு அந்த நகரங்களின் நாகரீகம் சேற்றுக்குக்கீழே சமாதியாகி விட்டது.

அந்த நகரங்களில் வீடு கட்டவும், பிற பொருள்கள் செய்யவும் மரம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாகக் காடுகள் பெரும்பாலும் அழிந்து விட்டன. காடுகளின் அழிவு இயற்கையின் சாபமாகி விட்டது, மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்தின் அழிவை விரைவுபடுத்தியது.

உருவ வழிபாடு என்பது உண்மையில் தேவதையின் வழிபாடு அல்லது வீரர் வழிபாடு. இந்தத் தேவதைகளும் உண்மையில் மனிதர்கள்தாம். அதனால்தான் ஒரு பிரதேசத்தில் தேவதைகளாக வழிபடப்படுபவர்கள் இன்னொரு பிரதேசத்தில் அவ்வறு பூசிக்கப்படுவதில்லை. எனினும், எந்த முறையில், எந்தப் பெயரில், எந்த மொழியில் பூசை செய்யப்பட்டாலும் ஈசுவரன் அதை ஏற்றுக்கொள்கிறார்.

வேத காலத்தில் வருணப் பிரிவுகள், பாலிய விவாஹம், உடன் கட்டை வழக்கம் ஆகியவை வழக்கில் இல்லை. எனினும் தொழில் அடிப்படையில் பிரிவுகள் இருந்தன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் குரு அல்லது ஆசிரியராகவும், இன்னொருவர் போர் வீரராகவும், வேறொருவர் கைவினைச் சிற்பியாகவும் இருக்க முடியும். இவ்வாறு வெவ்வேறு தொழில்களைச் செய்பவரிடையே திருமண உறவு நேர்வதுண்டு. ஒரு தொழிலைச் செய்பவர் வேறு ஒரு தொழிலை மேற்கொள்வதும் சாதாரண

நிகழ்ச்சியாக இருந்தது.

பெண்களும் ஆண்களுக்குச் சமமாக வேதம் பயின்றனர். சுபாலா, கோஷா, விசுவவரா, லோபாமுத்ரா , விசாகா முதலியவர்கள் வேத காலத்தின் முதல் பருவத்தில் வேத நிபுணர்களாகப் புகழ் பெற்றிருந்தார்கள். திருமண விஷயத்தில் பெண்களுக்குத் தங்கள் கணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை இருந்தது. அவர்கள் போர்க் கலையிலும் தேர்ச்சி பெற்று போர்களிலும் பங்கேற்றனர். உதாரணமாக, வேத காலத்தில் நடந்த ஒரு போரில் முத்கலனி என்ற ஒரு பெண்மணி படைத்தலைவியாகப் பணியாற்றினாள். பெண்கள் வாழ்கையின் எல்லாத் துறைகளிலும் தங்கள் கணவர்களின் துணைவிகள்ளாகச் செயல் பட்டனர்.

அடிப்படையில் இந்துக்கள் 'ஒரே கடவுள்' தத்துவத்தை நம்புபவர்கள். அவர் சர்வ சக்தி வாய்ந்தவர் என நம்புபவர்கள். தென்னிந்தியாவில் அவர் தேவன், தேவுடு, ஈசுவரன், கடவுள், இறைவன் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். இந்துக்கள் தேவதைகளை அசாதாரண சக்தி வாய்ந்த வீரர்களாகக்கருதிப் பூசிக்கிறார்கள். அவர்கள் ஈசுவரனிடமிருந்து ஒரு சில சிறப்புத் தன்மைகளைப் பெற்றிருப்பதாக நம்புகிறார்கள்.

புகழ் பெற்ற வரலாற்று நிபுணரும் எழுத்தாளருமான 'காலகூட்' தம் 'பிருதா' என்ற நூலில் கூறுவதாவது - 'இந்தியக் கணக்குப்படி கலியுகத்துக்கு 3179 வயது ஆகியிருந்தபொழுது சகாப்தம் (அதாவது கனிஷ்கரின் காலத்திலிருந்து) ஆண்டுக் கணக்கு தொடங்கியது. கி.பி 2007ம் ஆண்டு சகாப்தம் 1929. ஆகையால் இப்போது கலியுகத்தின் வயது சுமர் 5108 (3179+1929) ஆண்டுகள், அதாவது சுமார் 5000 ஆண்டுகள்." பிரும்மா, விஷ்ணு, மகேசுவரன் வெளிப்பட்டு சநாதன மதத்தைத் தொடங்கியபோது சத்திய யுகம் (கிருத யுகம்) தொடங்கிற்று. உலகத்தின் பரிணாம வளர்ச்சியில் நான்கு யுகங்களும் சக்கர முறையில் தொடங்குகின்றன - சத்திய யுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம். ஒவ்வொரு யுகத்தின் சராசரி வயது சுமார் 5000 ஆண்டுகள். ஆகையால் இப்போது சனாதன மதத்தின் வயது சுமார் 20,000 ஆண்டுகள்.

# இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகள்

1. பொது அறிவு பெற்றுக்கொள். அறியாமை இருளில் அமிழ்ந்திருப்பது பாவம். ஒவ்வொருவனும் ஆசையையும் பயத்தையும் துறந்து தன் கடமையை இயன்றவரையில் செய்ய முயற்சிக்க வேண்டும். நிலமைக்கேற்றவாறு இந்த முயற்சிக்கு நிச்சயம் பலன் கிடைக்கும்.
2. இரக்கத்தின் வெளிப்பாடு தானம். லாபத்தை எதிர் பாராமல் தகுதியான நேரத்தில், தகுந்த இடத்தில், தகுந்த பாத்திரத்துக்குச் செய்யப்படும் தானம் இரக்கத்தின் வெளிப்பாடு ஆகும். இத்தகைய தானம் ஈசுவரனுக்கு மகிழ்ச்சியளிக்கும்.
3. உடம்பு ஒரு படகு போன்றது. அதன் முதலும், முக்கியமுமான காரியம் வாழ்கைக் கடலின் மறு கரையிலுள்ள அமரத்துவத்திற்கு கொண்டு சேர்ப்பது.
4. இதயம், ஆத்மா மற்றும் எல்லா சக்தியோடும் ஈசுவரனை நேசிக்க வேண்டும். ஈசுவரனை அவமதிப்பவன் நீதியற்றவன். அவன் மனித இனத்துக்கும், மனிதத்துவத்துக்கும் சத்துரு.
5. கொலை, ஒழுக்கமின்மை, திருட்டு, பொய் பேசுதல், பிறன் சொத்தை அபகரித்தல் இவற்றால் ஈசுவரன் கோபப்படுகிறார். நல்ல முறையில், சொந்த உழைப்பால் வாழ்க்கை நடத்த வேண்டும். கபடமின்றி நடந்து கொள்ள வேண்டும்.
6. பிறரது தவறுகளையும், குற்றங்களையும் மன்னிப்பவரது தவறுகளையும், குற்றங்களையும் ஈசுவரன் மன்னிப்பார்.
7. துன்பம் ஏற்படும்பொழுது அதன் காரணங்களைத் தாக்கி அழிக்க வல்லதாக அறிவை ஆயுதம் போலத் தீட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.
8. பிரார்த்தனை செய்வதற்கு மந்திரம் அல்லது சுலோகம் தெரியாவிட்டால் பரவாயில்லை. தியானம் செய்யக் கற்றுக்கொள்ளவும் தேவையில்லை. கடவுளை நோக்கி இதயத்தைத் திறந்து வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தினாலே அவர் திருப்தி அடைகிறார். இதற்கு ஒரு புரோஹிதர் அல்லது பூசாரி கூடத் தேவையில்லை.
9. ஆத்மா அழிவற்றது; வாழ்வும், சாவும் சக்கரம் போலச் சுற்றி வருவன. சாவில் உடல் அழிகிறது, ஆத்மா அழிவதில்லை. ஆத்மாவை வாளால் வெட்ட முடியாது, தீயால் எரிக்க இயலாது. ஆகையால் எல்லையற்ற துணிவோடு நற்காரியங்களைச் செய்ய வேண்டும்.
10. நன்மை, தீமை இவற்றின் முடிவற்ற போரே வாழ்க்கை. நம் பேச்சாலோ, செய்கையாலோ எந்த ஒரு நல்ல மனிதருக்கும் தீங்கு நேரா்தவாறு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

11. கோபம், பொறாமை, பயம், சோகம் ஆகிய பயங்கர உணர்வுகளுக்கு அடிமைப்படக்கூடாது. கடவுளின் நெடுங்காலத் திட்டம் பற்றி நம்பிக்கையோடு இருக்க வேண்டும். இறுதியில் நன்மையே நேரும் என நம்ப வேண்டும்.

12. மனிதன் அம்மணமாகத்தான் உலகில் பிறக்கிறான். அவ்வாறே உலகிலிருந்து விடை பெறுகிறான். அவன் தன் குறுகிய ஆயுட்காலத்தில் தன் சுற்றுச் சூழலை உயர்த்த முயற்சி செய்ய வேண்டும். அவன் பிறந்தபோது அவனைச் சுற்றியிருந்த உலகம் எப்படி இருந்ததோ அதை விடச் சிறந்ததாக அவன் அதைச் செய்ய வேண்டும்.

13. பிரபஞ்சத்தில் எல்லாமே கடவுளின் படைப்பு. அவற்றைச் சரியான முறையில் பயன் படுத்தும் பொறுப்பும், உரிமையும் எல்லோருக்கும் உண்டு.

14. பத்து வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவனும் ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு முறை கடவுளைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். (காலையில் அன்றைக்காகத் திட்டமிடப்பட்ட காரியங்கள் வெற்றி பெறப் பிரார்த்தனை; மாலையில், பெற்ற வெற்றிகளுக்காகக் கடவுளுக்கு நன்றி) நிறைவேறாத காரியங்கள் பற்றித் தன்னையே விமரிசனம் செய்து கொண்டு, மந்திரங்களை உச்சரித்து கடவுளிடம் தன்னை சமர்ப்பணம் செய்து கொள்ள வேண்டும். வாரத்தில் குறைந்தது ஒரு நாளாவது ஒரு பொதுத் தொழுகையிடத்துக்குப்(கோயிலுக்கு) போய் சமூகத்தின் மற்ற உறுப்பினர்களோடு சேர்ந்து கொண்டு பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒரு புரோஹிதர் அல்லது குரு அந்தப் பிரார்த்தனையை நடத்துவார். அவர் கீதை அல்லது வேதத்திலிருந்து ஐந்து சுலோகங்களை எடுத்துக்கொண்டு அவற்றை விளக்குவார். அந்த விளக்கத்தின் மூலம் இன்றைய மனிதர்கள் அவற்றின் உட்பொருளை உணர்ந்துகொண்டு அதன் மூலம் பயனடைவார்கள். ஒவ்வொருவரும் தினம் குறைந்தது பத்து நிமிடங்கள் பிராணாயாமம் செய்ய வேண்டும். மாதத்தில் ஒரு நாள் 'போஜ் உற்சவம்' (பொது விருந்து) நடத்த வேண்டும், அல்லது பிறர் ஏற்பாடு செய்யும் பொது விருந்தில் கலந்து கொள்ள வேண்டும்.

* <u>போஜ் உற்சவம்</u>

பூர்ணிமையன்று பகலில் உண்ணாமலிருந்து விட்டு இரவில் நிலவில் மற்ற மனிதர்களுடன் இணைந்து விருந்து உண்டு மகிழ்வதே போஜ் உற்சவமாகும். தானே இத்தகைய உற்சவம் ஏற்பாடு செய்தாலும், பிறர் ஏற்பாடு செய்த உற்சவத்தில் கலந்து கொண்டாலும் ஒரே அளவு புண்ணியம் கிடக்கும்.

# ஸ்மிருதி சாத்திரம்

## (சாதாரணமாகக் கேட்கப்படும் கேள்விகளும் அவற்றின் பதில்களும்)

ஸ்மிருதி சாத்திரம் என்பது அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புள்ள கேள்வி-பதில்களின் தொகுப்பு. இதில் வெவ்வேறு இந்து சாத்திரங்கள் மற்றும் ரிஷிகளின் உபதேசங்கள், நினைவு (ஸ்மிருதி) மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. ஸ்மிருதி சாத்திரத்துக்குப் பல விளக்கங்கள் உள்ளன.

**கேள்வி 1** - கடவுள் நம்பிக்கைக்குச் சான்று எது?

**பதில்** - உண்மையாகக் கடவுளை நம்புபவனின் அன்றாட வாழ்க்கையிலேயே துணிவு இருக்கும். வாழ்க்கையில் துணிவு என்பது தேவைப்படும்போது மட்டும் அல்லது ஆபத்து நேரும்போது மட்டும் திடீரென்று தோன்றாது. துணிவை எவருக்கும் கற்றுக்கொடுக்க முடியாது. பழக்கம் இருந்தால்தான் வாழ்க்கைப் போரில் துணிவைக் காட்ட முடியும். துணிவு என்பது ஒரு மனிதனின் குணத்தின் ஒரு முக்கிய உறுப்பாகும். பிரார்த்தனை, கடவுளின் இச்சைக்கு முற்றிலும் சரணடைவது இவற்றால் துணிவு ஏற்படுகிறது. கடவுளின் சக்திக்கு மாறாக எதுவும் இருக்க முடியாது. கடவுளை நம்புபவனுக்கு இறுதியில் நல்லதே நேரும் என்று கடவுளை நம்புபவனுக்குத் தெரியும். உண்மையில் கடவுளிடம் நம்பிக்கை கொண்ட நல்ல மனிதன் பயத்தை வென்று துணிவோடு செயற்படுவான்.

**கேள்வி 2** - கடவுள் என்றால் என்ன?

**பதில்** - கடவுள் தான் ஈசுவரன். இந்து சாத்திரத்தில் அவர் 'ஓம்' என்ற அடையாளத்தால் குறிப்பிடப்படுகிறார். அவர் துண்டுபட மாட்டார், அவர் சர்வ சக்தியுள்ளவர், எதுவும் செய்ய வல்லவர், அவர் ஒருவரே, அவருக்கு இணை வேறு எவரும் இல்லை. எல்லாக் காரணங்களுக்கும் அவரே காரணர். அவர் சர்வ வல்லமை கொண்டவர். ஆதலால் அவருக்குத் தம் காரியங்களை நிறைவேற்ற வேறு எவருடய உதவியும் தேவையில்லை. அவர் ஆதி முதலே இருக்கிறார், அவருக்கு முடிவு இல்லை. அவருக்குப் பிறப்பதற்குத் தாய், தந்தை தேவைப்படவில்லை, ஆகையால் அவர் எந்தத் தாய், தந்தையிடமிருந்தும் தம் பெயரைப் பெறவில்லை. மனித பக்தர்கள் தாம் அவருக்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால்

கடவுள், பகவான், ஈசுவரன் என்ற பெயர்களுக்கு மதிப்பு எதுவும் இல்லை. அவரைப் பக்தர்கள் எந்தப் பெயரில் அழைத்தாலும் அவர் அந்தப் பெயரில் அவரவர்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொள்கிறார்.

**கேள்வி 3** - கடவுளுக்கும் தேவதைக்கும் இடையே என்ன வேற்றுமை ?

**பதில்** - கடவுள் துண்டு படாதவர், ஒருவர், சர்வ வல்லமை உள்ளவர், எல்லாக் காரணங்களுக்கும் காரணர். தேவதைகள் கடவுளால் உலகத்துக்கு அனுப்பப்பட்ட அவருடைய பிரதிநிதிகள் ஆவர். கடவுள் அன்பும், கருணையும் கொண்டு தம் பிரதிநிதிகளை உலகத்துக்கு அனுப்புகிறார். தேவதைகள் மனிதர்களின் போதகர்களாகவும், காப்பாளர்களாகவும் செயல்பட்டு தங்கள் உதாரணத்தின் மூலமாக மனிதர்களின் மனதின் இருளைப் போக்குகிறார்கள், உலகம் மனிதர்களின் வாழ்க்கைக்கு ஏற்றதாக, இன்னும் சிறந்ததாக ஆபத்தில்லாததாக ஆவதற்கு அவர்களுக்கு வழி காட்டுகிறார்கள். கடவுளின் பெருமை அவர்களிடம் பிரதிபலிக்கிறது. ஆகையால் தேவதைகளைப் பின்பற்றுபவர்கள் உண்மையில் கடவுளைப் பின்பற்றுபவர்கள் ஆவர். அத்தகையவர்கள் மனித உருக்கொண்ட தேவதைகளைக் கடவுளின் பிரதிநிதிகளாகப் பார்க்கிறார்கள். அந்த பக்தர்கள் தங்கள் நன்றியையும், பக்தியையும் பல வகைகளிலும் வெளிப்படுத்துகிறார்கள். சிலர் தேவதைகளைப் போல் சிலைகள் செய்கிறார்கள், சிலர் அவர்களைத் துதிக்கிறார்கள். சிலர் அவர்களைப் புகழ்ந்து பாடல்கள் இயற்றுகிறார்கள். தேவதைகள் கடவுளின் தூதர்கள், அவர்கள் கடவுளால் அன்போடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று அந்த பக்தர்கள் நம்புகிறார்கள். பக்தர்களின் மரணத்துக்குப் பிறகும் அவர்களுடைய பிரார்த்தனைகளைத் தேவதைகள் கேட்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது.

**கேள்வி 4** - கடவுள் பரமாத்மா என்றால், மற்ற தேவதைகளைப் பூசிப்பது அவரை அவமானம் செய்வது ஆகாதா?

**பதில்** - கீதை சொல்கிறது - கடவுள் பரமாத்மா, சர்வ வல்லமையுள்ளவர், அவர் பெரிய மகானாக இருப்பதால் பக்தர்கள் அவருக்குப் பதிலாக அவருடைய தூதர்களை, அதாவது தேவதைகளை, ஆராதித்தாலும் அவர் அதை அவமானமாகக் கருத மாட்டார்.

(உதாரணம்: ஒரு பெரிய மனிதரை அண்டியிருக்கும் மனிதர்களுக்கு ஒருவர் சிறிது மரியாதை காட்டினால் அதன் பொருட்டு அந்தப் பெரிய

மனிதர் சஞ்சலப்படமாட்டார். கடவுளோ எந்தப் பெரிய மனிதரையும் விடப் பல மடங்கு உயர்ந்தவர். அவரோடு ஒப்பிட்டால் மனிதன் அணுவை விட அற்பமானவன். இந்த அற்ப மனிதனின் நடத்தையால் அவர் தாம் அவமானம் அடைந்ததாக எண்ணுவாரா?)

எனினும், ஈசுவரனை (கடவுளை) ஆராதனை செய்தாலே சிறந்த பலன் கிடைக்கும். காலையில் முறைப்படி பலருடன் இணைந்து , மந்திரங்களை உச்சரித்துக் கடவுளை ஆராதிக்க வேண்டும். இதற்குத் தினம் பத்து நிமிடங்களே தேவைப்படும், ஆனால் இது மனிதனை வாழ்நாள் முழுதும் காப்பாற்றும், இப்பிறவிக்குப் பிறகு சுவர்க்கம் கிடைக்க வழி செய்யும்.

**கேள்வி 5 -** தன்னலம் மிக்க உலகம் நம் துக்கத்துக்குக் காரணம் ஆகிறது. இந்த நிலையில் முழுமையான ஆன்மீகத் தன்மை அடைவது எப்படி ?

**பதில் -** உலகத்தில் வாழ்க்கையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆன்மீகம், செயல் இவ்விரண்டின் பரஸ்பர ஒத்துழைப்பு தேவை. ஆன்மீகம் அல்லது தரும நெறி மற்றும் கடின உழைப்பு இவை மூலம் கடவுளுக்கு வானளாவும் கோயில் கட்ட வேண்டும். அந்தக் கோயிலில் கடவுள் தம் முழு மகிமையோடு வீற்றிருப்பார். கடவுள் ஒவ்வொருவருக்கும் இந்திரியங்கள், உணர்வு, பலம், நரம்பு மண்டலம், தசைகள், வளர்ச்சிகள், எல்லாவற்றுக்கும் மேலாக பகுத்தறியும் அறிவு இவற்றை அளித்திருக்கிறார். மனிதனின் செய்கைகள் மூலமாக உலகத்தை நல்ல முறையில் வாழ்வதற்கு ஏற்றதாகச் செய்வதே கடவுளின் நோக்கமாகும். யாராவது துன்பங்களின் காரணமாகத் தன் அன்றாடக் கடமை மற்றும் முயற்சியைக் கைவிட்டால் அது ஒரு பெரும் தன்னலமாகும். இதன் பலனாக அவன் கடவுளின் அன்பை இழந்து விடுவான். சூனிய உணர்வால் அமைதி கிடைக்கலாம், ஆனால் கடவுள் தியானத்தால் மட்டுமே முழுமை அடைய முடியும். கடவுளுக்கென்று ஒரு குறிப்பிட்ட உருவமோ, சிலையோ கிடையாது.

**கேள்வி 6 -** காலத்தின் தொடக்கத்தில் கடவுள் எப்படித் தோன்றினார் ?

**பதில் -** காலத்தின் தொடக்கத்தில் இருளுக்குள் இருள் மறைந்திருந்தது. எல்லாமே அலங்கோலமாக இருந்தது. எந்தப் பொருளும் முழுமையாக இல்லை. எங்கும் ஓர் எல்லையற்ற சூனியமே படர்ந்திருந்தது. இந்தப் பெரும் சூனியத்தால் சூழப்பட்டிருந்தவர் பின்பு வெளிப்பட்டார். அவர் தான் கடவுள். அவரது கருணையினால் தான் இந்த விசித்திர சிருஷ்டிகள் - அசையாப்

பொருள்கள், அசையும் பொருள்கள், காலால் நடப்பவை, நீரில் நீந்துபவை, வானில் பறப்பவை - எல்லாமே தோன்றின. இவற்றுக்குள் இருக்கும் சத்தியமே கடவுளின் வெளிப்பாடு ஆகும்.

**கேள்வி** 7 - கடவுளின் உண்மைப் பெயரென்ன ? அவரது படைப்பின் நன்மைக்காக அவர் அளிக்கும் அறிவுரை என்ன ?

**பதில்** - மருமத்துக்குள்ளே மறைந்திருக்கும் சத்தியப் பிரபஞ்சம் ஒரு கூட்டில் நிலை பெற்றிருக்கிறது. அங்கு தான் எல்லாமே சேர்ந்திருக்கின்றன. அங்கிருந்தே எல்லாம் வெளிப்படுகின்றன. தனியொருவராக உள்ள கடவுளுக்குப் பெயரெதுவும் இல்லை. பக்தர்கள் அவரை எந்தப் பெயரால் அழைக்கிறார்களோ, அந்தப் பெயரால் அவர் அவர்களுடைய பக்தியை ஏற்றுக்கொள்கிறார். அவருடைய பெருமையின் பிரதிபலிப்பாக அவரது தூதர்கள் அவரது படைப்பின் நலனுக்காக மனித உருவம் எடுத்துக்கொண்டு உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் அவதரிக்கிறார்கள். அவர்கள் தேவதைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். புண்ணியவான்கள் கடவுளை உள்ளூரப் பக்தி செய்கிறார்கள். தேவதைகளின் வாழ்க்கை, பெருமை, உபதேசங்கள் இவற்றைக் கொண்டாடிக் கோயில்களில் விழா நடத்துகிறார்கள்.

**கேள்வி** 8 - இந்துத் திருமணத்தில் சரியான முறை எது ?

**பதில்** - உண்மையான இந்துத் திருமணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே அந்தந்த நாட்டுச் சட்டப்படியும் அவரவரது ஆசாரத்துக்குரிய சடங்குகளாலும் நிகழ்த்தப்படுவதாகும்.

**கேள்வி** 9 - தினம் கோயிலுக்குப் போவது அவசியமா ? புரோகிதர் அல்லது பூசாரியின் கடமை என்ன ?

**பதில்** - தினமும் கோயிலுக்குப் போய் கடவுளிடம் கூட்டுப் பிரார்த்தனை செய்தால் மனோ பலம் கிடைக்கும். அதன் விளைவாகக் கடவுளின் பாதுகாப்பு கிடைக்கும். ஆனால் இதனால் மற்றக் காரியங்கள் தடை படலாம். ஆகையால் இது தேவையில்லை. வாரம் ஒரு முறை கோயிலுக்குச் சென்று கூட்டுப் பிரார்த்தனை செய்தாலே கடவுளின் அருளால் உலகப் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும். பூசாரி கூடியிருக்கும் பக்தர்களின் கூட்டுப் பிரார்த்தனையை நடத்துவார். கீதை/வேதம்/உபநிடதம் இவற்றிலிருந்து குறைந்தது ஐந்து சுலோகங்களைக் கூறி அவற்றின் பொருளை விளக்குவார். இதன் மூலம் பக்தர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு ஒரு வழி புலப்படும். பூசாரி இந்து சமயத்தின் நண்பராக இருக்க

வேண்டும். அவர் ஒரு வழி காட்டியாக இருந்து கொண்டு இந்து சமூகத்தின் தார்மீக முன்னேற்றத்துக்கும், வாழ்க்கையில் செல்வம், கல்வி, தேக ஆரோக்கியம் இவற்றின் முன்னேற்றத்துக்கும் பாடுபட வேண்டும். அவரும் அவரது குடும்பமும் வசதியாக வாழ்வதற்குப் போதுமான பொருளை மக்கள் கோயில் மூலமாக அவருக்குக் கொடுக்க வேண்டும். பக்தர்கள் தங்கள் வருமானத்தில் குறைந்த பட்சம் ஒரு சதவிகிதமாவது இவ்வாறு பூசாரிக்குக் கொடுக்க வேண்டும்.

**கேள்வி** 10 - தேவதைக்குப் பூசை செய்வதும், பூசாரிக்குக் காணிக்கை கொடுப்பதும் நமது கடமையா ?

**பதில்** - தேவதைக்குப் பூசை செய்வதை விட பிரார்த்தனை செய்வது அதிகப் பலன் அளிக்கும். பூசை செய்வது கட்டாயமல்ல. பூசாரியின் பொருள் தேவைகளை உணந்து கொண்டு பக்தர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு சத விகிதத்தைக் கோயிலுக்கோ அல்லது அது போன்ற தரும நிறுவனத்துக்கோ அளித்தால்தான் நல்ல கல்வியறிவு வாய்ந்தவர்கள் பூசாரி வேலைக்கு வருவார்கள். பூசாரி வசதியாக வாழ வகை செய்ய வேண்டும். தகுதி வாய்ந்த புரோகிதர் சமூக சேவை செய்து ஆசிரியராகவும் பணியாற்றினால் சமூகம் முன்னேற்றமடையும். பக்தர் பூசாரிக்காகக் கொடுக்கும் பொருளைப் போல் ஆயிரம் மடங்கு பொருளைக் கடவுள் பக்தருக்கு அளிப்பார்.

**கேள்வி** 11 - இந்துக்களின் ஈமச் சடங்குகள் எப்படி இருக்க வேண்டும் ?

**பதில்** - நெருப்பு பரமாத்மாவின் ஒரு உருவமாகக் கருதப்படுகிறது. ஆகையால் உடலைத் தீக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதன் மூலம் ஆத்மா பரமாத்மாவைப் போய்ச் சேர்கிறது. எனினும் இவ்விஷயத்தில் அந்தந்த நாட்டின் சட்டப்படி நடக்க வேண்டும்.

**கேள்வி** 12 - கணவன் மனைவிக்கிடையே இணக்கம் இல்லாவிட்டால் அதற்கான தண்டனை என்ன? ஒழுக்கமின்மைக்கு என்ன தண்டனை ?

**பதில்** - தம்பதியரிடையே இணக்கமின்மை நம்பிக்கைத் துரோகம் ஆகும். நம்பிக்கைத் துரோகத்தில் பல வகைகள் உண்டு. வேலை கொடுப்பவன் - வேலை செய்பவன், வரி கொடுப்பவன் - வரி வாங்குபவன், அரசு ஊழியன் - பொது மக்கள் இவ்வாறு வெவ்வேறு பிரிவினரிடையே நம்பிக்கைத் துரோகம் நேரலாம். இந்த வகைத் துரோகங்களுக்கு என்ன தண்டனையோ அந்த தண்டனையை

கணவன் - மனைவியரிடையே நிகழும் நம்பிக்கைத் துரோகத்துக்கும் கொடுக்கலாம். எல்லா விஷயங்களிலும் சட்டம் ஒரே மாதிரி செயல் பட வேண்டும்.

தாம்பத்தியத்தில் ஒழுக்கக் கேடு என்பது ஒருவர் மற்றவரை ஏமாற்றுவதாகும். அதற்குரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும்.

**கேள்வி** 15 - பொதுமக்களுக்காகக் கோயில் கட்டி அதைப் பராமரிப்பவன் சுவர்க்கத்தில் எவ்வாறு நடத்தப்படுவான் ?

**பதில்** - கோயில் கட்டி அதைப் பராமரிப்பதற்காகத் தன் பொருளையும், உழைப்பையும் அளிப்பவனுக்காகக் கடவுள் சுவர்க்கத்தில் தனி இடம் ஒதுக்கி வைக்கிறார்.

**கேள்வி** 16 - உலகத்தில் கடவுள், சைத்தான் இவர்களின் இடம் என்ன ?

**பதில்** - கடவுள் இன்பம், சைத்தான் துன்பம். கடவுள் பக்தர்கள் சுகமாக வாழ்கிறார்கள். பிறருடைய சுகத்துக்கு வழி செய்கிறார்கள். இறுதியில் எல்லையற்ற சுவர்க்கத்தை அடைகிறார்கள். சைத்தானின் தொண்டர்கள் வன்முறை மிக்க வெறுக்கத்தக்க வாழ்க்கை நடத்துகிறார்கள்; அவர்களோடு தொடர்பு கொள்ளுகிறவர்களும் இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். இறுதியில் சைத்தானின் தொண்டர்கள் நரகத்துக்குப் போகிறார்கள். சைத்தானைப் பின்பற்றுகிறவர்கள் கொள்ளையடித்துப் பிழைக்கிறார்கள். கடவுள் பக்தர்களோ உழைத்து வாழ்க்கை நடத்துகிறார்கள், கடவுளால் படைக்கப்பட்ட ஜீவராசிகளுக்குச் சேவை செய்கிறார்கள். சைத்தான் என்பவன் மனிதனின் கற்பனையில் பிறந்த ஒரு கொடியவன். அவனைக் கடவுளுக்குப் போட்டியாகக் கருதுபவர்கள் கடவுளை அவமதிப்பவர்களாக ஆவார்கள். கடவுள் சர்வ வல்லமையுள்ளவர், அவரது விருப்பத்துக்கு அடங்காதது எதுவுமில்லை; இவ்வாறு இருக்கையில் சைத்தானை கடவுளுக்குப் போட்டியாகக் கருதுவது கடவுளை அவமதிப்பதாகும்.

**கேள்வி** 17 - பூசாரி பிரும்மச்சாரியாக (திருமணமாகாதவராக) இருக்க வேண்டுமா ?

**பதில்** - பூசாரி நன்கு கற்றவராக, அறிவொளி பெற்றவராக, தன்னலம் அற்றவராக, நல்ல உணர்வுகள் உடையவராக, பக்தர்களின் பிரச்னைகளைப் பொறுமையோடு கேட்கக் கூடியவராக இருக்க வேண்டும். துன்புற்றவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும், அவர்களுக்கு நிம்மதி அளிக்கவும் வல்ல அறிவும்,

செயல் திறனும், சமூகத்தில் செல்வாக்கும் பூசாரிக்கு இருக்க வேண்டும். தோத்திரங்களைப் பாடுவதற்கேற்ற இனிய குரலும் அவருக்குத் தேவை. அவர் பிரும்மச்சாரியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பிரும்மச்சரியம் என்பது ஒரு வகை வாழ்க்கை நோக்கு, அவ்வளவுதான். கோயில் காரியங்களை நடத்துபவருக்குப் பிரும்மச்சரியம் தேவையில்லை. பிரும்மச்சரியத்தைக் கடைபிடிப்பதற்காக மனதாலும், உடலாலும் பெரும் அழுத்தத்தைச் சமாளிக்க வேண்டும். இது மனிதனுக்கு மனச் சோர்வையும் உடற் சோர்வையும் உண்டாக்கி, அவனைக் குழம்பச் செய்து, தவறான வழியில் செல்லத் தூண்டி விடலாம்.

**கேள்வி** 18 - சாத்திரங்களையும் சமய நூல்களையும் ஏன் பயில வேண்டும் ?

**பதில்** - எல்லா சாத்திரங்களும் கடவுளின் தூண்டுதலால் இயற்றப்பட்டவை. சாத்திரப் பயிற்சி வாழ்க்கையின் இலட்சியத்தைத் தேடி அடைய உதவுகிறது, தவறாக முடிவுகள் எடுக்காமல் காப்பற்றுகிறது, மறு உலகம் செல்ல வகை செய்கிறது.

**கேள்வி** 19 - கடவுள் மனிதனுக்குத் துன்பங்களையும், விபத்துக்களையும் ஏன் கொடுக்கிறார்?

**பதில்** - கடவுள் மனிதனுக்குக் கை கால்கள் கொடுத்திருக்கிறார். அறிவும், விவேகமும் அளித்திருக்கிறார். துன்பம், விபத்து ஏற்பட்டால் சில மனிதர்கள் இடிந்து போகிறார்கள், கடவுளிடம் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். துன்பம், விபத்து நேரிடும்பொழுதுதான் கடவுள் நம்பிக்கை சோதிக்கப்படுகிறது. பெரும்பாலான துன்பம், விபத்துக்களுக்குக் காரணம் மனிதனின் உணர்ச்சி வசப்பட்ட நடத்தை. சமூக நிலைமை, அவனுடைய அறியாமை அல்லது அவனுடைய செய்கைகளின் விளைவு. மனிதன் துன்பம், விபத்து இவை நேரும்போதும் கடவுள் நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும், இன்னும் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும்.

**கேள்வி** 20 - கெட்ட காரியங்களைச் செய்பவன் சுகமாக வாழ்கிறான். அப்படியிருக்க மனிதன் நல்லவனாக இருக்க வேண்டும் என்று சொல்வானேன் ?

**பதில்** - கெட்ட காரியங்களைச் செய்பவன் இரவில் உறக்கமின்றித் தவிக்கிறான். நல்லவன் நன்றாக உறங்குகிறான். ஒழுக்கமுள்ள நல்ல மனிதன் உண்மையில் சுகமாக வாழ்கிறான். அவனுடைய குழந்தைகள் நல்ல பேறு பெற்றவர்கள். அவர்கள் தாய், தந்தையரிடம் மரியாதையாக இருக்கிறார்கள். கெட்டவன்

நரகத்துக்குப் போகிறான்.

**கேள்வி** 21 - பெரும் புகழ் அடைய விரும்புபவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ?

**பதில்** - சிறந்த செயல் செய்ய விரும்புபவர்களுக்குத் தன்னலமிக்க, பொறாமைக்கார, சோம்பேறி மனிதர்களிடமிருந்து பல தடைகள் வரக்கூடும். புகழை விரும்புபவன் தன் இலக்கில் உறுதியாக இருந்து கொண்டு கடவுளிடம் "நான் உனக்கு அதிருப்தி ஏற்படும்படி எத்தகைய காரியமும் செய்யாதிருக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். அவன் சச்சரவுகளில் ஈடுபடக்கூடாது. சச்சரவுகளில் ஈடுபடுவது கடவுளுக்குப் பிடிக்காது.

**கேள்வி** 22 - சமூகத்திலும், குடும்பத்திலும் பெண்ணின் இடம் எவ்வாறு இருக்க வேண்டும் ?

**பதில்** - பறவை பறப்பதற்கு இரண்டு சிறகுகள் வேண்டும். அது போல் குடும்பத்தின் சுகத்துக்கும், முன்னேற்றத்துக்கும் சமூகத்திலும், வாழ்க்கையிலும், சட்டத்திலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை இல்லாத குடும்பத்துக்குக் கடவுள் சுகம் அளிப்பதில்லை.

**கேள்வி** 23 - துறவு கடவுளுக்கு மகிழ்ச்சி அளிக்கிறதா ?

**பதில்** - துறவு என்றால் ஒருவன் தன் ஆன்மீக முன்னேற்றத்துக்காக உலக விஷயங்களோடு தொடர்பைத் துறப்பது என்று பொருள். இது உலகத்தின் தேவைகளை மறுக்கும் 'ஆன்மீக சுயநல'மாகும். ஒவ்வொரு மனித சமூகத்திலும் ஒரு சில சிறப்பு அமைப்புகள் உள்ளன. இந்த அமைப்புகளின் விளைவாக, ஒருவன் தன் நலத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்போதும் பிறருடைய நலத்தைக் காப்பாற்ற ஆர்வம் ஏற்படுகிறது. உண்மையில் பிறரது நலத்தைக் காப்பாற்றாமல் ஒருவன் தன் நலத்தையும் காப்பாற்றிக்கொள்ள இயலாது. சமூகத்தின் மொத்த நலம் மனிதனுக்குத் தன் நலத்தையும் பிறர் நலத்தையும் காப்பாற்றும் வழியைக் காண்பிக்கிறது. ஒரு மனிதனின் குறுகிய தன்னலங்கூட அவனுடைய குழந்தைகள் நலம், குடும்பத்தின் நலம், அக்கம்பக்கத்தாரின் நலம், நாட்டின் நலம், உலகத்தின் நலம் இவற்றுடன் சேர்ந்து ஒன்றாகி விடுகிறது. உலகத்தில் செயலே ஒரு பூசை ஆகும். அதனால் தான் கடவுள் மகிழ்ச்சி அடைகிறார். துறவு என்பது தன்னலம் நிறைந்த 'ஓடித் தப்பிக்கும்' மனப்போக்கைக் காட்டும். நம்முடைய அன்புக்குரிய தேவதைகள்

எவரும் துறவு மேற்கொள்ளவில்லை. அவர்கள் குடும்பம் நடத்தியே மனித குலத்துக்கு நன்மை செய்தார்கள்.

**கேள்வி** 24 - பிரும்மச்சரியம் என்பது என்ன ?

**பதில்** - தன்னடக்கமும் இலக்கில் முழு ஈடுபாடுமே பிரும்மச்சரியம் ஆகும். காம உணர்வைக் கட்டுப்படுத்துவது மட்டுமே பிரும்மச்சரியம் ஆகாது. காம உணர்வு கடவுளின் கொடைகளில் ஒன்று. அதை எல்லை மீறாமல் சமூக நியமப்படி அனுபவித்தால் சுவர்க்க சுகத்தைப் பெறலாம். கீதையில் இதற்குத் தெளிவான விளக்கம் இருக்கிறது.

**கேள்வி** 25 - பிரும்மச்சரியம் ஏன் தேவை ? யாருக்குத் தேவை ?

**பதில்** - தன் இலக்கில் ஒரே குறியாக இருப்பதாக விரதம் மேற்கொள்பவன், வாழ்க்கையின் எல்லா ஆசைகளிலிருந்தும் விலகியிருக்க முடிவு செய்தவன் எல்லாப் புலன்களின் தேவைகளையும், அன்றாடத் தேவைகளையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். உலக சுக போகங்களையும் புலன்களின் தேவைகளையும் துறப்பதன் ஒரு பகுதியே பிரும்மச்சரியம். மாணவப் பருவத்தில் கல்வியில் குறியாக இருக்க வேண்டும். இதற்கு பிரும்மச்சரியம் உதவி செய்கிறது. ஆகையால் மாணவப் பருவத்தில் பிரும்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம்.

**கேள்வி** 26 - குடும்பத்தைத் துறந்து துறவு மேற்கொள்ளுவது நமது கடமையா?

**பதில்** - ஆன்மீக நலனுக்காக ஆன்மீகச் செயல்களில் ஈடுபடுவதை விட முழு ஈடுபாட்டுடன் தன் சமூகக் கடமைகளை நிறைவேற்றுவது தான் சிறந்தது. தன் கடமைகளை மறந்து வெறும் ஆன்மீகச் செயல்களில் ஈடுபடுவது விரும்பத்தக்கது அல்ல. அது ஆன்மீக ஆடம்பரமாகும். அது தன்னலத்தின் உச்ச நிலை. அதன் மூலம் கடவுளுடைய சேவை நடைபெறாது.

**கேள்வி** 27 - எல்லோரும் கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டுமென ஏன் கடவுள் விரும்புகிறார் ?

**பதில்** - கட்டுப்பாடு ஒரு கடினமான பயிற்சி. கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பவர் கடவுளின் உலகத்தை இன்னும் அழகு படுத்துவதில் உதவி செய்கிறார். அவருக்குப் புண்ணியம் கிடைக்கிறது. அவர் உலக வாழ்க்கையில் வெற்றியையும், அமைதியையும் பெறுகிறார். கட்டுப்பாடுள்ள மனிதனைக் கடவுள் நேசிக்கிறார்.

**கேள்வி 28 -** நிலைமை மாறும்போது மனிதனும் ஏன் மாறுகிறான் ?

**பதில் -** உண்மை நிலையின் தேவைக்கேற்பத் தன் மனப்போக்கை மாற்றிக்கொள்ளும் திறன் படைத்தவனுக்குக் கடவுளின் உலகம் சொந்தமாகி விடுகிறது. அத்தகைய அறிவு பெற்றவனைக் கடவுள் நேசிக்கிறார். வாழ்க்கையில் ஒன்றும் சாதிக்காதவர்கள் ஏதோ சிறிதேனும் சாதித்தவர்களைக் குறை கூறும் தகுதி அற்றவர்கள். மனித வாழ்க்கையில் மாறுதல் என்பது துருவ நட்சத்திரம் போல் சத்தியம். அதை மறுப்பது முட்டாள்தனம், துன்பம் தருவதும் கூட. உலகின் மாறுதல்களுக்கேற்றவாறு மனிதனும் தன்னை மாற்றிக்கொண்டு இன்னும் உயர முயற்சிக்க வேண்டும். இதற்குப் பிரார்த்தனையும் உழைப்பும் தேவைப்படும்.

**கேள்வி 29 -** நாக்கை அடக்குவது எப்படி ?

**பதில் -** சரியான இடத்தில் சரியான பேச்சுப் பேசுவது மட்டும் முக்கியமல்ல. தூண்டப்பட்ட போதும் தவறான நேரத்தில் தவறான பேச்சுப் பேசாதிருப்பதும் முக்கியம். கேட்பவனுக்குப் பிடிக்காத உண்மையைப் பேசினால் கேட்பவனுக்குக் கோபம் வரும். தன்னை விட மேல் நிலையில் உள்ளவனிடம் மரியாதை காட்டும்போது நாவடக்கம் அவசியம். இல்லையேல் இன்னல் பின்தொடரும். பிறகு அதற்காகக் கடவுளைப் பொறுப்பாக்குவது உசிதம் அல்ல.

**கேள்வி 30 -** வாழ்க்கை நடத்தப் பொருளீட்டுவதற்காக ஆபத்தான காரியங்களில் ஈடுபடலாமா?

**பதில் -** முயற்சி தோல்வியுற்றால் நம்பிக்கை இழப்போம். ஆனால் முயற்சியே செய்யாவிட்டால் நம்பிக்கை உண்டாகும் வாய்ப்பே இருக்காது. தோல்வி நேர்ந்தால் காரியம் வீணாயிற்று என்று பொருளல்ல. நம்முடைய காரியங்கள் மூலமே உண்மையில் நாம் யார் என்ற விஷயம் உறுதிப்படும். அதே போல் நம்மால்தான் நம் காரியங்களின் தன்மையும் அறியப்படுகிறது. கடவுளிடம் நம்பிக்கை உள்ளவர்கள் வாழ்க்கை நடத்தப் பொருளீட்டுவதற்காக்த் தங்கள் விவேக உணர்வோடு செயற்பட்டு ஆபத்தையும் எதிர் கொள்வார்கள்.

**கேள்வி 31 -** துணிவு என்பது என்ன ?

**பதில் -** துணிவு என்பது பயத்தை எதிர் கொண்டு வெற்றி கொள்வது. வெறும் அச்சமின்மை மட்டும் துணிவு ஆகாது. துணிவு கடவுளிடம் பக்தி இருப்பதன் அடையாளம்.

**கேள்வி 32 -** தோழனை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் ?

**பதில் -** நல்ல அறிவுள்ளவன் அறிவுள்ளவனைத் தோழனாகக் கொள்வான். மூர்க்கர் தோழமை அழிவுக்குக் காரணமாகும். சமூக இன்ப துன்பங்கள் பெரும்பாலும் தோழனைத் தேர்ந்தெடுப்பதைச் சார்ந்தே உள்ளன. அநியாயம் செய்பவன், சோம்பேறி, மூடன் இவர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும். இல்லையேல் நமக்குக் கடவுளின் ஆசி கிடைக்காது.

**கேள்வி** 33 - கடவுள் யாரை வாழ்க்கையில் வெற்றி பெறச் செய்கிறார் ?

**பதில் -** வெற்றிக்குக் கொடுக்கப்படும் விலை கடுமையான உழைப்பு. ஒருவன் தான் தொடங்கும் காரியத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அவனுக்கு வெற்றியோ தோல்வியோ எது நேர்ந்தாலும் தான் இயன்றவரை முயற்சி செய்யும் உறுதி இருக்க வேண்டும். எப்போதும் நல்ல பலனையே எதிபார்க்கக்கூடாது.; ஏனெனில் காரியத்தின் பலன் விதியின் நியமப்படி பல சக்திகளின் சேர்க்கையால் நிர்ணயிக்கப்படுகிறது.

**கேள்வி** 34 - மிருக வதை சமயத்தால் அனுமதிக்கப்படுகிறதா ?

**பதில் -** தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவும், உணவுக்காகவும் குறைந்த அளவு மிருக வதையை மதம் அனுமதிக்கிறது. அனால் அதை விட அதிகமான வன்முறை பாவமாகும். புலி, பல்லி, சிலந்தி போன்ற ஜீவராசிகள் பிற ஜீவன்களைக் கொன்று தின்று வாழ்கின்றன. உணவுக்காக ஜீவன்கள் கொலை செய்யப்படுவதைக் கடவுள் விரும்பவில்லையெனில் அவர் புலி, சிங்கம், சிலந்தி போன்ற ஜீவராசிகளைப் படைத்திருக்கமாட்டார்.

**கேள்வி** 35 - கணவனின் மரணத்துக்குப் பிறகு இந்துப் பெண் மறுமணம் செய்து கொள்ளலாமா?

**பதில் -** கணவனின் மரணத்துக்குப் பிறகு இந்துப் பெண்ணின் மறுமணம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(உதாரணம் - அத்தினாபுர அரசன் விசித்திர வீரியன் அகால மரணமடைந்தபோது அவனுடைய தாய் சத்தியவதி தன் உறவுமுறை மகனான பீஷ்மனை அழைத்து விசித்திர வீரியனின் மனைவியர் அம்பிகா, அம்பாலிகா ஆகியோருடன் உடலுறவு கொள்ளச் சொன்னாள். ஆனால் பீஷ்மர் வாழ்நாள் முழுதும் பிரும்மச்சரிய விரதம் பூண்டிருந்ததால் சத்தியவதியின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. பிறகு சத்தியவதியின் இன்னொரு மகன் வியாசர் தாயின் கட்டளைப்படி அந்தப் பெண்களுடன் உடலுறவு கொண்டார். இதன் விளைவாக

அம்பிகாவிற்கு திருதராஷ்டிரனும் அம்பாலிகாவிற்குப் பாண்டுவும் பிறந்தார்கள். இதிலிருந்து கணவனின் மரணத்திற்குப் பிறகும் மனைவியின் இல்லற உறவு அனுமதிக்கப்படுகிறது என்று தெரிகிறது.

**கேள்வி** 36 - என் தோழன் ஒரு பாவம் செய்தான் என்பது எனக்குத் தெரிய வந்தால் நான் அவனுடைய நட்பைத் துறக்க வேண்டுமா ?

**பதில்** - ஆபத்துக் காலத்தில் நண்பனைத் துறக்காமல் அவனுக்கு உதவி செய்வதே உசிதம். அவன் பாவியாயிருந்தாலும் அவனுக்கு உதவியாக இருந்து அவன் மேலும் பாவம் செய்யாமல் தடுக்க வேண்டும். அவ்வாறு அவனைத் தடுக்க இயலாவிட்டால் அவனைத் துறப்பதே கடவுளுக்குப் பிரியமானது.

**கேள்வி** 37 - தார்மீக வாழ்க்கை வாழ விரும்புபவன் கடுமையாக உழைத்து வாழ வேண்டுமா அல்லது பிச்சையெடுத்துப் பிழைக்க வேண்டுமா ?

**பதில்** - உடல் வலிமையுள்ள ஒவ்வொருவனும் தனக்காகவும், பிறருக்காகவும் உழைத்து வாழ வேண்டும் என்பதே உலக வாழ்க்கையின் விதி. பிச்சையெடுத்துப் பிழைக்காமல் தன் உழைப்பால் பொருளீட்டிக்கொண்டு வாழ்பவனையே கடவுள் நேசிக்கிறார். பிச்சையெடுப்பது கடவுள் மனிதனுக்களித்துள்ள உடல் வலிமையையும் மன வலிமையையும் கேலி செய்வதாகும். வறுமையின் வேதனையைப் புரிந்து கொள்வதற்காக சிறிது காலம் பிச்சையெடுக்கலாம். அது பிச்சையெடுப்பதாகாது. அது வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள ஒரு பயிற்சி மட்டுமே ஆகும்.

**கேள்வி** 38 - நமக்கு உணவு அளிப்பவனிடம் (அதாவது நமக்கு வேலை கொடுப்பவனிடம்) எப்படி நடந்து கொள்ள வேண்டும் ?

**பதில்** - நமக்கு உணவு அளிப்பவனிடம் நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவனுக்கு எதிராகக் கலகம் செய்வது கடவுளுக்குப் பிடிக்காது.

**கேள்வி** 39- பொறாமையை வெல்வது எப்படி ? எவ்வாறு வரங்களை வேண்டிக்கொள்ள வேண்டும் ?

**பதில்** - பணக்காரன் தன்னை விடக் குறைந்த செல்வம் பெற்றவர்களையும், ஏழைகள் தங்களை விட ஏழைகளாக இருப்பவர்களையும் பார்க்க வேண்டும். அப்போது கடவுள் நம்மிடம் கருணை காட்டுவது புரியும், பொறாமை விலகும். நீ உனக்கு எது நல்லது என்று நினைக்கிறாயோ அதற்காகப் பிரர்த்தனை செய்யாமல், கடவுள் உனக்கு எது நல்லது என்று

நினைக்கிறாரோ அதை உனக்கு அளிக்க வேண்டிக்கொள்.

**கேள்வி** 40 - அறினவத் தேடுவதன் பலன் என்ன ?

**பதில்** - அறிவைத் தேடுவதற்காக உலகத்தின் இறுதி எல்லை வரை சென்று வரலாம். அறிவை சம்பாதிப்பதற்காகத் தம் வாழ்க்கயைப் பயன் படுத்துபவரே கடவுளுக்குச் சேவை செய்பவராவார். பிறந்ததிலிருந்து சாவு வரை அறிவைத் தேட வேண்டும். கடவுளைப் புரிந்து கொள்வதற்காக அவர் படைத்த உலகத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, ஒவ்வொரு தார்மீக மனிதனும் அறிவை சம்பாதிக்க வேண்டும். அறிவு தான் மனிதனுக்கு எது தக்கது, எது தக்கதல்ல என்பதைப் போதிக்கிறது, இம்மைக்கும் மறுமைக்கும் ஆன சரியான வழியைக் காட்டுகிறது. அறிவு பெற்ற மனிதனின் அறிவு சமூகத்தின் உயர்வுக்காக செலவிடப் படும்போது தான் அந்த அறிவு பலன் பெற்றதாகும்.

**கேள்வி** 41 - செல்வம் ஈட்டிய மனிதன் அகம்பாவக்காரனாகி விடுகிறான். பணம் சேர்க்க முயற்சி செய்வது பாவமா?

**பதில்** - ஒரு காரியம் எந்த நோக்கத்தோடு செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்தே அதன் தன்மை நிச்சயிக்கப்படுகிறது. கடுமையாக உழைத்து நல்ல வழியில் பொருள் ஈட்டு, ஆனால் அதில் அதிக ஆசை வைக்காதே, ஏனெனில் உலகத் தாயை மேலும் வளப்படுத்துவதற்காகத் தான் கடவுள் உன்னை உலகுக்கு அனுப்பியிருக்கிறார். உன் வாழ்வில் நிகழ்வதெல்லாம் உன் செய்கைகளின் விளைவுதான். நீ தவறு செய்தால் உடனே கடவுளிடம் அதற்காக மன்னிப்பு வேண்டு. கெட்ட வழியில் ஈட்டிய செல்வத்தைத் திருப்பிக் கொடுத்து விடு.

**கேள்வி** 42 - ஒரு கோயிலில் தலைமைப் பூசாரியாக இருப்பவர் பிரும்மச்சரியம் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமா ?

**பதில்** - இல்லை, அவசியமில்லை. மாணவப் பருவத்தில் பிரும்மச்சரியம் அவசியம், ஏனெனில் அது கல்வியில் மனதை ஒருமுனைப் படுத்த உதவுகிறது. இளமைப் பருவத்தில் பிரும்மச்சரியம் மனதுக்கு அதிக அழுத்தத்தை உண்டாக்குகிறது. அதனால் சாதாரண வாழ்க்கையிலும் வழி தவற வாய்ப்பு ஏற்படுகிறது. இந்துக்களின் முக்கியக் கடவுள்களான கிருஷ்ணனோ, சிவனோ பிரும்மச்சரியம் அனுஷ்டிக்கவில்லை, மற்றவர்களை பிரும்மச்சரியம் கடைப்பிடிக்கும்படி கூறவும் இல்லை.

**கேள்வி 43 - இந்துக்கள் பிச்சையிடுவது அவசியமா ?**

**பதில் -** பிச்சையிடுவது நல்ல செயல் தான். ஆனால் அது கட்டாயமல்ல. தர்மத்தின் தத்துவங்கள் இந்தக் காலத்துக்கு மட்டும் பொருந்துவன அல்ல. அவை எல்லாக் காலத்துக்கும் பொருந்தும். கடவுள் இந்துக்களிடம் கருணை கொண்டிருக்கிறார். பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. செல்வம் வளர்வதற்காக எல்லோரும் உழைக்க வேண்டும்; அதன் மூலம் செல்வம் பெருகும்.பிச்சையெடுக்கும் தேவை மறைந்துவிடும். எனினும் ஒவ்வொரு இந்துவும் சமூகத்தின் நலனுக்காகவும், கோயில்களின் பராமரிப்புக்காகவும் தன் வருமானத்தில் நூறில் ஒரு பகுதியைத் தானம் செய்ய வேண்டும்.கடவுள் எல்லோருக்கும் உலகத்தின் எல்லாச் செல்வத்திலும் சம உரிமை அளித்திருக்கிறார். எனினும் தன் குண நலன்களாலோ அல்லது பிறப்பின் காரணமாகவோ அதிக இன்பம் அனுபவிக்கும் வாய்ப்புப் பெற்றவன் தன் வருமானத்தின் நூறில் ஒரு பகுதியைத் தானம் செய்தால் கடவுள் அவன் அதிக இன்பம் அனுபவிப்பதைக் குற்றமாகக் கொள்ள மாட்டார்.

**கேள்வி 44 -** அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றி இந்து சமயம் என்ன செய்ய வேண்டும் ?

**பதில் -** தேவதைகள் கடவுளின் அறிவுரைகளை வெளிப்படுத்துகிறார்கள். கடவுள் மனிதனுக்கு அளித்துள்ள கொடைகள் அறிவியல் மூலம் வெளிப்படுகின்றன. அறிவியலின் கண்டுபிடிப்புகள் இயற்கைக்குள்ளே ஏற்கனவே இருந்தன. அறிவியல் அவற்றை வெளிப்படுத்துகிறது, அவ்வளவுதான். இந்து சமயத்தின் அறிவுரைகளும், அறிவியலின் வெளிப்பாடுகளும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் தான். உதாரணமாக, அதர்வண வேதத்தில் 19/6/2/3-5 சுலோகங்களில் 'ஆகாயத்தின் பெண் இரவின்' வர்ணனையில் அதன் காவலாளிகளின் எண்ணிக்கை நேர் ஏறு வரிசையில் (arithmetic progression) "99,88,77,66,55, 44,33,22" என்று இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்யபட்ட சித்தாந்தம், பிரம்மஸ்புட சித்தாந்தம், சித்தாந்த சேகர், லீலாவதி முதலிய இந்திய கணித சாத்தீரங்களில் இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. n- எண்ணிக்கையுள்ள எண்களின் கூட்டுத் தொகைக்கான சூத்திரமும் பிரும்ம குப்தரின் பிரும்மஸ்புட சித்தாந்தத்தின் கணித அத்தியாயத்தின் 17ம் சூத்திரத்தில் உள்ளது.

पदमेकहीनमुत्तरगुणिता संयुक्तमादिनाऽन्त्यधनम्
आदियुतान्त्यधनार्धं मध्यधनं पदगुणनं गणितम् ॥

– ब्रम्हगुप्त

– ब्राम्हस्फुटसिश्वन्त गणिताध्याय, १७ सूत्र ॥

பதமே கஹீன முத்தர குணிதா சம்யுக்த மாதீனந்த்ய தனம்;
ஆதியுதாந்த்ய தனார்தம் மத்யதனம் பதகுணனம் கணிதம்.

இந்த சூத்திரப்படி n ஆவது எண் $t_n = [a+(n-1)b]$

நடு எண் $M_n = \frac{2a-(n-1)b}{2}$

கூட்டுத்தொகை $S_n = n/2[2a+(n-1)b]$

இந்து சமூகம் எல்லா அறிவியல் கண்டுபிடிப்புக்களையும் ஏற்றுக்கொண்டு தன்னுடையதாக்கிக் கொள்கிறது. இத்தகைய சமநிலை பெற்றிருப்பதால்தான் இந்து சமயம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெளி எதிரிகளின் ஆக்கிரமிப்பு, சமூகக் குழப்பங்கள் இவற்றை எதிர் கொண்டு தீவிர ஈடுபாட்டுடன் தன் இருப்பை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. அறிவியல் கண்டு பிடிப்புகளும் அவற்றுக்கு ஏற்ற வாழ்க்கை முறையும் இந்து வாழ்க்கையில் எல்லையற்ற முக்கியத்துவம் பெற்றுள்ளன.

**கேள்வி** 45 - இந்துப் பூசாரி எத்தகைய உடை அணிய வேண்டும் ?

**பதில்** - தற்காலத்தில் பணி செய்வதற்கேற்ற எந்த உடையும் பொருத்தமானது தான். கிருஷ்ணர் காலத்தில் வேட்டியும், மரத்தாலான காலணியும் அணியப்பட்டன. பூசாரிகளும் அவற்றையே பயன்படுத்தினர். வேலை செய்வதற்கு வசதியான உடைகள் இப்போது உபயோகத்துக்கு வந்து விட்டதால் பூசாரிகளும் தற்போதைய உடைகளை அணியலாம்.

**கேள்வி** 46 - பூசாரி கால் சட்டை, கோட்டு போன்ற அனைத்து நாட்டு உடைகளை அணியலாமா ?

**பதில்** - வேலை செய்வதில் அவசரம் தேவைப்படும்போதும் அதிகக் குளிரான இடங்களிலும் கால் சட்டை, கோட்டு உபயோகப்படும். வெப்பமான இடங்களில் நிதானமாகப் பணி புரிவதற்கு வேட்டியும் செருப்பும் ஏற்றவை. எனினும் பூசாரியின் (அல்லது குருவின்)

அறிவு, அவர் அளிக்கும் அறிவுரைகள், அவர் மூலம் மனிதர்களுக்குக் கிடைக்கும் லாபம் இவற்றைக் கொண்டே அவரது மதிப்பு தீர்மானிக்கப் படுகிறது. மேற்சொன்ன தன்மைகளில் எதுவும் அவர் அணியும் உடையைச் சார்ந்ததல்ல.

**கேள்வி** 47 - இந்துவின் சமய, சமூக, பண்பாட்டு வாழ்க்கையில் அவனுடைய சொந்த உடையான வேட்டியின் தாக்கம் எப்படிப்பட்டது ?

**பதில்** - வேட்டி மலிவாகவும் எளிய வாழ்க்கை முறையைக் காட்டுவதாகவும் உள்ளது. ஆனால் வேட்டி அணிந்த மனிதன் வேகமாக இயங்கவோ, செல்லவோ இயலாது. தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தன் உடலுறுப்புக்களை வேகமாக இயக்கவும் இயலாது. வேட்டியணிந்த இந்துக்கள் கால் சட்டையணிந்த மத்திய ஆசிய வாசிகளின் தாக்குதலில் தோல்வியுற்று அவர்களிடம் அடிமைப்பட்டு விட்டனர்.

**கேள்வி** 48 - நம் நாட்டின் கௌரவத்துக்கு அடையாளமாக முக்கியமான நிகழ்ச்சிகளில் வேட்டியணிந்து செல்வது சிறந்ததா ?

**பதில்** - வேட்டியணிந்த இந்துக்கள் தங்கள் பணிகளில் மெதுவாக இயங்கினார்கள். இனம் என்ற முறையிலும் தனி மனிதன் என்ற முறையிலும் செல்வம், திறமை, ஆரோக்கியம், பெரும் கட்டுமானப் பணிகள் போன்ற எந்தத் துறையிலும் போட்டியில் பிறரை வெல்ல இயலவில்லை, நல்ல உணவு, நல்ல வாழ்விடம், நல்ல ஆரோக்கியம் இவற்றையும் பெற இயலவில்லை.

அவர்கள் கூட்டுப் புழுக்கள் போல வலிமையின்றித் தங்களுக்குள்ளேயே ஒடுங்கிக் கிடந்தார்கள். போட்டியே இருக்காத துறைகளில், உதாரணமாக, அரைப் பட்டினியாக வாழ்க்கை நடத்துவதில் அல்லது வசதிகளோ, செல்வமோ அற்ற வாழ்க்கையை நடத்தும் போட்டியில் முதலிடம் பெறும் போலி கர்வத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் திளைத்தனர். இதை அவர்கள் தியாகம் என்று சொல்லிப் பெருமைப் பட்டனர். வசதிகளை அனுபவிப்பதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும், வாழ்க்கைப் போரில் போரிடத்தக்க வகையில் தங்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையே அவர்கள் மறந்து விட்டனர். போட்டியற்ற சூழலில் எளிமையான வேட்டி இடம் பெற்றிருப்பது இந்து இனத்தின் வலிமையின்மையின் ஒரு சிறந்த அடையாளமாகும்.

**கேள்வி** 49 - இந்துக்கள் ஒரு கற்சிலையைக் கடவுளின் அடையளமாகக்

கருதிப் பூசிப்பதையும் அல்லது அதைச் சைத்தானின் சிலையாகக் கருதுவதையும் பாவம் என்று கடவுள் நினைக்கிறாரா ?

**பதில்** - இந்துக்கள் இவ்வாறு கருதுவது பாவமில்லை. ஆனால் அதே சமயத்தில் இவ்வாறு கருதத் தேவையுமில்லை. எனினும் ஒரு பெரிய மக்கள் கூட்டத்தை ஓரிடத்தில் ஒன்று கூடச் செய்ய இது ஒரு சிறந்த உபாயம். எல்லா சமயங்களின் குருமார்களும் மக்களை ஒன்று கூட்ட இந்த முறையைக் கையாளுகிறார்கள். சிலர் கடவுளிடம் தங்கள் பக்தியைக் காட்டுவதற்குச் சிலைகள், கோயில்கள், புத்தகங்கள் இவற்றைப் பயன் படுத்துகின்றனர். சிலர் சைத்தானிடம் வெறுப்பைக் காட்டச் சிலைகளை உபயோகிக்கிறார்கள். இவை எல்லாம் அற்ப விஷயங்கள். இவை மதத்துக்கும், மகத்தான கடவுளின் மேலும் தாக்கம் ஏற்படுத்தும் விஷயங்களல்ல.

**கேள்வி 50** - திருடனின் கையை வெட்டுவது போன்ற கடுமையான தண்டனைகளால் மனித சமூகத்துக்கு நன்மையா ? இவற்றால் கடவுள் மகிழ்ச்சி அடைவாரா?

**பதில்** - மனிதன் உட்பட எல்லா ஜீவன்களையும் படைத்தவர் கடவுள். அவர் எல்லையற்ற கருணை கொண்டவர். தம் படைப்பின்பால் இவ்வளவு ஈவிரக்கமற்றவராக அவர் இருக்க முடியாது. திருடன் வறுமை காரணமாகத் திருடுகிறான். சமூகம் எல்லா மனிதர்களுக்கும் நன்றாக வாழ்க்கை நடத்த வாய்ப்பு அளிப்பதில்லை. சில சமயங்களில் அவன் பிழைத்திருக்கத் தேவையான குறைந்த பட்ச வசதிகளைக் கூடச் செய்து கொடுப்பதில்லை. ஒருவன் ஒரு நாட்டில் சமூகத்தில் நிகழும் சுரண்டலால் வறுமைக்காளாகித் திருடும் கட்டாயத்துக்குள்ளாகலாம். அவனே வேறொரு வளமான நாட்டுக்குச் சென்றால் துன்பமின்றி வாழலாம். ஆகையால் திருட்டு என்பது கடவுளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றமல்ல.ஆனால் அது சமூக, அரசியல் நோக்கில் குற்றமே. திருடனின் கையை வெட்டுவது கடவுளின் நீதிக்கு எதிரானது. நாட்டை ஆள்பவர்கள் சாதாரண மக்களைப் பயமுறுத்துவதற்காக இத்தகைய பயங்கர முறைகளைக் கையாளுகிறார்கள். இதனால் மக்கள் பயந்து போய்த் தங்கள் நியாயமான குறைகளையும் வெளியே சொல்லும் துணிவை இழக்கிறார்கள்.

**கேள்வி 51** - ஒரு நேரடியான நீதிமுறை அமுல் படுத்தப்பட்டால் - உதாரணமாக, திருமண உறவுக்கு வெளியே செக்ஸ் உறவு

கொள்ளும் ஒவ்வொரு பெண்ணும் தூக்கிலிடப்படுவாள் என்ற தண்டனை அமுலுக்கு வந்தால் - சமூகத்துக்கு நன்மை ஏற்படுமா, அதனால் கடவுள் மகிழ்வாரா ?

**பதில்** - வாழ்க்கையிலிருந்து இயற்கையான மகிழ்ச்சியைப் பெற எல்லா மகளிருக்கும் உரிமை உண்டு. அது கடவுளின் கொடை. ஒரு பெண்ணின் கணவன் கெட்டவனாக, திட்டுபவனாக, இரக்கமற்றவனாக, நோயாளியாக அல்லது ஆண்மையற்றவனாக இருந்து, அதனால் அவனுடைய மனைவி வேறு ஓர் ஆணிடம் ஈடுபாடு கொண்டிருந்தால் அது கடவுளை அவமதிப்பதாகாது. ஆட்சியாளர்களும், ஆட்சியில் செல்வாக்கு உள்ளவர்களும் பல சமயங்களில் கெட்ட காரியங்களைச் செய்கிறார்கள், இரக்கமின்றிச் செயல்படுகிறார்கள், ஒழுங்கீனங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் தங்கள் பலவீனங்களை மறைத்துக் கொள்ள ஒழுக்கம் என்ற பெயரில் பெண்களை அடக்கி வைத்திருக்க விரும்புகிறார்கள். ஒரு பெண் தன் கணவனல்லாத வேறு ஆணுடன் உடலுறவு கொண்டால் கணவன் அவளை மண விலக்கு செய்து கொள்ளலாம். சமூகம் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்காமலேயே மண விலக்கை அனுமதிக்கலாம். வேறு எந்தத் தண்டனையும் கடவுளுக்கு குற்றமிழைப்பதேயாகும். எனினும் கணவன் மனைவிக்கிடையே பரஸ்பர நம்பிக்கை இருந்தால் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். அக் குடும்பத்துக் குழந்தைகளும் முழு வளர்ச்சிக்கான வாய்ப்புப் பெறுவார்கள். இது கடவுளுக்கும் மகிழ்ச்சியளிக்கும்.

**கேள்வி 52** - இந்துக்கள் தங்கள் பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்தலாமா?

**பதில்** - நாட்டின் சட்டம் எந்தெந்த ஆயுதங்களை வைத்துக் கொள்ளப் பொது மக்களை அனுமதிக்கிறதோ, அந்த ஆயுதங்களைப் பதினான்கு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு இந்துவும் வைத்துக் கொள்ள வேண்டும். மிக ஏழையாக உள்ளவன் வீட்டிலும் ஒரு தடியாவது இருக்க வேண்டும். ஆயுதம் அருகில் இருந்தால் துணிவும், தன்மானமும் வளரும், ஆபத்துக் காலத்தில் பாதுகாப்பும் கிடைக்கும். துணிவுள்ள மனிதன் கடவுளை உண்மையாக நேசிக்க முடியும். இந்துக்களின் இலட்சியமாக உள்ள தேவதைகள் ஆயுதமணிந்தவர்கள்.

**கேள்வி 53** - இந்துக்கள் எத்தகைய மனித சமூகத்துக்கு உற்சாகமளிக்க வேண்டும் ?

**பதில்** - இந்துக்களின் தன்மானம், வலிமை, வளமான வாழ்வு இவற்றுக்கு

வழி செய்பவர்களையே இந்துக்கள் ஆதரிக்க வேண்டும். இந்துக்களின் நலத்தில் அக்கறை காட்டாதவர்களை எதிர்க்க வேண்டும்.

**கேள்வி 54** - தன்னுடைய தேவதைகள் அவமானப்படுத்தப்படுவதைக் காண்கிற ஒரு இந்து என்ன செய்ய வேண்டும் ?

**பதில்** - தம் தாய்க்கு அவமானம் நேர்வதைக் காண்கின்ற ஒருவர் என்ன செய்வாரோ அதைத்தான் செய்ய வேண்டும்.

**கேள்வி 55** - பிற சமயங்களைச் சார்ந்தவர்களை இந்துக் கோயிலுக்குள் அனுமதிக்கலாமா?

பதில் - தூய்மையற்ற அல்லது தொத்து வியாதியஸ்தர்களை கோயிலுக்குள் அனுமதிக்கக் கூடாது. மற்றவர்கள் இந்துக் கோயிலுக்குப் போய் ஆன்மீக நலன் பெறலாம். கடவுள் எந்த ஒரு சமயப் பிரிவுக்கும் ஏக போக உரிமையில்லை.

**கேள்வி 56** - பக்த இந்துக்கள் கோயிலிலிருந்து என்ன எதிர் பார்க்கலாம் ?

**பதில்** - கோயில் சூர்யோதயத்திலிருந்து சூர்யாஸ்தமனம் வரை எந்நேரமும் திறந்திருக்க வேண்டும். கோயில் நிர்வாகம் பக்தர்களின் காணிக்கையைக் கொண்டு ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். கல்வியளிப்பது, மக்களுக்கு வைத்திய உதவியும் மற்ற உதவிகளும் புரிவது, பக்தர்களின் நலனைக் காப்பாற்ற சமூகப் போராட்டங்களில் ஈடுபடுவது இவையெல்லாம் கோயிலின் கடமைகள். பக்தர்கள் பிரார்த்தனை, பஜனை செய்யவும், கடவுளின் புகழ் பாடவும் ஏற்ற வகையில் கோயிலில் ஒரு பெரிய அரங்கம் இருக்க வேண்டும்.

**கேள்வி 57**- அரசியலுக்கும் சமயத்துக்கும் தொடர்பு இல்லாமல் இருக்க வேண்டுமா ?

**பதில்** - அரசியல் என்பது ஒரு விஷயம் பற்றிய சாதாரண மக்களின் மனப் போக்கு. அந்த மனப் போக்கு சமூகத்தின் மதிப்பீடுகளைச் சார்ந்திருக்கிறது. தருமத்தின் (சமயத்தின்) நீதிக் கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் அந்த மதிப்பீடுகள் உருவாகின்றன. ஆகவே சமயமும், அரசியலும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. இந்தத் தொடர்பைப் பயன் படுத்தாத அரசியல் மக்களின் நன்மைக்குப் பயன் படுவதில்லை; அது பேராசை பிடித்த, ஈவிரக்கமற்ற மனிதர்களின் வேட்டைக் களமாக ஆகி விடுகிறது. சமயமும் ஆதரிப்பவர்களின்றி வலிமையிழந்து, மூட நம்பிக்கைகள் நிறைந்ததாகவும், ஒழுக்கங்கெட்டதாகவும் ஆகி விடுகிறது.

(இதற்கு ஒரு சிறந்த உதாரணம் மகாபாரதம் - பீஷ்மர் அரசியலை உதறி விட்டு சமயத்தைப் பின்பற்றினார். இதன் விளைவாகக் கவுரவர்கள் குணங்கெட்டுப் போயினர். அவர் அரசியலையும் சமயத்தையும் இணைத்திருந்தால் சத்தியவதியைத் தன் தந்தை மணப்பதை ஏற்றுக்கொண்டிருப்பார்.; ஆனால் சத்தியவதியின் தந்தை விதித்த அநியாய நிபந்தனைக்கு இணங்கியிருக்க மாட்டார். சந்தனு சத்தியவதியை மணக்க வேண்டுமென்றால் சத்தியவதியின் மகனே அரசாள வேண்டும் என்பது தான் அந்த நிபந்தனை. அப்படியானால் க்ஷத்திரியரான பீஷ்மர் இல்லறத்தையும் அரசையும் துறந்து பிரும்மச்சாரியாக வாழ வேண்டும், அதாவது அரசியலைத் துறந்து சமயம் சார்ந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். பீஷ்மர் தம் தந்தையின் காம வேட்கையைத் திருப்தி செய்ய அரசியலைத் துறந்தார். இதன் விளைவாகக் கவுரவ வம்சம் அழிந்தது. இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் பாரதப் போரில் மாண்டனர். பீஷ்மர் பாரதத்தின் ஒரு வலிமையுள்ள, இலட்சிய மன்னராக ஆகியிருக்க முடியும். அவருடைய துறவால் பாரதம் ஒரு சிறந்த, வலுவான அரசனை இழந்தது. பீஷ்மர் அரசராக ஆகியிருந்தால் பாரதம் மேன்மையுற்றிருக்கும், அதன் வரலாறே மாறியிருக்கும். இன்னொரு உதாரணம்: கிருஷ்ணர் - அவர் அரசியலையும் சமயத்தையும் இணைத்தே செயற்பட்டார். இதன் விளைவு பகவத் கீதை. இவ்வாறு அரசியலையும் சமயத்தையும் இணைப்பதன் மூலம் அவர் கவுரவர்களின் கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து பாண்டவர்களின் நல்லாட்சியை நிறுவினார்.)

**கேள்வி 58** - மக்கள் அரசனிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ?

**பதில் -** அவர்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அப்போது தான் அவனால் மக்களுக்கு இடையூறின்றி உழைக்க முடியும். இனத்தைச் செம்மைப் படுத்த அனேக வழிகள் உண்டு. ஒரு தனி மனிதர் இதற்காக ஒரு சிறந்த வழியைக் கண்டு பிடிக்கலாம். ஆனால் அரசனைத் தன்னுடைய முறையை மாற்றிக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துவதால் இலாபம் ஏற்படாது. அரசன் தன்னலங்கருதாது செயல் பட்டால், அவனுக்கு மக்களின் ஒருமித்த ஆதரவு அவசியம் கிட்டும். அரசன் மக்களுக்காக என்ன செய்கிறான் என்பதுதான் முக்கியம், அவனுடைய சொந்த வாழ்க்கைக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை.

**கேள்வி 59** - கோயிலுக்கு வரும் பக்தர்களின் உதவியைக் கொண்டு ஒருவன் தன் சொந்தத் தொழிலை விருத்தி செய்து கொள்ளலாமா ?

**பதில் -** கோயில் எவருடைய தொழில் வளர்ச்சிக்காகவும் பிரசாரம் செய்யும்

இடமல்ல. மக்கள் கடவுளிடம் பிரார்த்தனை செய்வதற்கும், தங்கள் பொதுப் பிரச்னைகளை விவாதிக்கவும் மட்டுமே கோயில் பயன்பட வேண்டும்.

**கேள்வி 60** - பூசாரி (குருக்கள்) மந்திரங்களை உச்சரிப்பதில் தவறு செய்தால் நாம் என்ன செய்ய வேண்டும் ?

**பதில்** - பக்தர்களுக்காகச் செய்யப்படும் பிரார்த்தனையில் உச்சரிப்புப் பிழை இருந்தாலும் கடவுள் பிரார்த்தனையைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு அருள்வார். ஆனால் தவறாக உச்சரிக்கப்பட்ட பிரார்த்தனையின் பலன் அவருக்குக் கிட்டாது. வேறு எவருக்காவது சரியான உச்சரிப்பு தெரிந்திருந்தால் அவர் பூசாரியைத் திருத்தலாம். ஆனால் அதைச் செய்யும்போது பூசாரி தனியே இருக்க வேண்டும். மற்றவர்களின் முன்னால் அவரது தவற்றைச் சுட்டிக் காட்டி அவரைச் சங்கடப்படுத்தக் கூடாது.

**கேள்வி 61** - எந்த வேலைக்குக் கவுரவம் அதிகம் ?

**பதில்** - வேலைகளில் உயர்வு - தாழ்வு இல்லை. எந்த வேலையும் மனிதனைத் தாழ்த்துவதில்லை என்று கீதை போதிக்கிறது. சமூகத்தின் நன்மைக்காகத் தேவைப்படும் எந்த வேலையும் நல்லதுதான், கவுரவமானதுதான்.

**கேள்வி 62** - உலகத்தை மாற்றி அதை மேலும் இன்பமளிப்பதாகச் செய்யும் வழி என்ன ?

**பதில்** - எல்லோருமே உலகத்தை மாற்றுவதைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தன்னை மாற்றிக் கொள்வதைப் பற்றிச் சிந்தித்தால் கடவுள் மகிழ்ச்சியடைவார்.

**கேள்வி 63** - பக்தர்கள் ஏன் கோயிலுக்குப் போய் உருவ வழிபாடு செய்கிறார்கள் ?

**பதில்** - உருவ வழிபாட்டில் சொல்லப்படும் மந்திரங்களில் தேவதைகளின் பெருமை புகழப்பட்டிருக்கும். தேவதைகள் கடவுளின் தூதர்களாக இவ்வுலகத்தில் தோன்றியவர்கள். உருவ வழிபாடு வீர வழிபாட்டிற்கு ஒரு உதாரணமாகும். கடவுளின் தோத்திரங்களை முறையாகச் சொல்லி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

**கேள்வி 64** - தாம் தான் கடவுளின் இறுதித் தூதர் என்று எந்தத் தேவதையாவது சொல்ல முடியுமா ?

**பதில்** - தேவ தூதர்களும் மனிதர்கள் தாம். மேலும் தூதர்களை அனுப்புவதா, இல்லையா என்பது கடவுளின் முடிவுக்கு

உட்பட்டது. இந்த உரிமையை மனிதர் எவரும் எடுத்துக் கொள்ள முடியாது. உலகத்துக்கு இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வு உண்டு. எதிர் காலத்தில் பல புதிய பிரச்னைகளும், வளங்களும் உண்டாகலாம். அப்போது கடவுள் புதிய தூதர்களை அனுப்பலாம்.

**கேள்வி 65 -** கோயிலின் முக்கியப் பூசாரிக்கு எவ்வாறு மரியாதை செலுத்த வேண்டும் ?

**பதில் -** கோயிலின் தலைமைப் பூசாரி அல்லது குருக்கள், அக் கோயிலின் நிர்வாகி, பொறுப்பாளர் மற்றும் புரோகிதர். அவர் தம் செயல்கள் மூலமாகவும், நடத்தை மூலமாகவும் எளிதில் பக்தர்களுக்கும், சமூகத்துக்கும் நன்மை செய்யக் கூடிய வகையில் அவருடைய எல்லாக் காரியங்களிலும் ஈடுபாட்டோடு உதவி செய்வது பக்தர்களின் கடமையாகும்.

**கேள்வி 66 -** அநியாயம் நிகழ்ந்தால் இந்துக்கள் அதை விதி என்று சொல்லி ஏற்றுக் கொள்ள வேண்டுமா ?

**பதில் -** இந்துக்கள் சுதந்திர மனப்போக்கில் நம்பிக்கை கொண்டவர்கள். தன் பாக்கியத்தைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் சக்தி தனக்கில்லை, கடவுளின் உதவியைப் பெறும் தகுதியும் தனக்கில்லை என்று நினைத்தாலொழிய எந்த இந்துவும் அநியாயத்துக்குக் கீழ்ப்படிய மாட்டான். "மனிதன் தானே தன் நிலையை மாற்றிக் கொள்ள முயற்சி செய்யாவிட்டால், கடவுள் அவனுடைய நிலையை மாற்றமாட்டார்" என்று வேதம் சொல்கிறது. ஆட்சி முறையில் நீதியை நில நிறுத்த வேண்டிய பொறுப்புள்ள அரசன் அநியாயத்தையும் ஒழுக்கக் கேட்டையும் வளர்ப்பவனாக இருந்தால் அவனுக்கெதிராகக் கிளர்ந்தெழும் தார்மீகப் பொறுப்பு இந்துக்களுக்கு உண்டு என்பதை அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அப்படி அவர்கள் கிளர்ந்தெழாவிட்டால் கடவுள் அவர்கள் மேல் கோபம் கொள்வார்.

**கேள்வி 67 -** எத்தகைய ஆட்சி முறை இந்துக்களுக்கு உபயோகமானது ?

**பதில் -** அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துவது தான் அரசியல். இந்த ஏற்பாட்டில் இந்துத் தத்துவம் பரவ வாய்ப்பு இருக்க வேண்டும். இந்துக் குடிமக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அரசனே விரும்பத்தக்கவன். இந்து சமயத்தில் முழு நம்பிக்கை இல்லாவிட்டாலும் அதன் நோக்கத்தை ஆதரிப்பவனும் ஏற்றுக்கொள்ளத் தக்கவனே. இந்து சமயத்தின் வளர்ச்சிக்கான

பொறுப்பை ஏற்றுக்கொண்ட, அல்லது குறைந்த பட்சம் இந்து சமயத்திற்கு ஆதரவான ஆட்சி நிலைத்திருக்கும்படி இந்துக்கள் செயற்பட வேண்டும். இதற்கு மாறாக இந்துக்களிடம் விரோதம் பாராட்டும் ஆட்சியில் இருக்க நேர்ந்தால் அங்குள்ள ஒவ்வோர் இந்துவும் அந்த ஆட்சியை எதிர்த்துப் போராட வேண்டும்.

**கேள்வி 68** - எப்போது, எந்த வகையில் ஓர் இந்து, ஆட்சியாளரை எதிர்க்க வேண்டும் ?

**பதில்** - யார் அரசனாக (ஆட்சித் தலைவராக) இருக்க வேண்டும், நாம் ஏன் அவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற விஷயங்கள் பற்றிய விவாதங்கள் எழுந்தால் சுய உணர்வுள்ள ஒவ்வொரு இந்துவும் கடந்த கால வரலாற்றை ஆராய வேண்டும். மற்ற இந்துக்களுடன் இது பற்றி விவாதிக்க வேண்டும். இந்து விரோத மனப்போக்குள்ள ஆட்சியாளரின் ஆட்சியில் அவர்களை எதிர்க்கும் மனப்போக்கு தீவிரமாகும். ஏனெனில் இந்துக்கள் பல நூற்றாண்டுகளாக வெளிநாட்டாரின் அல்லது அவர்களது உதவியாளர்களின் ஆட்சியில் பலவகை இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலும், கூட்டமாகச் சேர்ந்தும் அநீதியையும், அவமானத்தையும் எதிர்க்க வேண்டும். இந்த உரிமையை இடைவிடாமல் மீண்டும் மீண்டும் பயன் படுத்துவது மிகவும் அவசியம். கடவுள் இத்தகைய எதிர்ப்புக்கு நல்ல பலனை அளிக்கிறார் என்று இந்துக்கள் உணர வேண்டும். எதிர்க்காமலிருப்பது இந்துக்களை அவமதிப்பதாகும். அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதாகும்.

**கேள்வி 69** - ஓர் இந்துத் தலைவர் தம் பதவி, இனம், குழு இவற்றை இந்துக்களின் அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாமா? இந்துக்களின் எதிரி யார் ?

**பதில்**- கடவுள் செயல்களில் உயர்வு - தாழ்வு பார்ப்பதில்லை. சமூகத்துக்கு அவசியமான எந்தச் செயலும் நல்லதுதான். அரசியல் தலைவர் இந்துக்களை ஒன்றிணைத்து அவர்களுடைய முன்னேற்றத்துக்கும் அறிவியல் நோக்குக்கும் தலைமை வகிக்க வேண்டும். அவர் தம் பதவியையும் செல்வாக்கையும் இந்து சமயத்தின் அரசியல் முன்னேற்றத்துக்கும் பயன் படுத்த வேண்டும். யாராவது இந்துக்களிடையே பிரிவினையை உண்டாக்கும் வகையில் அரசியல் முறையையோ, கொள்கையையோ பயன்படுத்தினால் அவர் கடவுளின் எதிரி. அவர் அழிக்கப்படவேண்டும்.

**கேள்வி 70** - உருவ வழிபாட்டை எதிர்க்கும் 'ஒரே கடவுள்' கொள்கை

கொண்டவர்களால் மனித குலத்துக்கு மங்களமும், முன்னேற்றமும் ஏற்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? உபவாசம் (உண்ணா நோன்பு) பாவத்தைக் கழுவுமா?

**பதில்** - மருத்துவம், உணவு உற்பத்தி முறை, இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகிய துறைகளில் உருவ வழிபாட்டை எதிர்ப்பவர்களின் சாதனை மிகக் குறைவு. அவர்களுடைய குருட்டுத்தனமான மதவெறி, வலிமையற்றவர்கள், பெண்கள் மற்றும் ஜீவராசிகளைக் கொடுமைப்படுத்துவதைத்தான் சட்டபூர்வமாக ஆக்குகிறது. அவர்கள் உருவ வழிபாட்டை நம்புபவர்களை உடலாலும் மனதாலும் அடிமையாக்குகிறார்கள்;ஒரு சில நாட்கள் மட்டும் பகல் நேரத்தில் உண்ணா நோன்பு கடைப்பிடிப்பவர்களுடைய எல்லாப் பாவங்களையும் கடவுள் மன்னிப்பார் என்று பொய் உறுதி மொழி அளித்து அவர்களை எல்லாவிதக் குற்றங்களையும் செய்யும்படித் தூண்டுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் தங்கள் கருத்தை வெளியிடச் சம உரிமை கிடைக்கும்போது, உருவ வழிபாட்டை எதிர்ப்பவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காக யார், ஏன் இந்தப் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்று மக்கள் புரிந்துகொள்வார்கள். கடவுள் சர்வ வல்லமை கொண்டவர். அவர் அளித்த தாராளமான கல்வி மூலம் திறந்த மனதோடு விவாதித்தால் உண்மை வெளிப்படும், சுய நலமிகளின் பேராசை அம்பலமாகும். கடவுள் மகிழ்ச்சி அடைவார். கடவுளால் அளிக்கப்பட்ட செய்தியை விவாதிப்பதில் பயமேற்படக் காரணமில்லை.உலகம் சூரியனைச் சுற்றி வருகிறது - இது உண்மை. இந்த உண்மையை விவாதிப்பதால் சூரியனுக்கோ, உலகத்துக்கோ எந்த நஷ்டமுமில்லை. ஆனால் யாராவது சூரியன் தான் பூமியைச் சுற்றி வருகிறது என்று சொல்லி இந்தக் கருத்தை விமர்சிப்பவர்களைக் கொல்வதாக பயமுறுத்தினால் கடவுள் கோபம் கொள்வார். உருவ வழிபாட்டை எதிர்த்து 'ஒரே கடவுள்' கொள்கையில் நம்பிக்கையுள்ள இந்துக்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் - உருவ வழிபாட்டால் நமக்கு அவமானம் நேர்வதாகக் கடவுள் கருதினால் அவர் உலகிலுள்ள எல்லாச் சிலைகளையும் அவற்றை வழிபடுபவர்களையும் அழித்திருப்பாரே ! கடவுளுக்கு அவருடைய காரியத்தைச் சாதிக்க உதவியாளர் தேவையில்லை. எனினும் சிலைகளை வழிபடுவதை விட நேரடியாகக் கடவுளையே வழிபடுவது அதிகப் பலனளிக்கும் என்பது உண்மை.

**கேள்வி 71** - கொடுமையான எதிரியும் பேராசையால் குருடாகிப் போன சேனையும் எவ்வாறு ஒரு இனம் முழுதையும் அடிமைப்படுத்துகின்றன ?

**பதில்** - தங்களைப் பற்றி உயர்ந்த எண்ணங்கொண்ட மன நோயாளிகள் ஓர் இனத்தின் உள்ளேயும், வெளியேயும் நிலவும் மனத்தத்துவத்தை நீண்ட காலமாகத் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்துகிறார்கள். பேராசை பிடித்த சேனைத் தலைவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பரப்புவதற்காக, அப்பாவி மனிதர்களைக் கொல்வதும், அவரது பெண்டிரைக் கற்பழிப்பதும் கடவுளுக்கு மகிழ்சியளிக்கும் என்று தம் இனத்தாரிடையே பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். அவர்கள் கடவுளின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி, தங்களைப் பின்பற்றாதவர்கள் நரகத்துக்குப் போவார்கள் எனப் பயமுறுத்தித் தங்கள் ஆட்சியை நிறுவிக் கொள்கிறார்கள். படை வீரர்களின் சுதந்திர சிந்தனையையும் அவர்கள் செய்யக் கூடிய கலகத்தையும் அடக்க அவர்கள் கடவுளின் பெயரைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

**கேள்வி 72** - எல்லா அதிகாரங்களையும் பெற்றுள்ள ஒரு இந்து அரசன் எப்போதும் அறிஞர்களுடன் கலந்து ஆலோசித்துக்கொண்டு ஆட்சி செய்தால் அது ஒரு சிறந்த ஆட்சியாக இருக்குமா?

**பதில்** - அரசன் ஆட்சியாளர்களுக்கும், குடிமக்களுக்குமிடையே பரஸ்பரக் கருத்துப் பரிமாற்றம் நிகழ ஏற்பாடு செய்தால் நீதி நிர்வாகத்தில் அநீதிக்கு எதிராகச் செயற்படும் உரிமை மக்களுக்குக் கிடைக்கும். உண்மையான ஜனநாயகம் உறுதிப்படும்.

**கேள்வி 73** - அறிஞர்கள் சங்கம் கொடுங்கோல் ஆட்சியாளனுக்கு எதிராக ஒரு பாதுகாப்புக் கவசமாக இருக்குமா?

**பதில்** - கொடுங்கோல் அரசர்கள் நெடுங்காலமாக சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதர்களையும், ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் என்று புகழ் பெற்ற சமயப் பெரியார்களையும் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தியோ அல்லது இலஞ்சம் கொடுத்து வசப்படுத்தியோ தங்கள் கொடிய செயல்களுக்கு அவர்கள் ஆதரவைப் பெற்று விடுகிறார்கள் என்பது மனித வரலாற்றிலிருந்து தெரிகிறது. பிறகு அவர்கள் தாங்கள் கடவுளின் கட்டளைப்படி செயற்படுவதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். இதன் விளைவாகப் பொதுமக்கள் சிறிது சிறிதாகத் தங்கள் நிலை கடவுளால் விதிக்கப்பட்டது என்று நினைக்கத் தொடங்குகிறார்கள். ஆகவே அறிஞர்களின் சங்கம் கொடுங்கோல் ஆட்சியாளனை எதிர்க்க வலுவற்றது. ஜனநாயகம் தான் இந்துக்களின் பாதுகாப்புக் கவசம்.

**கேள்வி 74** - சகல அதிகாரங்களையும் கொண்ட ஆட்சி நல்லதா அல்லது

எல்லோருடைய சம்மதத்தின் அடிப்படையில் அமையும் ஆட்சி நல்லதா ?

**பதில் -** நாகரீகத்தின் தோற்றக் காலத்திலிருந்தே ஒருநாளும் மக்கள் ஒருங்கிணைந்து மன்னனை அரியணையேற்றவில்லை. பலத்தைப் பிரயோகித்துத்தான் மன்னன் ஆட்சியைப் பிடித்தான். சகல அதிகாரங்களும் படைத்த அரசனை ஆதரித்தவர்கள் பெரும்பாலும் மத, அரசியல் தலைவர்கள் தாம் என்பதை வரலாறு தெரிவிக்கிறது. அவர்கள் பயத்தாலோ அல்லது இலஞ்சத்திற்கு ஆசைப்பட்டோ அந்த மன்னனை ஆதரித்தார்கள் என்பதே இதில் மறைந்துள்ள உண்மை. எல்லா மக்களுடைய சம்மதத்தை ஆதாரமாகக் கொண்ட, ஆனால் ஜனநாயக முறையில் அரசன் தேந்தெடுக்கப்படுவதே விரும்பத்தக்கது.

**கேள்வி 75** - கடவுளின் அன்பைப் பெற என்ன செய்ய வேண்டும் ? எந்த முறையில் அவரைப் பூசிக்க வேண்டும் ?

**பதில் -** கடவுளைப் பிரார்த்திப்பதே சிறந்த பூசை. லாகிரிப் பொருள்கள், பானங்களைத் தவிர்க்க வேண்டும். அவை கடவுளுக்குப் பிடிக்காதவை. வாரத்தில் ஒரு நாளாவது கோயிலுக்குப் போய் அங்கே ஏழை - பணக்காரர், பெரியவர் - சிறியவர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், அறிஞர் - கல்லாதவர் எல்லோருடனும் சேர்ந்து பிரார்த்தனை செய்வது சிறந்த பூசையாகும்.

**கேள்வி 76** கடவுளைப் பூசிப்பதற்காக நாம் உண்ணா நோன்பு இருக்க வேண்டுமா?

**பதில் -** பூர்ணிமை தினத்தில் பகல் நேரம் உண்ணா நோன்பிருந்துவிட்டு, சந்திரன் உதித்தபின் வரிசைக் கிரமமாக கூட்டு விருந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு உறவினர்களையும் நண்பர்களையும் அழைக்க வேண்டும். இது கடவுளின் ஆசியைப் பெறும்; பக்தர்கள் நல்ல ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் பெறுவார்கள். மற்ற நாட்களில் தூய்மையான உடையணிந்து, அமைதியான உள்ளத்தோடு பூசை செய்ய வேண்டும். எந்த சமூக விழாவுக்காகவும் உண்ணா நோன்பு தேவையில்லை. பூர்ணிமை விருந்தில் நீ எவ்வளவு பேருக்கு உணவளிக்கிறாயோ அவ்வளவு எண்ணிக்கையில் உன் முன்னோர் உணவு பெறுகிறார்கள் என்பது பக்தர்களின் நம்பிக்கை. மாதமொரு முறை நாம் இவ்வாறு விருந்தளிக்க வேண்டும், அல்லது இத்தகைய விருந்தில் கலந்து கொள்ள வேண்டும். இரு வகையிலும் புண்ணியம் கிடைக்கும்.

**கேள்வி 77** - யார் ஆசாரியராக (பூசாரியாக) இருக்கலாம் ?

பதில் - 20 வயதுக்கு மேற்பட்ட, ஒழுங்கான நடத்தை உடைய எந்த ஆணும், பெண்ணும் ஆசாரியராக இருக்கலாம். அவர் கல்வியறிவு பெற்றவராக, இந்து சாத்திர அறிஞராக, வாக்கு வன்மை உள்ளவராக இருக்க வேண்டும். அவர் கூடியுள்ள பக்தர்களுக்குக் கீதை, வேதம், உபநிடதம் ஆகியவற்றில் வாழ்க்கையில் வழி காட்டக்கூடிய விஷயங்களை விளக்கவும், பாடி பஜனை செய்யவும் தகுதி பெற்றிருக்க வேண்டும். அவர் துணிவுள்ளவராகவும், நல்ல ஆரோக்கியமும் பழக்க வழக்கங்களும் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அவர் தம் குழந்தைகளையும், பக்தர்களையும் ஒரே மாதிரி நேசிக்க வேண்டும். அவர் பக்தர்களின் பூசைச் சடங்குகளுக்கும், சமூக முன்னேற்றத்துக்கான நிகழ்ச்சிகளுக்கும் தலைமை வகிக்க வேண்டும்.

**கேள்வி 78** - தேவதைகளுக்கு எவ்வாறு பூசை செய்ய வேண்டும் ?

**பதில்** - குறைந்தது 15 மந்திரங்களை உச்சரிக்க வேண்டும். அதன் பிறகு தேவதையின் சிறப்பைப் புகழ்ந்து பாடலாம். சிறப்பான தேவதைகளின் சாதனைகளை நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் பக்தர்கள் அந்தத் தேவதைகளைப் பின்பற்ற உற்சாகம் பெறுவார்கள். ஆசாரியர் மந்திரங்களை நினைவிலிருந்து உச்சரிக்கலாம் அல்லது புத்தகத்திலிருந்து படிக்கலாம். வெறும் பிரார்த்தனையைத் தவிர பூசை எதுவும் தேவையில்லை. கடவுளுக்கு உணவு, உடை, ஆபரணங்கள், பொருள் இவற்றைக் கொடுக்கவும் தேவையில்லை. யாகம், காணிக்கை இவையெல்லாம் பக்தர்கள் தங்கள் செல்வத்தைக் காட்டிக் கொள்ளச் செய்யப்படுபவை. கடவுளின் பார்வையில் இவற்றுக்கு மதிப்பு எதுவும் இல்லை. கடவுள் பிரார்த்தனை தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்வதில்லை.

**கேள்வி 79** - ஆசாரியருக்கு வருமானம் எவ்வளவு இருக்க வேண்டும் ?

**பதில்** - கோயிலின் சொத்திலிருந்து ஆசாரியருக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். அது அவர் சமூகத்தில் கண்ணியமாகவும், வசதியாகவும் வாழ்வதற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். அவர் பக்தர்களிடம் கையேந்தும் நிலையில் இருக்கக் கூடாது. கடவுள் நமக்கு அளித்துள்ள செல்வத்துக்கு நன்றி பாராட்டும் வகையிலும் அதனால் நமக்கு ஏற்பட்டுள்ள சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் வகையிலும் ஒவ்வொருவரும் தங்கள் மாத வருவாயில் நூற்றில் ஒரு பங்கைக் கோயில் நிதியிலோ அல்லது ஓர் இந்து சமூக நல நிறுவனத்திலோ செலுத்த வேண்டும்.

**கேள்வி 80** - கோயிலுக்காக அல்லது வேறு சமூக நலன்களுக்காகப் பக்தர்கள் ஏன் காணிக்கை அளிக்க வேண்டும் ?

**பதில்** - கடவுள் எல்லா மக்களையும் ஒரே மாதிரி நேசிக்கிறார். எனினும் பல காரணங்களால் ஒரு சிலருக்கு மற்றவர்களை விட அதிகப் பொருள் ஈட்டும் திறமை ஏற்படுகிறது, அவர்கள் உலகத்தின் செல்வத்தின் பெரும் பகுதியை அனுபவிக்கிறார்கள், ஆனால் உண்மையில் எல்லோரும் உலகத்தின் செல்வத்தில் சம பங்கு பெற வேண்டும். பணக்காரர்கள் தங்கள் செல்வத்தின் ஒரு பகுதியைப் பிறருக்கு அளித்தால் தாங்கள் மற்றவர்களை விட அதிகமாக இன்பம் அனுபவிப்பதால் ஏற்படும் பாவத்திலிருந்து விடுதலை பெறுவார்கள். தங்கள் வருமானத்தில் நூற்றில் ஒரு பங்கைக் கோயிலுக்கோ சமூக நல நிறுவனத்துக்கோ அளிப்பதன் மூலம் அவர்களுக்கு இத்தகைய விடுதலை கிடைக்கும்.

**கேள்வி 81** - எந்தெந்த நோக்கத்துக்காகத் தானம் செய்ய வேண்டும் ?

**பதில்** - கோயில் கட்டி அதைப் பராமரிக்க நிதி, பசியால் வாடுபவர்களுக்கு உணவு, உடை, முதியவர்களுக்கு மருந்துகள், மற்ற உதவிகள், சாதாரண மக்களுக்குக் கல்வி, வேலை தேடுபவர்களுக்குப் பயிற்சி, பயத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு இவற்றையளித்தால் கடவுள் மகிழ்ச்சியடைவார்.

**கேள்வி 82** - பிரார்த்தனை செய்ய எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் ?

**பதில்** - அதிகாலையிலும், இரவில் படுக்கப் போவதற்கு முன்பும் ஒவ்வொரு நாளும் இரண்டு தடவை பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒரு பிரார்த்தனை குறைந்தது ஐந்து நிமிடங்கள் பிடிக்கும். இவ்வாறு கடவுளிடம் பிரார்த்தனை செய்த பிறகு பிற தேவதைகளுக்கும் பிரார்த்தனைகள் செய்யலாம். இந்தப் பிரார்த்தனைகளுக்குப் பல மணி நேரம் பிடிக்கலாம். முதியோர், குழந்தைகள், நோயுற்றவர்கள் இவர்களுக்குப் பிரார்த்தனையின் நேரத்தால் அசவுகரியம் நேரிடாமல் பார்த்துக் கொள்வது ஆசாரியாருடைய கடமை. தினம் இரண்டு முறை பிரார்த்தனயும், ஒரு முறை பத்து நிமிடங்களுக்குப் பிராணாயாமமும் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அதிலேயே கடவுள் திருப்தி அடைவார். சுவர்க்கம் கிடைக்க ஆசியளிப்பார்.

**கேள்வி 83** - கோயிலில் பிரார்த்தனை நேரத்தில் பக்தர்கள் எவ்வாறு நின்றுகொள்ள வேண்டும் ?

**பதில்** - பிரார்த்தனை அரங்கின் அளவு, பக்தர்களின் எண்ணிக்கை இவற்றைப் பொறுத்து, பக்தர்கள் ஒன்பது அல்லது பன்னிரண்டு

பேர் வரிசை வரிசையாக ஒன்பது அல்லது பன்னிரண்டு வரிசைகளில் நிற்க வேண்டும். வரிசைக்கு ஒன்பது பேராக ஒன்பது வரிசைகளில் 81 பேர் நிற்கலாம். மொத்தம் 22 பேர் இருந்தால் ஒன்பது ஒன்பது பேர் இரண்டு வரிசைகளிலும் மூன்றாவது வரிசையில் நான்கு பேரும் நிற்கலாம். கோயில்களில் நெருக்கடி செய்வது கடவுளை அவமானப்படுத்துவதாகும்.

**கேள்வி 84** - கோயிலில் பக்தர்கள் குழுவில் பெண்களுக்கு இடம் எப்படி இருக்க வேண்டும் ?

**பதில்** - குழுவின் எண்ணிக்கைக்கேற்ப இடப்பக்க வரிசையில் பெண்களுக்கு பாதி இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

**கேள்வி 85** - தினசரி பிரார்த்தனைக்கு அவசியம் என்ன ?

**பதில்** - பிரார்த்தனை என்பது பலவகை ஆபத்துக்களிலிருந்து நம்மைக் காப்பாற்றக் கூடிய கண்ணுக்குத் தெரியாத ஒரு ஆயுதம். அது உடல் ஆரோக்கியத்துக்கும், செல்வம் வளரவும் உதவுகிறது. அதன் மூலம் உலக வாழ்வில் முழுமையான வெற்றியும், மரணத்துக்குப் பின் அழிவற்ற வாழ்வும் பெறலாம். ஒருவன் வாழ்க்கையில் பெற்ற வெற்றியையும் தோல்வியையும் நூறு வருடங்களுக்குப் பிறகு அனைவரும் மறந்து விடுவார்கள். ஆனால் அவன் இன்று செய்யும் பிரார்த்தனை அவனுக்கு அழிவற்ற வாழ்க்கைக்கான வழியைக் காட்டும்.

**கேள்வி 86** - கடவுளின் தரிசனம் எப்படிக் கிடைக்கும் ?

**பதில்** - கடவுளின் தரிசனத்தைப் பெற ஆர்வமுடையவனுக்கு அவர் தரிசனமளிப்பார்.

**கேள்வி 87** - கடவுளின் கவுரவத்தைக் காப்பாற்றுவதற்காக இந்துக்கள் மற்ற மதத்தினருடன் விரோதம் பாராட்ட வேண்டுமா ?

**பதில்** - அகங்காரக்காரர்களும், தங்களை மிக உயர்வாகக் கருதிக் கொள்ளும் முட்டாள்களுந்தான் தாங்கள் கடவுளின் கவுரவத்தைக் காப்பாற்றுவதாக எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். கடவுள்தான் எல்லா இனங்களையும் படைத்திருக்கிறார், அவர் தம் தூதர்கள் மூலம் அவர்களுக்கு மதத் தத்துவங்களையும், பழக்க வழக்கங்களையும் கற்பித்திருக்கிறார் என எண்ணுவதில்லை. கடவுள் விரும்பாவிட்டால் யாராவது பிழைத்திருக்க முடியுமா ? எவராவது தன் மதத்தைப் பின்பற்றி நடக்க முடியுமா?

பிற மதத்தினரை எதிரிகளாகக் கருதாமல் அவர்களை நண்பர்களாக்கிக்

கொள்ளவேண்டும்.

**கேள்வி 88 -** யார் சுவர்க்கம் செல்வார்கள் ? யார் நரகத்துக்குப் போவார்கள் ?

**பதில் -** உலகில் 'சுரர்', 'அசுரர்' என இரு வகை மக்கள் உண்டு. சுரர்கள் உழைத்துச் செல்வத்தைப் பெருக்குவார்கள். உலகத்தை எல்லா மக்களும் சுகமாக வாழ்வதற்கு ஏற்றதாகச் செய்வதற்காகத் தங்கள் செல்வத்தைப் பிறருடன் பங்கிட்டுக் கொள்வார்கள். அவர்கள் முடிவற்ற காலம் சுவர்க்கத்தில் இருப்பார்கள். அசுரர்கள் மற்ற மனிதர்களின் செல்வத்தை அபகரித்து அதைக் கொண்டு வாழ்க்கை நடத்துவார்கள். பயத்தையும், வெறுப்பையும் பரப்புவார்கள். அசுரர்கள் சைத்தானின் மனப் பண்பு கொண்டவர்கள். அவர்கள் காலம் காலமாக நரகத்தில் உழல்வார்கள்.

**கேள்வி 89 -** ஏதாவது பாவம் செய்தவன் கடவுளுக்குப் பூசை செய்தால் அவனுடைய குற்றத்துக்கான தண்டனை குறையுமா ?

**பதில் -** கடவுளோ வேறு எந்தத் தேவதையோ லஞ்சத்தால் மயங்குவதில்லை. பூசை செய்தால் ஏழைப் பூசாரிக்குத்தான் லாபம். குற்றம் செய்தவனுக்குத் தண்டனை குறையாது. உள்ளார்ந்த பச்சாத்தாபம், குற்றத்தால் பாதிக்கப்பட்டவனுக்குப் போதுமான இழப்பீடு, கடவுளிடம் தொடர்ந்தாற்போல் பிரார்த்தனை இவற்றால் மட்டுமே கடவுளின் அன்பையும் ஆசியையும் திரும்பப் பெற முடியும்.

**கேள்வி 90 -** இந்துக்கள் புரட்சி செய்யாமல் பொறுமை காப்பவர்களா?

**பதில் -** குறைந்தது ஓராயிரம் ஆண்டுகளாக இந்துக்கள் வெளிநாட்டாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுபடவில்லை, வெளிநாட்டாரை எதிர்க்கும் துணிவு பெறவில்லை. அவர்கள் புரட்சி செய்யாமல் தங்கள் இழிவான வாழ்க்கையை அகிம்சை, அமைதியில் பிரியம் என்ற போர்வையில் மறைத்துக்கொண்டார்கள். அவர்கள் பலவகைத் தத்துவங்களைத் தோற்றுவித்து இந்துக்களை ஆண்மையற்றவர்களாகச் செய்து விட்டார்கள். அவர்கள் தங்கள் கோழைத்தனத்தாலும் அடிமை மனப்பான்மையாலும் பல நூற்றாண்டுகளாகச் சகிக்கவொண்ணாக் கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். கொடுமைகளை எதிர்க்க முடியாமல் தங்கள் பலவீனத்தைத் தங்கள் எல்லையற்ற பொறுமை என்று பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். அநியாயத்தைப் பொறுத்துக்கொள்வது கடவுளை அவமதிப்பதாகும்.

**கேள்வி 91** - கடவுளுக்குப் பிரச்னைகளை அளிக்கும் சைத்தானை ஒழிக்க இந்துக்கள் என்ன செய்ய வேண்டும் ?

**பதில் -** கடவுள் முதலும் முடிவுமற்றவர், எல்லையற்ற சக்தி வாய்ந்தவர் என இந்துக்கள் நம்புகிறார்கள். சைத்தான் அவருக்கு இணையாக இருக்க முடியாது. கடவுளின் ஆட்சியில் சைத்தானும் இருக்கிறான். அவன் கடவுளுக்குப் பிரச்னைகளை உண்டாக்குகிறான் என நம்புபவன் உண்மையில் கடவுளின் சக்தி ஓர் எல்லைக்குட்பட்டது, அவர் வலிமை குறைந்தவர் என நினைக்கிறான். கடவுள் சர்வ சக்திமானாக இருந்தால் அவருக்குப் பிரச்னையுண்டாக்க ஒரு சைத்தான் இருப்பது தர்க்க ரீதியாக சாத்தியமில்லை. சைத்தானின் குணமும், செயல்களும் அற்பமான, நிலையற்ற விஷயங்கள். கடவுள் நமக்கு அறிவும், பகுத்தறியும் திறனும் அளித்துள்ளார். அவரால் அளிக்கப்பட்ட குணங்களை மனிதன் தவறாகப் பயன்படுத்தி சைத்தானாகப் பார்க்கிறான். கொடுமையான முறையில் தன் காம வெறியைத் தீர்த்துக்கொள்ளவும், தன் பலத்தையும் செல்வத்தையும் பெருக்கிக்கொள்ளவும் சைத்தானின் குணங்களைப் பின்பற்றுகிறான்.

**கேள்வி 92** - சிலர் நல்லவர்கள், சிலர் கெட்டவர்கள், சிலர் நன்னடத்தையுள்ளவர்கள், சிலர் பயங்கரவாதிகள் - கடவுளின் ஆட்சியில் இவ்வித முரண்பாடுகள் ஏன் ?

**பதில் -** உலகில் வாழ்நாளின் காலம் சொற்பம் தான். க்ல்வி மூலம் மனிதனுக்கு அறிவும் விவேகமும் அளிக்கப்பட்டுள்ளன. இங்கு நாமே நமக்குப் பயிற்சியளித்துக் கொள்கிறோம். எவ்வாறு வாழ வேண்டும் என முடிவு செய்து கொள்கிறோம். நாம் நமது அற்ப கால வாழ்வில் செய்யும் செயல்களால் நாம் இறுதியில் சுவர்க்கம் செல்கிறோமா அல்லது நரகம் செல்கிறோமா என்பது நிச்சயிக்கப்படுகிறது. நாம் நமது கல்வி மற்றும் விவேகம் மூலமாக நல்லவராக அல்லது கெட்டவராக, நன்னடத்தையுள்ளவராக அல்லது பயங்கரவாதியாக ஆவதை முடிவு செய்து கொள்கிறோம்.

**கேள்வி 93** - கடவுளிடம் இடைவிடாமல் பிரர்த்தனை செய்யாவிட்டால் அவர் கோபித்துக் கொள்வாரா ?

**பதில் -** மனிதன் எப்போதும் தம்மைப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்க வேண்டும் எனக் கடவுள் விரும்பியிருந்தால் அவர் அவனைத் தம் அருகிலேயே வைத்துகொண்டிருப்பார். கடவுள் மிகப் பெரியவர். அவர் இம்மாதிரியான அற்ப விஷயங்களுக்காகக்

கவலைப்படமாட்டார். எனினும் மனிதன் அறிவுள்ள பிராணியாக இருப்பதால் கடவுளைப் பிரார்த்திக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளான். பிரார்த்தனையால் மனிதனுக்கு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெறவும், அழிவற்ற வாழ்வு பெறவும் சக்தி கிடைக்கிறது. கடவுளை ஒதுக்கிவிட்டு வாழ்நாள் முழுதும் அடையக்கூடிய வெற்றியைக் கடவுள் முன் இருந்துகொண்டு ஒரே மணி நேரத்தில் அடைந்து விடலாம்.

(உதாரணமாக, ஒரு மனிதன் கடற்கரையில் வாழ்ந்தாலும் முறையாகக் கடல் ஸ்நானம் செய்யாமலிருந்தால் கடலுக்கு நஷ்டமேதுமில்லை. ஆனால் தொடர்ந்து கடல் ஸ்நானம் செய்வதால் ஆரோக்கியமும், பலமும் கிடைக்கும். அதேபோல் முறையாகப் பிரார்த்தனையும், பிராணாயாமமும் செய்யும் மனிதனுக்கு லாபமுண்டு. இதனால் கடவுளுக்கு எவ்வித லாபமுமில்லை.)

**கேள்வி 94** - எல்லா மனிதர்களும் கடவுளிடம் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் கடவுள் மகிழ்ச்சியடைவாரா?

**பதில் -** எல்லோரும் தம்மைப் பூசிக்க வேண்டும் எனக் கடவுள் நினைத்தால் அவர் உடனே தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியும். அவர் சர்வ வல்லமையுள்ளவர், எவருடைய எவ்விருப்பமும் நிறைவேறாமல் இருக்காது. ஒரு மனிதனுக்கு ஆசை காட்டியோ அல்லது பயமுறுத்தியோ தம் மதத்துக்கு மாற்றித் தம் மதத்தினரின் எண்ணிக்கயை அதிகரிக்க விரும்புபவர்கள் உண்மையில் கடவுளை அவமதிக்கிறார்கள். அவர்கள் கடவுளை ஆண்மையற்றவராகவும், படைப்புத் திறனற்றவராகவும் கருதுகிறார்கள். வெவ்வேறு மதத்தினரின் பூசைச் சடங்குகள் கடவுளுக்குப் பிடிக்காவிட்டால் அவர் அவற்றை அனுமதித்திருக்க மாட்டார். எல்லோரும் அவரவர் இயற்கைத் திறனின் தாக்கத்தால் கடவுள் ஒருவரையே பூசிக்கிறார்கள். கடவுளின் விருப்பப்படிதான் வெவ்வேறு மதத்தினர் தங்கள் தங்கள் வழக்கப்படி கடவுளைப் பூசிக்கிறார்கள் எவ்வகையில் செய்யப்பட்டாலும் பிரார்த்தனை ஒரே கடவுளிடம் தான் போய்ச் சேருகிறது.

**கேள்வி 95** - தனி மனிதன் மோட்சம் பெறும் விஷயத்தில் கடவுளின் பொறுப்பு என்ன ?

**பதில் -** வேத உரைகளின்படி தனி மனிதனின் மோட்சத்தில் கடவுளுக்கு ஒரு பொறுப்பும் இல்லை. மோட்சம் பெறுவது மனிதனின் கருமங்களின் விளைவாகவே நிகழும்.

**கேள்வி 96** - பகவான் கிருஷ்ணன் போன்ற தேவதைகள் ஏன் தம் சக்தியை உபயோகித்து இந்து மக்களை வறுமை, ஆரோக்கியமின்மை இவற்றிலிருந்து விடுவித்து அவர்களை ஒரு புதுமை இனமாக மாற்றவில்லை. ?

**பதில்** - சிறந்த அறிவுரைகள் வழங்குவதே தேவதைகளின் கடமை என வேதங்கள் கூறுகின்றன. ஒழுக்கமான நடத்தை மூலமாகக் கடவுளின் செய்தியைப் பரப்புவது, கெட்டவர்களை அடக்குவது, நல்லோரைக் காப்பது இவையே அவர்களுடைய கடமைகள். மனித இனத்தின் மேல் அவர்கள் முழுமையான ஆதிக்கம் செலுத்துவது தடுக்கப்பட்டிருக்கிறது. பகவான் கிருஷ்ணரோ அல்லது வேறெந்தத் தேவதையோ கடவுளின் சக்தியைத் தாம் எடுத்துக்கொள்ள முடியாது. வறுமை நீங்கிய, ஆரோக்கியம் வாய்ந்த தற்கால மனித இனமாக மாறுவதற்குத் தேவை தற்காலத்துக்குறிய மனப்பான்மை. எல்லோரும் கல்வி கற்று மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டால் தான் இது சாத்தியமாகும்.

**கேள்வி 97** - ஓர் இந்துப் பெண்மணி தகுந்த உடையால் தன் உடலை மறைத்துக் கொள்ளாவிட்டால் கடவுள் கோபிப்பாரா ?

**பதில்** - கடவுளின் மகிழ்ச்சிக்கும், கோபத்துக்கும் மனித உடைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இவையெல்லாம் கடவுளுக்கு அற்ப விஷயங்கள். பெண்களின் உடை எவ்வாறு இருக்க வேண்டும் என்று முறைப்படுத்துவது ஆண்களின் குணமும் நடத்தையும்தான். ஆண்கள் கல்வியறிவுள்ளவர் களாகவும், கண்ணியமாகவும் இருக்கும் இடங்களில் பெண்கள் தங்கள் உடை எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சுதந்திரமாக முடிவு செய்து கொள்ளலாம்.

**கேள்வி 98** - நாம் இந்து மதம் சார்ந்த அடையாளங்களை அணிய வேண்டுமா ?

**பதில்** - ஒவ்வோர் இந்துவும் தாம் இந்து என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டும், இந்து மதத்தின் செய்தியைப் பிரசாரம் செய்ய வேண்டும். இந்தச் செயலின் மூலம் கடவுள் திருப்தி அடைகிறார்.

**கேள்வி 99** - இந்து எத்தகைய உணவை உட்கொள்ள வேண்டும் ?

**பதில்** - சைவ உணவை உண்பவர்களும் அசைவ உணவை உட்கொள்பவர்களும் வேத காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறார்கள்.காய்கறிகள் அதிகம் விளையும் இடங்களில்

சைவ உணவுப் பழக்கம் நிலவுகிறது. ஆனால் புல் கூட விளையாத இடங்களும் இருக்கின்றன. அங்கெல்லாம் மனிதர்கள் அசைவ உணவு உண்ண நேர்கிறது. உணவுப் பழக்கத்துக்கும், ஒழுக்கத்துக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏதுமில்லை.

**கேள்வி 100 -** இந்தியாவில் பசு மாமிசம் உண்பவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் ?

**பதில் -** இந்தியாவின் விவசாயத்துக்கும், பொருளாதாரத்துக்கும் பசு ஒரு முக்கியத் தூணாக இருப்பதால் பசு வதை தடை செய்யப்பட வேண்டும். இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகமுள்ள, பசியாலும் வறுமையாலும் வாடும் நாட்டில் பசு வதை அனுமதிக்கப்பட்டால் வெகு விரைவில் பசுக்கள் எல்லாம் உணவாகி விடும். இதன் விளைவாகச் சிறிது சிறிதாக நாட்டில் பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் நேரும். ஏழை கிராமவாசிகளின் பாதுகாப்புக்காகப் பசுவதை தடுக்கப்பட வேண்டும். அதனால் இந்தியா போன்ற விவசாயம் சார்ந்த நாட்டில் பசுவதை செய்பவன் நரக வாசத்துக்கு உள்ளாவான்.

**கேள்வி 101 -** சில இந்து தேவதைகள் ஏன் பல கை, கால்கள், தலைகள் உள்ளவர்களாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

**பதில் -** ஆயுதங்களைக் கையாள்வதிலும், அறிவிலும் தேவதைகள் சாதாரண மனிதர்களைக் காட்டிலும் விஞ்சிய அசாதாரணமான திறமையைப் பெற்றிருந்தார்கள். அவர்களைப் பற்றிக் கதைகள் எழுதியவர்கள் தேவதைகளின் இந்த சக்தியைக் குறிப்பிடவே தங்கள் மிகைக் கற்பனையால் தேவதைகளைப் பல கைகள், கால்கள், முகங்கள் உடையவர்களாகச் சித்திரித்திருந்தார்கள். இதன் விளைவாக ஓவியர்களும், சிற்பிகளும் தேவதைகளின் உருவங்களை அவ்வாறே சமைத்தார்கள்.

உண்மையில் தேவதைகளும் மனிதர்கள்தாம். அவர்களும் இயற்கை விதிகளுக்கு உட்பட்டவர்களே. அவர்களுக்கும் மற்ற மனிதர்களைப் போலவே ஒரு தலையும், இரு கைகளும் தான் இருந்தன. இந்த மந்திரத்துக்கு விளக்கம் இது தான்:

त्रिमस्तकानां ज्ञानम् एकशिरे अवस्थितं
चतुर्बाहुतुल्यबलं द्विहस्ते रोपितम् ॥
भक्तेच्छापूरणार्थ पुनः पुनः आविर्भूतम्
प्रणमामि त्वां हि ईश्वरप्रेरितदूतम् ।

கடவுளே, நீ உன் தூதர்களை மீண்டும் மீண்டும் மனித உருவில் அனுப்புகிறாய். இந்த தூதர்கள் மிக்க அறிவுடையவர்கள். ஒரு தலைக்குள் மூன்று தலைகளின் சக்தியைப் பெற்றவர்கள். அவர்கள் தங்கள் இரண்டு கைகளால் ஆயுதங்களைக் கையாளும்போது நான்கு கைகளால் ஆயுதங்களை ஏந்தியவர்கள் போலத் தோன்றுகிறார்கள்.

**கேள்வி 102** - இந்திரன் ஒழுக்கங் கெட்டவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். அப்படியும் இந்துக்கள் ஏன் அவனைப் போற்றுகிறார்கள் ?

**பதில்** - இந்திரன் உடல் வலிமையிலும், போர்த் திறனிலும் சிறந்தவன். அவன் சிறந்த அறிவு படைத்த, தொலை நோக்குக் கொண்ட சிறந்த அரசியல் தலைவனாகவும் இருந்தான். எனினும் அவன் தன் காம வேட்கையை அடக்கிக் கொள்ள இயலாமல் ஒழுக்கக் கேட்டில் ஈடுபட்டான். இந்துக்கள் அவனை அவனுடைய திறமைக்காகப் போற்றுகிறார்கள். ஆனால் அவனுடைய ஒழுக்கக் கேட்டை ஆதரிக்கவில்லை. ஒரு மனிதன் மிகுந்த திறமைசாலியாக இருந்தாலும் எல்லச் சிறந்த குணங்களும் அவனுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதையே இந்திரனின் கதை இந்துக்களுக்குப் போதிக்கிறது.

(1. ஒரு சிறந்த மருத்துவர் மோசடிகள் செய்து நாட்டை ஏமாற்றலாம்.

2. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் ஒரு சிறந்த அறிவியல் நிபுணர். ஆனால் அவர் தன் மனைவிக்குத் துரோகம் செய்து இன்னொரு பெண்ணை மணந்து கொண்டார்.)

மேற்கண்ட உதாரணங்களில் சம்பந்தப்பட்ட மனிதர் தம் திறமைகளுக்காக மட்டுமே போற்றப்படுகிறார்.

**கேள்வி 103** - மோட்சம் அடைவதற்கு வேறு வழிகளில் நம்பிக்கை வைத்திருப்பவர்களிடம் இந்துக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ?

**பதில்** - மோட்சத்துக்கு வேறு வழிகளில் நம்பிக்கை வைத்திருப்பவர்களிடம் இந்துக்கள் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி 104** - இந்துவுக்கு எந்தத் தொழில் அதிகப் பயனளிக்கும் ?

**பதில்** - நல்ல முறையிலும் முழு ஈடுபாட்டுடன் செய்யப்படும் எந்தத் தொழிலும் இந்துவுக்குக் கவுரவமானது தான். எனினும், கடவுள்

உடலுழைப்பையும், தொழில் முயற்சியையும் அதிகம் விரும்புகிறார். ஏனெனில் உழைப்பாலும் தொழில் முயற்சிகளாலுமே சமூகத்தின் செல்வம் வளர்கிறது. உழைப்பவர்களும் தொழில் முனைவர்களும் தங்களுக்குப்பின் இந்தச் செல்வத்தை சமூகத்துக்குக் கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள்.

**கேள்வி 105 -** இந்து சமயத்தின் நிலை பெற்ற தன்மைக்கும், வளர்ச்சிக்கும் எந்தப் பிரிவு அதிகம் பாடுபட்டிருக்கிறது?

**பதில் -** கடவுள் தம் படைப்புகளை நேசிக்கிறார். அவர்கள் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருந்தால் மகிழ்ச்சி அடைகிறார். இவ்விஷயத்தில் முதலிடம் உழைப்பாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும்; தொழில் முனைவோருக்கு இரண்டாவது இடம்; அறிஞர்களும் அரசியல்வாதிகளும் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்கள்; மற்ற தொழில்களுக்கு நான்காவது இடம். எனினும் முயற்சிக்கு ஏற்ற அளவு சமூகத்தின் செல்வம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. ஆகையால் சமூக அமைப்பில் உரிய மாற்றம் செய்யப்பட வேண்டும்.

**கேள்வி 106 -** அறிவியலுக்கும் சமயத்துக்குமிடையே முரண்பாடு உண்டா ?

**பதில் -** அறிவியல் பிரபஞ்சத்தை இயற்பியல், உயிரியல், வேதியியல் அடிப்படையில் விளக்கி, இந்த அறிவின் மூலம் கடவுள் படைத்த பிரபஞ்சத்தை இன்னும் முன்னேறச் செய்கிறது. இந்து சமயத்தைப் பொறுத்த வரை அறிவியலுக்கும் சமயத்துக்குமிடையே மோதல் எதுவுமில்லை. யாராவது ஒரு போலித் துறவி அல்லது சாது கடவுளுடன் நேரடித் தொடர்பு வைத்திருப்பதாகவும், அவருடன் உரையாடுவதாகவும் சொல்லும்போதுதான் அறிவியலுக்கும் சமயத்துக்குமிடையே முரண்பாடு நிகழ்கிறது.

கடவுளுக்கு உருவமோ, நிறமோ, வேறு பரிமாணங்களோ கிடையாது. ஆகவே அவரோடு உரையாடுவது இயலாத காரியம். மக்கள் அறிவியல் மனப்போக்கைப் பெற்றுத் தங்கள் மோசடியைக் கண்டுபிடித்துவிடக் கூடாது என்பது இந்த வேடதாரிகளின் விருப்பம். அவர்கள் வெளிப்படையான விவாதத்தைத் தவிர்ப்பதற்காக பலவகைப் போலி வாதங்களைப் பயன்படுத்துகிறார்கள். உண்மையான இந்து சமயம் அறிவியலை

ஆதரிக்கிறது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்களை சமயம் என்று கருதுவது தவறு.

**கேள்வி 107** - மனித இனத்தைப் படைத்தவர் யார் ? ஆதி மனிதன் எவ்வாறு வாழ்க்கை நடத்தினான்?

**பதில்** - இந்து சமயத்தின் கருத்துப்படி மனித இனம் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் பரிணாம வளர்ச்சியின் விளைவாக உலகத்தில் தோன்றியது. ஆதி மனிதனுக்குக் கடவுள் பற்றிய உணர்வு எதுவும் இல்லை;பரிணாம வளர்ச்சி பற்றியும் அவனுக்குத் தெரியாது. அவர்கள் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். அவர்கள் பறவைகளையும், மிருகங்களையும் வேட்டையாடினர், காய் கனிகளைத் தின்றனர், பிறர் உடைமைகளை அபகரித்தனர், பிற குழுக்களைச் சேர்ந்த மகளிரைக் கடத்திக்கொண்டு வந்து வன்முறை மிக்க வாழ்க்கை நடத்தினர். இந்து சமயக் கருத்துப்படி பத்து அவதார வட்டத்தில் மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி நிகழ்ந்திருக்கிறது. முதலில் நீரில் வாழும் மீன்; பிறகு நிலத்தில் வாழும் பன்றி; பிறகு விவசாயத்தின் மூலம் நாகரீக வாழ்க்கையின் தோற்றம் இராமாவதாரத்தில் தெரிகிறது. தற்கால மனித வாழ்க்கையின் முழுமையான அனுபவத்தைக் கிருஷ்ணரின் வாழ்க்கையில் காணலாம்.

**கேள்வி 108** - கடவுள் மனித இனத்தை வாழ்விப்பதற்காக எப்போது வந்தார் ?

**பதில்** - படைப்பின் தொடக்கத்திலிருந்தே கடவுள் இருந்திருக்கிறார். ஆனால் மனிதனால் அறியாமை காரணமாக அவரை அறிந்து கொள்ள இயலவில்லை. கடவுள் பல தூதர்களை அனுப்பினார். ஆனால் அவர்களால் அதிகமாக எதுவும் சாதிக்க இயலவில்லை. ஏனெனில் அப்போது மனிதர் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளத் தேவையான மொழி இல்லை. மேலும் அந்தக் காலத்து மனிதர்கள் எவருக்கும் அடங்காதவர்களாகவும், கொடியவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தங்கள் குழுத் தலைவனைத் தவிர வேறு எவர்க்கும் அடங்கவில்லை. அவர்கள் இயற்கை நிகழ்ச்சிகள், நோய்கள், பயங்கர விலங்குகள், பிற குழுக்கள் இவற்றிடம் அஞ்சினார்கள். தாங்கள் தங்களுக்குப் பிரியமான உணவைத் துறந்தாலோ அல்லது பலியிட்டாலோ தங்களுக்கு இயற்கை விபத்துகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்

என்று அவர்கள் நம்பினார்கள். கடவுள் என்பவர் அசாதாரண சக்தி வாய்ந்த ஒரு அரசன் அல்லது குழுத் தலைவன், அவர் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காகத் தம் தொண்டர்களை அடிமைகளாக நடத்துகிறார், அவர்கள் சுதந்திரமாகச் சிந்திப்பதை விரும்பவில்லை என்று அவர்கள் நம்பினார்கள். ஆகையால் கடவுள் பற்றிய உண்மை வெளிப்படவில்லை. ஆனால் உண்மையில் கடவுள் இந்த அற்ப விஷயங்களுக்காக கவலைப்படுவதில்லை. பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் முதன் முதலாக மானிட இனத்துக்கு உண்மையான கடவுள் சார்ந்த வாழ்க்கை நெறியைக் காட்டினர். இவர்கள் தான் மனித இனத்தின் முதல் சமயகுரவர்கள். இவர்கள் மூலம் தான் மனித இனம் முதன் முதலாகக் கடவுள் அளிக்கும் பாதுகாப்பு பற்றி அறிந்து கொண்டது.

**கேள்வி 109** - ஒருவரது மரணத்துக்குப் பின் அவருடைய சொத்து வாரிசுகளிடையே எவ்வாறு பிரிக்கப்பட வேண்டும் ?

**பதில்** - கடவுளே எல்லாப் பொருள்களின் படைப்பாளர், உரிமையாளர். ஒரு மனிதன் அறிவுத் திறனாலும், அறிவியலின் உதவியாலும் நாட்டின் பொருளாதார அமைப்பை நல்ல முறையில் பயன்படுத்திச் செல்வத்தை விருத்தி செய்கிறான். அவன் இறந்த பின் அவனுடைய மக்களுக்கு அந்தச் செல்வத்துக்கு ஓரளவு தான் உரிமை உண்டு. அவனுடைய செல்வம் முழுமைக்கும் உரிமை படைத்தவள் அவனுடைய மனைவி தான். அவள் இறந்த பின் தான் அச் செல்வம் அவளுடைய குழந்தைகளுக்குக் கிடைக்கும். இவ்வாறு செல்வம் பகிர்ந்தளிக்கப்படும்போது பொருள் ரீதியான துஷ்பிரயோகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வீடு, நிலம் போன்ற அசையாச் சொத்துக்களை இறந்தவனின் பிள்ளைகளும் நகைகள், பணம் இவற்றைப் பெண்களும் பெற வேண்டும்.

திருமணத்துக்குப் பிறகு பெண்கள் வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக ஆகி விடுகிறார்கள். ஆனால் திருமணமாகாமலே வாழ்ந்தாலோ அல்லது விதவையாகிவிட்டாலோ குடும்பத்தின் அசையாச் சொத்திலும் பங்கு பெறலாம். சமமான பங்கீடு சாத்தியமில்லையெனில், உரிய இழப்பீடு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். சொத்துக்கள் கைமாறுமுன் பெண்களுக்குப் பொருளைக் கொடுத்து விட வேண்டும். பங்கீடு செய்வதில்

தகறாறு ஏற்படாமல் இருக்க சமூகத்தின் தகுந்த அறிஞர்களின் உதவியை நாட வேண்டும். பங்குதாரர்களில் எவராவது தன் பங்கை விற்க விரும்பினால் அதை வாங்க மற்றப் பங்குதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இறுதியாக நாட்டின் சட்டம் பங்கீட்டு சம்பந்தமான தகறாறுகளைத் தீர்த்து வைக்கும்.

**கேள்வி 110** - நல்ல இந்துவாக எப்படி ஆகலாம் ?

**பதில் -** நல்ல இந்துவாக வாழ விரும்பும் ஒவ்வொருவரும் இந்து சமயத்தின் மூலத் தத்துவங்களை மதிக்க வேண்டும். அவர் கீழ்க்கண்ட வாக்குறுதிகளை மேற்கொள்ள வேண்டும்:

1. ஆண் பெண் எல்லோரும் கடவுளின் அன்புக்குறியவர்கள். எல்லோருக்கும் வாழ்க்கையை அனுபவிக்க சம உரிமை உண்டு. 2. கடவுள் எல்லா மனிதர்களையும் ஜீவராசிகளையும் இயற்கையையும் படைத்திருக்கிறார். 3. ஒருவரும் கடவுளின் விருப்பத்திற்கெதிராக வாழ்ந்திருக்க முடியாது. 4. மனிதர்கள் கடுமையான உழைப்பின் மூலம் தங்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகக் கடவுள் எல்லோருக்கும் கை, கால், கண், காது, விவேகம் இவற்றை அளித்திருக்கிறார். மனிதன் இவ்வுலகில் நல்ல முறையில் அனுதாப உணர்வோடு வாழ்க்கை நடத்தினால் திருப்தியோடு வாழ்க்கையை அனுபவிக்கலாம். மனிதனின் பாவங்களுக்கும் கெட்ட செயல்களுக்கும் கடவுள் பொறுப்பு அல்ல. 5. ஒவ்வொருவரும் காலையிலும், மாலையிலும் குறைந்தது 15 மந்திரங்களை உச்சரிக்க வேண்டும், ஒவ்வொரு நாளும் 10 நிமிடங்கள் பிராணாயாமம் செய்ய வேண்டும், ஒவ்வொரு மாதமும் ஒரு முறை கூட்டு விருந்தில் பங்கேற்க வேண்டும். (பூர்ணிமையன்று பகல் முழுதும் உண்ணா நோன்பு கடைப்பிடித்து இரவில் எல்லோரும் கூடி விருந்து உண்ண வேண்டும்) 6. நற்செய்கைகளில் துணிவு காட்ட வேண்டும். கோழைத்தனத்தை வெறுக்க வேண்டும். 7. வாழ்க்கையில் ஏதாவது விஷயத்தில் சந்தேகம் தோன்றினால் வேதம் அல்லது கீதையைப் படித்து அதற்குத் தீர்வு காண முயல வேண்டும்.

# வேத அடிப்படையில் இந்து சமயம்

வேதம் பாவம் என எதையும் ஒப்புக்கொள்வதில்லை. அது தவற்றை மட்டும் ஒப்புக்கொள்கிறது. தன்னைப் பலவீனனாகவும், எப்போதும் பாவியாகவும் கருதுவதே மிகப் பெரிய தவறு என்பது வேதத்தின் கருத்து.

உலகத்தில் அறியப்படும் எல்லா சமயத் தத்துவங்களிலும் மிகவும் பழைமையானது வேதங்களால் கூறப்பட்டுள்ள சமயத் தத்துவம். கிருஸ்துவின் பிறப்புக்கு 18,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வேதங்கள் பயிலப்பட்டு வருகின்றன. ஆகவே இந்து சமயத்தின் வயது சுமார் 20,000 ஆண்டுகள். வேதத் தத்துவங்களிலிருந்தே உலகிலுள்ள எல்லா மதத் தத்துவங்களும் தோன்றியுள்ளன. வேத சமயத்தின் பழைய பெயர் சநாதன தருமம். பிற்காலத்தில் இது இந்து தருமம் அல்லது வைதிக இந்து தருமம் அல்லது வைதிக இந்து சமயம் என அழைக்கப்பட்டது.

கிருஸ்துவின் பிறப்புக்கு 4500 ஆண்டுகளுக்கு முன்பு வரை சநாதன தருமம் இடையூறின்றி வழங்கி வந்தது. ஏறக்குறைய கி.மு 4500ம் நூற்றாண்டில் பாரதம் வடமேற்கு எல்லையிலிருந்து வந்த அன்னிய நாட்டுப் படைகளால் தாக்கப்பட்டது. அவர்கள் பாரத நாட்டு நாகரீகத்தை சிந்து நதிக்கரை நாகரீகம் என்று அழைத்தனர். இதனால் சநாதன தருமம் இந்து சமயம் என்று பெயர் பெற்றது.

'சநாதன' என்றால் 'எப்போதும் இருப்பது' ; 'தருமம்' என்றால் மனிதத் தன்மையுள்ள நல்வாழ்வில் நம்பிக்கை.

வெளிநாட்டவர் மூலம் பாரதம் ஆக்கிரமிக்கப்பட்ட காலத்திலிருந்து கலியுகம் தொடங்கியது. அறிவியல் அடிப்படைக் காரணங்களால் கலியுகத்தில் வேதங்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழந்து விட்டன. சடங்குகள் தொடர்பான பல தோத்திரங்கள் அதில் இடம் பெற்றதால் ஓரளவு தூய்மையை இழந்தன.

வைதிக மதம் பாரதத்தை அதன் அறிவியல் மற்றும் தத்துவ அடிப்படையில் நிலை நிறுத்தியது. அது உயர்ந்த மனிதத்துவ மதிப்பீடுகளையும் எல்லா ஜீவன்களிடமும் அன்பையும் போதித்தது. வேதங்களின் சக்திக்குக் காரணம் அவற்றில் அடங்கியுள்ள அசாதாரணத் திறமையே ஆகும்.

முறையாக வேதம் பயில்பவர்களின் குடும்பங்களும், உறவினர்களும் ஆரோக்கியமாக வாழ்வார்கள். அவர்களைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையம் அமைந்துவிடும். இதுவரை பல சோதனைகளில் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த அதிசய நிகழ்வுக்கு விளக்கமெதுவும் கிடைக்கவில்லை.

ஓரிடத்தில் பலர் கூடி வேத பாராயணம் செய்தால் சாவின் விளிம்பில் இருக்கும் நோயாளியின் நோய் தீர்ந்து விடும். வேதங்களைத் தொடர்ந்து பயின்று அவற்றின் போதனைகளைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் வெற்றியும் அமைதியும் கிடைக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

கி.மு 4500ம் ஆண்டில் ஆசியா மைனர், பாரசீகம், ஐரோப்பா ஆகிய இடங்களிலிருந்து படையெடுத்தவர்கள் சிந்து நதியின் கரைப் பிரதேசத்தை ஆக்கிரமித்தபோது வைதிக மதத்தின் வீழ்ச்சி தொடங்கியது. இரான் நாட்டு மதத்தில் ஜாதுஷ்டராவின் மதத்தை விட வேதத்தின் தாக்கம் அதிகமாயிருப்பதால் அந்நாட்டு மதத் தத்துவங்களுக்கும் வேதத் தத்துவங்களுக்கும் இடையே அதிக ஒற்றுமை காணப்படுகிறது.

மூல வேதங்களின் கொள்கை 'ஒரு கடவுள்' கொள்கையாகும். அத்துடன் இரானின் சூரிய பூசனை, இந்திரன் பூசை, மிருக பலி வழக்கம் ஆகியவை பலவந்தமாகச் சேர்க்கப்பட்டன. இவ்வாறு மதக் கொள்கைகளின் பரிமாற்றத்தால் வெளிநாட்டவர் பாரதத்தின் செல்வச் செழிப்பு பற்றி அறிந்து கொண்டு அந்தச் செல்வத்தைப் பறித்துக் கொள்ளப் பாரதத்தை ஆக்கிரமித்தார்கள். பாரதத்துக்குள் வந்த பிறகு அவர்கள் தங்கள் மதத்தையும், பழக்க வழக்கத்தையும் உள் நாட்டவர் மீது வலுக்கட்டாயமாகத் திணித்தனர். அவர்கள் உள் நாட்டவரை சமூக மட்டத்திலும், மதத்தளவிலும் அடிமைப்படுத்தினர். பாரத நாட்டவர் ஆதி காலத்திலிருந்து இறுதி வரை வன்முறையற்ற சமாதான சகவாழ்வில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். துரதிருஷ்டவசமாக அவர்கள் கட்டுப்பாடு, போர்க்கலை, தற்காப்பு இவற்றிற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லை. இதன் விளைவாக அவர்கள் எப்போதும் பலவீனர்களாகவே இருந்தார்கள். பண்டைக் காலத்தில் நாலந்தா பல்கலைக் கழகத்தில் சுமார் நூறு கலைகள் கற்பிக்கப்பட்டன.

ஆனால் அங்கு போர்க்கலை கற்பிக்கப்படவில்லை.

வேதங்களில் தற்போது எஞ்சியிருப்பவை மூல வேதங்களும் அவை பற்றி உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள விளக்கங்களும்தான். இந்த விளக்கங்கள் பலவகைப் பட்டவை. இவை வேதங்களின் தோற்றம் பற்றிய விரிவான செய்திகளாகும். வேதத் தோத்திரங்களைக் கடவுள் முதலில் பிரும்மா, விஷ்ணு, சிவனுக்கு அளித்தார். அவை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ரிஷிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டன என்ற கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ரிஷிகள் இவற்றை மனப்பாடம் செய்து நினைவில் வைத்திருந்தார்கள். கி.மு 18,000ம் ஆண்டிலிருந்து கி.மு 1000ம் ஆண்டு வரை வேதங்களின் தாக்கம் தொடர்ந்தது. பிறகு

திடீரென்று ஒரு சூனிய நிலை ஏற்பட்டது. இப்போது நமக்குக் கிடைக்கும் வேதங்கள் ஜெர்மன் மற்றும் பிரிட்டிஷ் அறிஞர்களால் எழுதப்பட்டவை. இவற்றில் சடங்குகள் பற்றிய செய்திகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. மூல வேதங்களை இப்போதும் சில ரிஷிகள் தங்களிடமே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வேதம் கற்பித்த பள்ளிகளின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் எப்போது நிகழ்ந்தன என்பதைத் தெளிவாகச் சொல்ல இயலாது. சில நூறு பள்ளிகளின் பெயர்கள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றில் சிலவற்றைத் தவிர மற்றவை பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. இந்தச் சிலவற்றின் சில படைப்புகள் எஞ்சியுள்ளன. உதாரணம் - ஐதரேய மற்றும் சாங்கியாயன, ருக் வேத மற்றும் ஆபஸ்தம்ப, மற்றும் யஜுர்வேத மார்க்கம்.......

எல்லாவற்றையும் விடப் பழைய படைப்புக்களை ஒப்பிட்டு நோக்கில் அதிக மதிப்புடையவை நான்கு தொகுப்புகள். இவையே வேதங்கள் என்று கூறுகிறோம். இவையாவன - ருக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம். இவற்றின் அடிப்படையில் தோன்றிய பிற்காலப் படைப்புக்களையும் விரிவான பொருளில் வேதம் என்றே சொல்கிறோம்.

இவ்வேதங்களில் ருக் வேதம் (கவிதை வேதம்) மிகவும் பழமையானது. 'ஓம்' என்ற அடையாளத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட அதன் சுமார் ஆயிரம் தோத்திரங்களும் கடவுள் பற்றியவை. பெரும்பாலானவை நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஒரே கடவுளைப் பற்றியே பேசுகின்றன. பொதுவாக இவற்றுக்குச் சடங்குகளுடன் தொடர்பு இல்லை. ருக் வேதத்தின் பல்வேறு பகுதிகள் கடவுளை உள்ளூர அனுபவிப்பதற்காகவே இயற்றப்பட்டுள்ளன.

சாம வேதத்தின் (மந்திரங்களின் வேதம்) பெரும்பாலான பகுதி ருக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது. இது இயற்றப்பட்டதன் நோக்கம் இசைக் குறிப்புகளின் உதவியோடு கடவுளின் செய்தியைக் கவர்ச்சிகரமாக்கிப் பொது மக்களிடம் சேர்ப்பிப்பதே ஆகும்.

யஜுர் வேதம் தொட்க்கத்தில் யாகம் முதலிய சடங்குகளுக்கான மந்திரங்கள் அடங்கியதாய் இருந்தது. பிற்காலத்தில் அதில் இடம் பெற்ற விஷயங்களைக் கொண்டு ஈஷா உபநிடதம் இயற்றப்பட்டது.

அதர்வ வேதம் தனி மனித உறவுகள், சடங்குகள் பற்றியது.

காலப் போக்கில் 'பிராமண'ங்களின் விளக்கங்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். பிராமணங்களுக்கும் 'சாதி'க்கும் தொடர்பில்லை. பிராமணம் ஒரு வகைப் படைப்புகளின் பெயர். இவை மனப்பாடமாகச் சொல்லும் நோக்கத்தில் இயற்றப்பட்டவை. உரைநடையிலுள்ள இவை வேதங்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டவை; வேதங்களின்

சூத்திரங்கள் மற்றும் சடங்குகளின் விளக்கங்கள் அடங்கியவை.

'ஆரண்யக'ங்கள் கிருஸ்து பிறப்பதற்கு சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டவை. இவற்றிலுள்ள மர்மமான, இயற்கையை விஞ்சிய தத்துவங்களை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு இவற்றை மக்களின் குடியிருப்புகளிலிருந்து தொலைவில் காடுகளில் வாழ்ந்து கொண்டு பயில வேண்டியிருந்தது. இவற்றில் முக்கியமாகச் சடங்குகளின் மர்மத் தத்துவத்தை உணர்த்தும் விளக்கங்கள் இடம் பெற்றன.

இறுதியில் எல்லாவற்றையும் விட மிகவும் மதிப்பு வாய்ந்த உபநிடதங்கள் கி.மு 16,000 - 1,000 ஆண்டு காலத்தில் இயற்றப்பட்டன. சாதாரண மக்களுக்கும் புரிய வைக்கும் நோக்கத்தில் அறிவுரைகளடங்கிய கதைகள் மற்றும் உரையாடல்கள் மூலம் மிகவும் கடினமான தத்துவங்கள் இவற்றில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன இந்த உபநிடதங்களின் எண்ணிக்கை 13.

வேதத் தொகுப்புகள் (சம்ஹிதைகள்), பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் ஆகியவை 'ச்ருதி' என அழைக்கப்படுகின்றன. வியப்புக்குரிய விஷயம் என்னவெனில், வேதங்களை உருப் போட்டுச் சொல்வதால் ஏற்படும் அதிசய சக்தியின் ரகசியத்தை எத்தகைய அறிவியல் விளக்கத்தாலும் புரிந்து கொள்ள இயலவில்லை. 1,000 ஆண்டுகளுக்குப் பாரத மக்கள் பிற சமயங்களைச் சார்ந்த வெளிநாட்டாரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தாலும் அவர்கள் இப்போதும் சநாதன தருமத்தில் - அதாவது இந்து சமயத்தில் - இந்து சமயத்தில் நம்பிக்கையுடையவர்களாக இருந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. வேறு பல நாடுகளோ பிற சமயத்தாரின் ஆதிக்கத்தின் கீழ் மதம் மாறி விட்டன. வேதப் பயிற்சி பாரத மக்களுக்கு அசாதாரண உறுதியை அளித்திருக்கிறது.

ஆர்வமுள்ள வாசகர்கள் படித்துப் பயன் பெறுவதற்காகச் சில பயனுள்ள வேதத் தோத்திரங்கள் இங்கு தரப்படுகின்றன.

# வேத சுலோகங்கள்

वेदोऽखिलो-धर्ममूलम् ॥1॥

வேதோ அகிலோ தர்ம மூலம்

வேதங்கள் எல்லாத் தருமத்துக்கும் ஆதாரமாகும்.

मधु मे जिह्वायां दधातु परमश्वर ।
येनाऽहं सर्वप्रिय: सर्वजनेभ्य: भूयासम् ॥2॥

மதுமே ஜிஹ்வாயாம் ததாது பரமேஸ்வர
யேனாஹம் சர்வ ப்ரியஹ சர்வஜனேப்யஹ பூயாஸம்

ஒளியின் தேவதையே ! நான் மக்கள் கூட்டத்துக்கு வேதத்தின் அபூர்வமான செய்தியைச் சொல்லும் வகையில் என்னை இனிமையால் நிரப்பு.

नासदासीन्नो सदासीत् तदानीं नासीद्रजो नो व्योमा परो यत् ।
किमावरीव: कुह कस्य शर्मन्नम्भ: किमासीद् गहनं गभीरम् ॥
न मृत्युरासीदमृतं न तर्हि न रात्रया अह्न आसीत् प्रकेत: ।
आनीदवातं स्वधया तदेकं तस्माद्धान्यन्न पर: किं चनास: ॥
तम: आसीत् तमसा गूळहमग्रे ऽप्रकेतं सलिलं सर्वमा इदम् ।
तुच्छयेनाभ्वपिहितं यदासीत् तपसस्तन्महिनाजायतैकम् ॥3॥

நாஸதாஸீன்னோ ஸதாஸீத் ததானீம் நாஸீத்ரஜோ நோ வ்யோமா பரோயத்;
கிமாரீவஹ குஹ கஸ்ய சர்மன்னம்பஹ கிமாஸீத் கஹனம் கபீரம்.
நா ம்ருத்யுராஸீதம்ருதம் ந தரி ந ராத்ரயா அஹ்ன ஆஸீத் ப்ரேகதஹ;
ஆனீத வாதம் ஸ்வதயா ததேகம் தஸ்மாத்தான்யன்ன பரஹ கிம் சனாஸஹ;
தம: ஆசீத் தம்ஸா குளஹமக்ரே அப்ரகேதம் ஸலிலம் ஸர்வமா இதம்;
துச்சயேனாப்வபிஹிதம் யதாஸீத் தபஸஸ்தன்மஹினாஜாயதைகம்.

அந்தச் சமயத்தில் இருப்பும் இல்லை, இல்லாமையும் இல்லை. காற்று இல்லை, வானம் இல்லை, ஆழமான கடற் பரப்பு இல்லை, மரணம் இல்லை, அமரத்துவம் இல்லை, பகல் இல்லை, இரவு இல்லை. அந்தப் புருஷன் மட்டுமே இருந்தார். அவரைத் தவிர வேறு எதுவும் இல்லை. எல்லாம் இருளாக சூனியமாக இருந்தது. பிறகு காற்றினால் சூழப்பட்டது. அதன் பிறகு பரந்த நீர் மண்டலம் படைக்கப்பட்டது. சர்வ சக்திமானான அந்தப் புருஷன் வெளிப்பட்டார்.

यत्राग्निश्चन्द्रमा: सूर्यो वातस्तिष्ठन्त्यर्पिता:
स्कम्भं तं ब्रूहि कतम: स्विदेव स:
यस्य त्रयस्त्रिंशद्देवा अङ्‌सर्वे समाहिता ॥4॥

யத்ராக்னிஸ்சந்த்ரமாஹா ஸூர்யோ வாதஸ்திஷ்டந்த்யர்பிதாஹா
ஸ்கம்பம் தம் ப்ரூஹி கதமஹ ஸ்விதேவ ஸஹ
யஸ்ய த்ரயஸ்திம்சத்தேவா அங்கே ஸர்வே ஸமாஹிதாஹா.

பிரபஞ்சத்தைத் தாங்கியிருப்பவர் யார்? நெருப்பு, சந்திரன், சூரியன், இரவு இவற்றைத் தாங்கி நிற்கும் ஒரே புருஷன் யார் ? ஈசுவரனின் (கடவுளின்) ஒளியின் விசித்திர உருவங்களாக எல்லாத் தேவதைகளும் அவரது மகிமையின் எதிரொளியில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

पुण्डरीकं नवद्वारं त्रिभिर्गुणैरावृतम् ।
तस्मिन् यद् यक्षमात्मवत् तद् वै ब्रह्मविदो विदु: ॥5॥

புண்டரீகம் நவத்வாரம் த்ரிபிர் குணைராவ்ருதம்;
தஸ்மின் யத் யக்ஷமாத்மவத் தத் வை ப்ரம்மவிதோ விதுஹு.

மனித உடல் ஒன்பது இதழ்கள் கொண்ட தாமரை போன்றது. அதற்கு ஒன்பது வாயில்கள் உண்டு. சத்வ, தம, ரஜ என்று மூன்று குணங்கள் உண்டு. வேதம் பயின்றவர்கள் இதை அறிவார்கள். இந்த மூன்று குணங்களும் அதிகமாகவோ குறைவாகவோ எல்லா மனிதர்களிடமும் உள்ளன. நெஞ்சுக்குள் தாமரை போல இதயம் இருக்கிறது.

அதில்தான் கடவுள் வீற்றிருக்கிறார்.

ईश्वर: परमैकस्वरूप: ॥
स नित्य:सर्वव्यापी विभुरनादिरनन्तश्च स निराकारो निरूपो वर्णनातीतो निष्कम्पश्च ।
क्वचित् शब्दरूपेण स आत्मानं प्रकाशयति स विधाता
कारणानां कारणं तथा सर्वशक्तिमान् तदिच्छापुरणाय कस्यापि सहायस्य प्रयोजनं न वर्तते।
यतो द्वितीय: कोऽपि नास्ति ॥6॥

ஈஸ்வரஹ பரமைகஸ்வரூபஹ.
ஸ நித்யஹ ஸர்வவ்யாபி விபுரனாதிரனந்தஸ்ச ஸ நிராகாரோ நிரூபோ வர்ணனாதீதோ நிஷ்கம்பஸ்ச;
க்வசித் சப்தரூபேண ஸ ஆத்மானம் ப்ரகாசயதி ச விதாதா
காரணானாம் காரணம் ததா ஸர்வ சக்திமான் ததிச்சா பூரணாய
கஸ்யாபி ஸஹாயஸ்ய ப்ரயோஜனம் நவர்த்ததே;
யதோ த்விதீயஹ கோஅபி நாஸ்தி.

யதோ த்விதீயஹ கோஅபி நாஸ்தி.

கடவுள் ஒரே பரம புருஷன். அவர் எல்லாவற்றையும் கடந்தவர். எங்கும் வியாபித்திருப்பவர். முதலும் முடிவும் அற்றவர். அவருக்குத் தொடக்கமும் இல்லை. முடிவும் இல்லை. அவருக்கு உருவமில்லை, நிறமில்லை. அவர் வர்ணனைக்கு அப்பாற்பட்டவர், அதிர்வற்றவர். சில சமயம் சொல்லாக அவர் வெளிப்படுகிறார். அவர் படைப்பவர். எல்லாக் காரணங்களுக்கும் காரணர். அவர் சர்வ சக்தி வாய்ந்தவர். தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள அவருக்கு எந்த உதவியாளரும் தேவைப்படுவதில்லை.

केचित् तत्सायुज्यं लभन्ते, केचिच्च विरहेण वियुज्यन्ते ।
तस्येच्छया सर्व घटते, तेन विना क: कार्यकरणे समर्थ: ? ॥7॥

கேசித் தத்ஸாயுஜ்யம் லபந்தே, கேசிச்ச விரஹேண வியுஜ்யந்தே
தஸ்யேச்சயா ஸர்வம் கடதே, தேன வினா கஹ கார்யகரணே ஸமர்த்தஹ ?

சிலர் அவருடன் ஐக்கியமகிறார்கள், சிலர் பிரிந்துவிடுகிறார்கள் அவருடைய விருப்பத்தால் எல்லாம் நிகழ்கிறது. அவரில்லர்மல் யாரால் தான் செயற்பட முடியும் ?

स वा एष महानज आत्माऽजरोऽमरोऽमृतोऽभयो
ब्रह्माभयं वै ब्रह्म भवति य एवं वेद ॥8॥

ஸ வா ஏஷ மஹானஜ ஆத்மா அஜரோஅமரோ அம்ருதோ அபயோ
ப்ரம்மாபயம் வை ப்ரம்ம பவதி ய ஏவம் வேத

ஆத்மா விருப்பமற்றது. அதற்குக் குறையேதுமில்லை. மரண பயம் இல்லை. அதற்கு வயது ஏறாது. அது இறக்காது. என்றும் இளமையாக இருக்கும். இந்த உண்மையை உணர்ந்தவர் அச்சமற்றவராக, துணிவு மிக்கவராக இருப்பார்.

एक एवास्ति नापरो विश्वभुवनस्य स्रष्टा ।
पालयिता च संहर्त्ताच पुनरपि सृजनाय तत्
एतदेव दिव्यत्वमीशस्य भास्वत् वर्चसममेयम् ॥9॥

ஏக ஏவாஸ்தி நாபரோ விச்வபுவனஸ்ய ஸ்ரஷ்டா;
பாலயிதா ச சம்ஹர்த்தா ச புனரபி ஸ்ருஜனாய தத்
ஏததேவ திவ்யத்வமீசஸ்ய பாஸ்வத் வர்ச்சஸமமேயம்.

ஒரே ஈசுவரனான அந்தப் புருஷன் பிரபஞ்சத்தைப் படைத்தார், காக்கிறார். மறுபடியும் புதியதோர் பிரபஞ்சத்தைப் படைப்பதற்காக உரிய நேரத்தில் அதை அழிக்கிறார். அவரே எல்லாச் சக்திகளும் வாய்ந்த ஈசுவரன் (கடவுள்).

इश्वरस्तस्यैव दूतरूपेण पृथिव्यां प्रेरयति देवान्।
तस्माच्च प्रभवति मङ्लं समासेनेह मनुष्यमडले ॥10॥

ஈஸ்வரஸ்தஸ்யைவ தூதரூபேண ப்ருதிவ்யாம் ப்ரேரயதி தேவான்;
தஸ்மாச்ச ப்ரபவதி மங்களம் ஸமாஸேனேஹ மனுஷ்ய மண்டலே.

கடவுள் மனித இனத்தின் நலனுக்காக உலகத்தின் பல்வேறு இடங்களுக்குத் தம் தூதர்களை மனித உருவில் அனுப்புகிறார். இந்தத் தேவதைகள் மனிதர்களுக்கு உயர்ந்த, மனித நேயம் மிக்க வாழ்க்கையை நடத்த வழி காட்டுகிறார்கள்.

यथाकामं वा उत्तिष्ठन् वा अनन्यमनसा स्तूयमानश्च भगवन्तम्
सायं प्रातश्च स्व-समाजेन सार्द्धम्
प्रार्थनां कुर्वीताहर्निशं भगवत्-सकाशम् ॥
प्रार्थनया क्षीयते सर्वपापं प्राप्स्यते च स्वर्गम्
भुयिष्ठं परिमार्जनेन लौहमलं यथा प्रयाति
अयश्च भवति परिशुद्धम् ॥11॥

யதாகாமம் வா உத்திஷ்டன் வா அனன்ய மனஸா ஸ்தூயமானஸ்ச பகவந்தம்
ஸாயம் ப்ராதஸ்ச ஸ்வஸமாஜேன சார்த்தம்
ப்ரார்த்தனாம் குர்வீதாஹர்னிசம் பகவத்-ஸகாசம்.
ப்ரார்த்தனயா க்ஷீயதே ஸர்வபாபம் ப்ராப்ஸ்யதே ச ஸ்வர்கம்
பூயிஷ்டம் பரிமார்ஜனேன லௌஹமலம் யதா ப்ரயாதி
அயஸ்ச பவதி பரிசுத்தம்.

மனிதர்கள் காலையிலும், மாலையிலும் தங்களிஷ்டப்படி அல்லது நின்று கொண்டு ஒருமித்த மனத்தோடு கடவுளின் புகழை உச்சரிக்க வேண்டும். இந்தப் புகழ்ச்சியே சுவர்க்கம் பெறுவதற்கான உபாயம். சுத்தப்படுத்தினால் அழுக்கு விலகுவது போல், பிரார்த்தனையால் எல்லாப் பாவங்களும் கழுவப்படுகின்றன.

सर्वेऽत्र जन्मना अमृतस्य पुत्रा अपापविश्वश्च ते ।
क्वचित् कल्मषं च कृत्वा केचिदात्मानं क्लेदयन्ति ॥12॥

ஸர்வே அத்ர ஜன்மனா அம்ருதஸ்ய புத்ரா அபாப வித்தாஸ்ச தே;
க்வசித் கல்மஷம் ச க்ருத்வா கேசிதாத்மானம் க்லேதயந்தி.

எல்லோரும் பாவமற்ற நிலையில் அமிருத புத்திரர்களாகப் பிறக்கிறார்கள். எங்காவது குற்றம்செய்து தங்களை வருத்திக் கொள்கிறார்கள்.

उच्चो वा नीचो वा न कोऽपि जनः ।
न च नितरां पापकृन् न वा पवित्रस्वरूपः ॥
ईश्वरकरुणया कश्चित् महत्वं लभते ।
तदिच्छया ऋद्धश्च जायते कश्चित्, श्रमेण तु कश्चिदभ्येति पदमुन्नतम् ॥13॥

உச்சோ வா நீசோ வா ந கோஅபி ஜனஹ;
ந ச நிதராம் பாபக்ருன் ந வா பவித்ரஸ்வரூபஹ.
ஈச்வரகருணயா கஸ்சித் மஹத்வம் லபதே;
ததிச்சயா ரித்தஸ்ச ஜாயதே கஸ்சித், ச்ரமேண து கஸ்சிதப்யேதி பதமுன்னதம்.

எந்த மனிதனும் உயர்ந்தவனும் இல்லை, தாழ்ந்தவனும் இல்லை, பாவியும் இல்லை, புண்ணியசாலியும் இல்லை. கடவுளின் கருணையால் உழைப்பின் மூலம் மகத்துவம் (பெருமை) கிடைக்கிறது. அவரது கிருபையால் சிலருக்குப் பிறப்பிலேயே உயர்வு கிடைக்கிறது. சிலர் உயர்வு பெற உழைக்க வேண்டியிருக்கிறது.

यत्र यत्र मे मनो गच्छति दृश्यते प्रभुम् ।
तस्य कृपां विना न कोऽपि मुक्तिमर्हति ॥14॥

யத்ர யத்ர மே மனோ கச்சதி த்ருஸ்யதே ப்ரபும்;
தஸ்ய க்ருபாம் வினா ந கோஅபி முக்திமர்ஹதி.

எங்கு பார்த்தாலும் கடவுளின் படைப்பையே பார்க்கிறேன். அவரது கருணையின்றி எந்தச் செயலும் வெற்றி யடைவதில்லை.

अक्लेशेन वै सम्भवति ईश्वरस्य गुणकीर्तनम्
तद् गुणानांच निरूपणं तु क्लेशकरमेव प्रतीयते ।
गुरोः कृपया एव तज्ज्ञानमेवाधिगम्यते ॥15॥

அக்லேசேன வை ஸம்பவதி ஈச்வரஸ்ய குணகீர்த்தனம்
தத் குணானாஞ்ச நிரூபணம் து க்லேசகரமேவ ப்ரதீயதே
குரோஹோ க்ருபயா ஏவ தஞ்ஞானமேவாதிகம்யதே.

கடவுளைத் துதிப்பது எளிது. அவரது மர்மத்தின் ஆழத்தை அளவிடுதல்

கடினம். குருவின் கருணையால் உள்ளத்தில் கடவுளனுபவம் எளிதில் கிடைக்கும்.

वेनस्तत्पश्यन्विश्वा भुवनानि विद्वान् यत्र विश्वं भवत्येकनीडम् ।
यस्मिन्निदं सं च विचैति ओत:प्रोतश्व प्रजासु ॥16॥

வேனஸ்தத்பச்யன்விச்வா புவனானி வித்வான் யத்ர விச்வம் பவத்யேகனீடம்;
யஸ்மின்னிதம் ஸம்ச விசைதி ஓதப்ரோதச்வ ப்ரஜாஸு.

எவை நகருகின்றனவோ, எவை அசையாதிருக்கின்றனவோ, எவை நடக்கின்றனவோ, எவை நீந்துகின்றனவோ, எவை பறக்கின்றனவோ அவை எல்லாவற்றிற்கும் தலைவர் ஈச்வரன். அவரால் இந்தப் பிரபஞ்சம் ஒன்று பட்டிருக்கிறது. அவரிடமிருந்தே எல்லாம் தோன்றியுள்ளன.

अमोघाशिषस्तस्मिन्नेव सदैव सन्ति परमेश्वरस्य ।
यो जानाति दु:खत्रयजर्जरो मनुष्येह संसारे ॥
स एव ज्ञातुमर्हति दु:खत्रयस्य हेतवश्च परा-निवृत्तेरुपायश्च तस्य
स वै विजानाति संसारसागरस्य गहनं रहस्यम् ॥17॥

அமோகாசிஷஸ்தஸ்மின்னேவ ஸதைவ ஸந்தி பரமேச்வரஸ்ய
யோ ஜானாதி துக்கத்ரயஜர்ஜரோ மனுஷ்யேஹ ஸம்ஸாரே
ஸ ஏவ ஞாதுமர்ஹதி துக்கத்ரயஸ்ய ஹேதவஸ்ச பரா-நிவ்ருத்தேருபாயஸ்ச தஸ்ய
ஸ வை விஜானாதி ஸம்ஸாரஸாகரஸ்ய கஹனம் ரஹஸ்யம்.

துக்கத்தின் இருப்பு, அதன் காரணம், அதை ஒழிக்கும் வழி இவற்றை உணர்ந்தவரைக் கடவுள் ஆசீர்வாதம் செய்கிறார். இவ்வாறு உணர்ந்தவர் உலக வாழ்வின் உண்மையான வழியை அறிந்தவர் ஆவார்.

वेदपठनं, पुरोहितेभ्यो दानं, यज्ञस्तापशीतादिकैरात्मपीडनम्
अमृतत्त्वलाभाय तपश्चरणमित्यादिकं मोहग्रस्तं परिशुद्धं न करोति ॥18॥

வேதபடனம், புரோஹிதேப்யோ தானம்,
யக்ஞஸ்தாபசீதாதிகைராத்மபீடனம்
அம்ருதத்வலாபாய தபஸ்சரணமித்யாதிகம் மோஹக்ரஸ்தம்
பரிசுத்தம் ந கரோதி.

எவனுடைய மனதின் அழுக்கு அகலவில்லையோ அவனுக்கு வேதப் பயிற்சி, புரோகிதருக்குத் தட்சிணை, கடவுளைக் குறித்து யாகம், சூட்டாலும் குளிர்ச்சியாலும் உடம்பை வருத்திக் கொள்வது, அமரத்துவம் அடைவதற்காகத் தவம் செய்வது இது போன்ற துன்பமளிக்கும் சடங்குகள் இவற்றால் தூய்மை கிடைக்காது.

श्रद्धया पूजितो वै ईश्वरोस्मत्प्रार्थनां पूरयति ।
हे प्रियतम! तवैव सुरक्षाश्रितानां शुभैषणां च गृहाण ॥19॥

ச்ரத்தயா பூஜிதோ வை ஈச்வரோஸ்மத்ப்ரார்த்தனாம் பூரயதி;
ஹே ப்ரியதம! தவைவ ஸுரக்ஷாச்ரிதானாம் ச்ருபைஷணாம் ச க்ருஹாண.

முழு ஈடுபாட்டுடன் கடவுளுக்குச் செய்யப்படும் ஒவ்வொரு பிரார்த்தனையையும் அவர் ஏற்றுக் கொள்கிறார். கடவுளே, அன்புக்குரியவரே! உங்களைச் சரணடைந்த பக்தர்களின் எல்லா நல்லெண்ணங்களையும் ஏற்றுக்கொள்ளும்!

अन्तश्चरन्ति मनसि कामास्तेभ्यो उदितानि
सर्वाणि चेष्टितानि कर्माणि इहलोके ॥
एतान् कामान् विलोक्यते विधाता ईशलोके
नराणां शुभाशुभ-कर्मफल-विधानकाले ॥
तीक्ष्णभाषणरताश्च ये, ये चातिदर्पपरायणा:
तेषाम् कृते स्वर्गो भवति पराङ्मुखः सर्वदा ॥20॥

அந்தஸ்சரந்தி மனஸி காமாஸ்தேப்யோ உதிதானி
ஸர்வாணி சேஷ்டிதானி கர்மாணி இஹலோகே.
ஏதான் காமான் விலோக்யதே விதாதா ஈசலோகே
நராணாம் சுபா சுப-கர்மபல-விதானகாலே.
தீக்ஷ்ண பாஷண ரதாஸ்ச யே, யே சாதிதர்ப்பபராயணாஹா
தேஷாம் க்ருதே ஸ்வர்கோ பவதி பரார்ங்முகஹ ஸர்வதா.

மனிதர்களின் மனதில் ஆசைகள் உதிக்கின்றன. அவற்றின் விளைவாக அவர்களுடைய செயல்கள் நிகழ்கின்றன. அவர்களுடைய நல்ல, கெட்ட கருமங்களின் பலங்களைத் தீர்மானிக்கும்பொழுது கடவுள் அவர்களுடைய ஆசைகளைக் கருத்தில் கொள்கிறார். அகம்பாவக்காரர்களும், கடுமையாகப் பேசுபவர்களும் சுவர்க்கத்தில் நுழைய இயலாது.

नायमात्मा प्रवचनेन लभ्य: न मेधया न बहुधा श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनुं स्वाम् ॥21॥

நாயமாத்மா ப்ரவசனேன லப்யஹ ந மேதயா ந பஹுதா ச்ருதேன,
யமைவேஷ வ்ருணுதே தேன லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே
தனும் ஸ்வாம்.

வெறும் பேச்சால் கடவுளை அடைய முடியாது. புத்தித் திறனாலும் கேள்வித் திறனாலும் அவர் அடையக் கூடியவரல்லர். யார் அவரை அன்போடு வரிக்கிறாரோ அவருக்கே கடவுள் எளிதில் கிட்டுகிறார்.

शुभेषणा सत्यमक्रोधश्च शुद्धता सत्यवादिता
प्रेम-दयादयो गुणैरन्विताश्च ये जना: ईश्वरस्तेषां प्रसीदति ॥22॥

ஶுபேஷணா சத்யமக்ரோதஸ்ச சுத்ததா சத்யவாதிதா
ப்ரேம-தயா தயோ குணைரன்விதாஸ்ச யே ஜனாஹா
ஈஸ்வரஸ்தேஷாம் ப்ரஸீததி.

நல்லெண்ணம், அன்பு, தூய்மை, உண்மைப் பேச்சு, இரக்கம் ஆகிய குணங்கள் எவரிடம் உள்ளனவோ அவரைக் கடவுள் நேசிக்கிறார்.

यावन्नैव आस्था ईश्वरे भवति पूर्णा
तावन्नाकपृष्ठं च भवति सुदुस्तरम्
सा आस्था च तावन्न याति पूर्णतां यावदास्तिकेषु न जायते प्रीति: ॥23॥

யாவன்னைவ ஆஸ்தா ஈஸ்வரே பவதி பூர்ணா
தாவன்னாகப்ப்ருஷ்டம் ச பவதி சுதுஸ்தரம்
ஸ ஆஸ்தா ச தாவன் நயாதி பூர்ணதாம் யாவதாஸ்திகேஷு நஜாயதே ப்ரீதிஹி.

நம்பிக்கையற்றவன் சுவர்க்கத்தில் நுழைய இயலாது. கடவுளை நம்பும் அனைவரையும் நேசிக்கும்போதுதான் நம்பிக்கை முழுமை பெறும்.

प्रतिनियतं प्रार्थनां कुर्वीत सदा तदर्थभावनया सह ।
ततो वै दृश्यते भगवदुद्भासं भाग्यश्रीश्च भवति प्रसन्ना ॥24॥

ப்ரதினியதம் ப்ரார்த்தனாம் குர்வீத ஸதா ததர்தபாவனயா ஸஹ
ததோ வை த்ருஸ்யதே பகவதுத்பாஸம் பாக்யஸ்ரீஸ்ச பவதி ப்ரஸன்னா.

தொடர்ந்து ப்ரார்த்தனை செய்பவனுக்கு அதிருஷ்டம் அனுகூலமாக இருக்கும். கடவுளின் ஒளி அவனுக்குக் கிட்டும்.

दर्शन-गणितशास्त्रपारगानां भगवत्-प्रेषितमहाजनानाम्
प्रतिवोधसुकरं तु भगवत्-सृष्टिरहस्यं गहनं गभीरम् ॥
यश्च यस्य धर्ममार्गस्तत: प्रतीपगमनमीश्वरस्यासहनीयम् ॥25॥

தர்கன-கணித சாஸ்த்ர பாரகானாம் பகவத் ப்ரேஷித மகாஜனானாம்
ப்ரதிபோதஸுகரம் து பகவத்-ஸ்ருஷ்டி ரஹஸ்யம் கஹனம் கபீரம்.
யஸ்ச யஸ்ய தர்ம மார்கஸ்ததஹ ப்ரதீபகமனமீஸ்வரஸ்யாஸஹனீயம்.

தத்துவ ஞானிகள், கணித அறிஞர்கள், கடவுளால் அனுப்பப்பட்ட பெரியோர்கள் ஆகியோர் கடவுளின் படைப்பின் ஆழத்தை எளிதில் உணர்ந்து கொள்வார்கள். தருமத்திலிருந்து பிறழ்பவனைக் கடவுள் பொறுத்துக் கொள்வதில்லை.

पापरहिताश्च भूत्वा श्रद्धया सेवामहे ईश्वरं नित्यम् ।
महान् वै ईश्वरो धी-हीनानां धियं यः प्रचोदयति ॥
तद्वदिहलोके वर्त्तते यः प्राज्ञो धी-सम्पत्समृद्धः ।
स एव नयेत् सुपथा यावदल्पज्ञान् जनान् पृथिव्याम् ॥26॥

பாப ரஹிதாஸ்ச பூத்வா ஸ்ரத்தயா ஸேவாமஹே ஈஸ்வரம் நித்யம்;
மஹான் வை ஈஸ்வரோ தீ-ஹீனானாம் தியம் யஹ ப்ரசோயதி.
தத்வதுஹலோகே வர்த்ததே யஹ ப்ராக்ஞோ தீ-ஸம்பத் ஸம்ருத்தஹ;
ஸ ஏவ நயேத் ஸுபதா யாவதல்பக்ஞான் ஜனான் ப்ருதிவ்யாம்.

நாங்கள் பாவங்களிலிருந்து விடுபட்டுக் கடவுளின் சேவை செய்வோமாக ! மகானாகிய கடவுள் அறிவற்றவர்களின் அறிவை விழித்தெழச் செய்கிறார். அதுபோல் இவ்வுலகில் அறிவுச் செல்வம் பெற்றவனே அறிவு குறைந்தவர்களை நல்வழியில் நடத்திச் செல்லவேண்டும்.

ईश्वरस्य महद्दानं विवेको विद्यते नृणाम् ।
तस्मादधिकतरं समर्थसाधनमिष्टतरं वा न किंचनास्ति
तत्त्वविदाय सम्यक् ॥27॥

ஈஸ்வரஸ்ய மகத்தானம் விவகோ வித்யதே ந்ருணாம்
தஸ்மாததிகதரம் ஸமர்த்த ஸாதனமிஷ்டதரம் வா ந கிஞ்சநாஸ்தி
தத்வவீதாய ஸம்யக்.

கடவுள் மனிதனுக்கு விவேக புத்தியைப் பெரிய தானமாக அளித்திருக்கிறார். இந்த விவேக புத்தியை விட அழகான, விரும்பத்தக்க பொருள் வேறெதுவுமில்லை. மனிதன் சத்திய வழி எது, தவறான வழி எது என்பதைத் தன் விவேக புத்தியால் அறிந்து கொள்கிறான்.

नग एव धरामेति, नगश्च प्रतिगच्छति ।
यद्दैवविहितं कर्म तत्तु साध्यं प्रयत्नतः ॥28॥

நக்னஏவ தராமேதி, நக்னஸ்ச ப்ரதிகச்சதி
யத்தைவவிஹிதம் கர்ம தத்து ஸாத்யம் ப்ரயத்னதஹ.

மனிதன் அம்மணமாகவே உலகில் பிரவேசிக்கிறான். அம்மணமாகவே விடைபெறுகிறான். அவன் கடவுள் விதித்த விதிக்குத் தக்கபடி கருமங்களைச் செய்ய வேண்டும்.

स एव सुखी सदैव यः स्वार्थपरतामत्येति सर्वशः
सत्यं तेनैव लब्धं शान्तिः शाश्वती तेनैव चाप्ता ॥29॥

ஸ யேவ ஸுகீ ஸதைவ யஹ ஸ்வார்த்தபரதாமத்யேதி ஸர்வசஹ;
ஸத்யம் தேனைவ லப்தம் சாந்திஹி சாஸ்வதீ தேனைவ சாப்தா.

எல்லா வகை சுயநலங்களையும் வெற்றி பெறுபவர் சுகம் எய்துவார், அமைதி பெறுவார், சத்தியத்தைக் கண்டு பிடிப்பார்.

जीवनं यथाप्तं तमेव वरेण्यमिति विचिन्त्य
गतासूनां च पूरणशक्यं धर्मानुगं यस्य जीवितम् ।
जरया पीड्यमानोऽपि यस्तामभिनन्दति च
तेनैव लभ्यं भगवत्-प्रसादं दीर्घमायुश्चेति ध्रुवम् ॥30॥

ஜீவனம் யதாப்தம் தமேவ வரேண்யமிதி விசிந்த்ய
கதாஸூனம் ச பூரணஸக்யம் தர்மானுகம் யஸ்ய ஜீவிதம்;
ஜரயா பீட்யமானோஅபி யஸ்தாமபினந்ததி ச
தேனைவ லப்யம் பகவத்-ப்ரசாதம் தீர்கமாயுஸ்சேதி த்ருவம்.

கிடைத்த வாழ்க்கையையே சிறந்ததாகக் கருதி, முன்னோரின் மரணத்தால் ஏற்பட்ட சூனியத்தைப் பின் வரும் தலைமுறைகளால் நிரப்பி, தருமத்திற்கேற்ற வாழ்க்கையை வாழ்பவனும், முதுமையால் பீடிக்கப்பட்டாலும் அதை வரவேற்பவனும் கடவுளின் அருளைப் பெற்று நீண்ட, ஆரோக்கியமான ஆயுளைப் பெறுவர்.

ये विश्वासनिर्वाहं कुर्वन्ति स्व-वचनात् कदापि न प्रविचलन्ति।
ईश्वरनाम्ना कृतां प्रतिज्ञां निर्वाहयन्ति ते वै विश्वास-परायणाः ॥31॥

யே விச்வாஸ நிர்வாஹம் குர்வந்தி ஸ்வ-வசனாத் கதாபி ந ப்ரவிசலந்தி;
ஈஸ்வரநாம்னா க்ருதாம் ப்ரதிக்ஞாம் நிர்வாஹயந்தி தே வை விச்வாஸ-பராயணாஹா.

யார் தங்கள் வாக்கைக் காப்பாற்றுகிறார்களோ, மனிதர்களுக்குக் கொடுத்த வாக்கைக் கடவுளுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கருதி அதை நிறைவேற்றுகிறார்களோ, அவர்களே கடவுள் மேல் நம்பிக்கை உடையவர்கள்.

प्रीतिं विना भगवद्भक्तेषु श्रद्धा नैव परिपूर्यति ।
श्रद्धां विना नूनं भवति स्वर्गः प्रवेशदुष्करः ॥32॥

ப்ரீதிம் வினா பகவத்பக்தேஷு ச்ரத்தா நைவ பரிபூர்யதி;
ச்ரத்தாம் வினா நூனம் பவதி ஸ்வர்கஹ ப்ரவேசதுஷ்கரஹ.

கடவுளின் பக்தர்களிடம் அன்பில்லையேல் கடவுளிடம் பக்தி முழுமை பெறாது. அத்தகைய பக்தி இல்லாதவர்கள் சுவர்க்கத்தில் நுழைய இயலாது.

यदा सन्तोषमाप्नोति सत्कार्येण असत्कार्येण क्लिश्यति ।
तदैव हि भवेन्नरः सत्यं सत्यमीश्वरास्थितः ॥33॥

யதா ஸந்தோஷமாப்னோதி சத்கார்யேண அஸத்கார்யேண க்லிஸ்யதி;
ததைவ ஹி பவேன்னரஹ ஸத்யம் ஸத்யமீஸ்வராஸ்திதஹ.

நீ செய்யும் நல்ல காரியம் உனக்கு மகிழ்ச்சியும், கெட்ட செயல் வருத்தமும் அளித்தால் நீ உண்மையில் கடவுள் பக்தன்.

अन्नं यो ददाति बुभुक्षितेभ्यः पीडितानां भवति सहायकः ।
दुःखातान् समाश्लिष्यति तस्यैव ईशः प्रसीदति ॥34॥

அன்னம் யோ ததாதி புபுக்ஷிதேப்யஹ பீடிதானாம் பவதி ஸஹாயகஹ;
துக்கார்த்தான் ஸமாஸ்லிஷ்யதி தஸ்யைவ ஈசஹ ப்ரசீததி.

பசித்தவர்களுக்கு உணவளிப்பவன், துன்புற்றவர்களுக்கு உதவி செய்பவன், வருத்தமுற்றவர்களின் துக்கத்தைப் போக்குகிறவன்- இவர்களுக்குக் கடவுள் அருள் புரிவார்.

क्षन्तव्याः सर्वजीवाश्च नापि शप्तव्या अरातयश्च ।
एवं ये मन्यन्ते तेषां प्रसीदति केशवः ॥35॥

க்ஷந்தவ்யாஹா ஸர்வஜீவாஸ்ச நாபி சப்தவ்யா அராதயஸ்ச;
ஏவம் யே மன்யந்தே தேஷாம் ப்ரஸீததி கேசவஹ.

எல்லா ஜீவன்களையும் மன்னிப்பவர்கள், எதிரிகளைக் கூட சபிக்காதவர்கள் - இவர்கள் கடவுளுக்குப் பிரியமானவர்கள்.

यद् ददाति दक्षिणहस्तेन तन्न वामो विजानीयात्
एवं समाचरेत् बुध एष ईशानुशासनम् ॥36॥

யத் ததாதி தக்ஷிணஹஸ்தேன தன்ன வாமோ விஜானீயாத்
ஏவம் ஸமாசரேத் புத ஏஷ ஈசானுசாசனம்.

வலது கையால் கொடுக்கப்படும் தானம் இடது கையால் அறியப்படா விட்டால் அந்த தானமே சிறந்தது. அறிஞன் இவ்வாறுதான் தானம் செய்ய வேண்டும் என்பது கடவுளின் கட்டளை.

परत्र प्रयाते नरे कर्म च तस्य नूनं विरमति इहलोके ।
तथापि तस्य त्राण-दान-ज्ञानप्रसारणादि सुकृतस्य कीर्त्या
सुचिरं जीवति स हृदयेषु जनानां प्रीत्या च तमनुचरंति जनाः ॥
येन केन प्रकारेण को हि नाम नु जीवति ।
परेषामुपकारार्थं यज्जीवति स जीवति ॥37॥

பரத்ர ப்ரயாதே நரே கர்ம ச தஸ்ய நூனம் விரமதி இஹலோகே;
ததாபி தஸ்ய த்ராண-தான-ஞானப்ரஸாரணாதி ஸுக்ருதஸ்ய கீர்த்யா
ஸுசிரம் ஜீவதி ஸ ஹ்ருதயேஷு ஜனானாம் ப்ரீத்யா ச தமனுசரந்தி ஜனாஹா.
யேன கேன ப்ரகாரேண கோ ஹி நாம நு ஜீவதி;
பரேஷாமுபகாரார்த்தம் யஜ்ஜீவதி ஸ ஜீவதி.

ஒருவன் மரணமடைந்த பின்னும் அவனது செயல்கள் இவ்வுலகில் நின்று விடுவதில்லை. அவனுடைய பொது நலச் செயல்கள், தான தருமங்கள், கல்விச் சேவை இவற்றை மக்கள் வெகு காலம் நினைத்துக் காண்டிருக்கிறார்கள், அவனைப் பின்பற்றவும் செய்கிறார்கள். எப்படியோ வாழ்ந்துகொண்டிருப்பவன், பெயருக்குத்தான் வாழ்கிறான், பிறருக்கு உபகாரம் செய்வதற்கு வாழ்பவனே உண்மையில் வாழ்பவனாவான்.

ईश्वरसृष्टौ जगति क्रोधद्वेषौ दूरतः परिहर ।
यतो हि द्वावेते मनुष्याणां सुकृतं ग्रसतः निर्मूलयतश्च
यथा अग्निरिन्धनं दहति भस्मीभूतं करोति च ॥38॥

ஈஸ்வரஸ்ருஷ்டௌ ஜகதி க்ரோதத்த்வேஷௌ தூரதஹ பரிஹர;
யதோ ஹி த்வாவேதே மனுஷ்யாணாம் ஸுக்ருதம் க்ரஸதஹ நிர்மூலயதஸ்ச
யதா அக்னிரிந்தனம் தஹதி பஸ்மீபூதம் கரோதி ச.

கடவுளால் படைக்கப்பட்ட இவ்வுலகில் கோபத்தையும், வெறுப்பையும் ஒதுக்கிவிடு. நெருப்பு விறகை எரித்துச் சாம்பலாக்கி விடுவதுபோல் இவ்விரண்டும் மனிதனின் நற்செயல்களையும் அழித்து விடுகின்றன.

माता तु सदा स्नेहार्द्रचित्ता नितरां सन्तान-वत्सला ।
सादरं यथा क्रोडे गृह्णाति रुरुद्यमानं निजपुत्रम् ॥
ईश्वरस्तु सदा भक्तवत्सलः करुणाघनविग्रहः ।
आत्मनि गृह्णाति तथा भक्तस्यश्रद्धया कृतां स्तुतिम् ॥39॥

மாதா து சதா ஸ்னேஹார்த்ரசித்தா நிதராம் ஸந்தான-வத்ஸலா;
ஸாதரம் யதா க்ரோடே க்ருஹ்ணாதி ருருத்யமானம் நிஜபுத்ரம்,
ஈஸ்வரஸ்து ஸதா பக்தவத்ஸலஹ கருணாகனவிக்ரஹஹ
ஆத்மனி க்ருஹ்ணாதி ததா பக்தஸ்யஸ்ரத்தயா க்ருதாம் ஸ்துதிம்.

எப்போதும் குழந்தையை மிகவும் நேசிக்கும் தாய் அழும் குழந்தையை அன்போடு மடியில் வைத்துக் கொள்வது போல், கடவுளும் தம் பக்தர்களிடம் கருணை கொண்டு, அவர்கள் மனப்பூர்வமாகச் செய்யும் தோத்திரங்களை ஏற்றுக்கொள்கிறார்.

इन्द्रं मित्रं वरुणमग्निमाहुरथो दिव्यः स सुपर्णो गरुत्मान् ।
एकं सद् विप्रा बहुधा वदंत्यग्नि यमं मातरिश्वानमाहुः ॥40॥

இந்த்ரம் மித்ரம் வருணமக்னிமாஹுரதோ திவ்ய ஸ சுபர்ணோ கருத்மான்
ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்த்யக்னிம் யம் மாதரிஸ்ச்வான்மாஹுஹு:

இந்திரன், மித்ரன், வருணன், கருடன் என்று சொல்லப்படும் தேவ புருஷர்கள் எல்லோரும் உண்மையில் ஒருவரே. அந்த ஒரே சக்தியைத்தான் அறிஞர்கள் அக்னி, எமன், மாதரீஸ்வரன் எனப் பல பெயர்களால் அழைக்கிறார்கள்.

उषाकाले अनुदये संध्यायां चास्तमिते रवौ देवं समुपासीत मन्दिरे ।
ध्यायमानश्च तस्य महिमानं देवस्य सायुज्यं प्रार्थय समाजेन सह ॥41॥

உஷா காலே அனுதயே சந்த்யாயாம் சாஸ்மிதே ரவௌ தேவம் ஸமுபாஸீத மந்திரே;
த்யாயமானஸ்ச தஸ்ய மஹிமானம் தேவஸ்ய ஸாயுஜ்யம் ப்ரார்த்தய ஸமாஜேன ஸஹ.

சூரியன் உதிப்பதற்கு முன் உஷா காலத்திலும் சூரியன் அஸ்தமித்ததும் சாயங்காலத்திலும் கோயிலில் எல்லோரும் சேர்ந்துகொண்டு கடவுளை ஆராதியுங்கள். அவரது பெருமையைப் புகழ்ந்து சமூகத்தோடு கூட நற்கதி அடையப் பிரார்த்தனை செய்யுங்கள்.

यस्यापि प्रेमातिशयमस्ति ईश्वर-दर्शनायाचिरात् ।
ईश्वरस्यापि प्रेमातिशयं भवति स्वरूप-प्रदर्शनाय तम् ॥42॥

42. யஸ்யாபி ப்ரேமாதிசயமஸ்தி ஈஸ்வர-தர்சனாயாசிராத்
ஈஸ்வரஸ்யாபி ப்ரேமாதிசயம் பவதி ஸ்வரூப-ப்ரதர்ஷனாய தம்.

எவன் கடவுளைத் தரிசிக்கத் தீவிரமாக விரும்புகிறானோ, கடவுளும் அவனுக்குக் காட்சி அளிக்கத் தீவிரமாக ஆசைப்படுகிறார்.

यत्र यत्रापि पृथिव्यां वर्त्तते विद्वान् भगवत्-सेवकोत्तमः ।
ज्ञानान्वेषणाय गन्तव्यं तत्तत् स्थानं तीर्थभूतं पवित्रम् ॥43॥

யத்ர யத்ராபி ப்ருதிவ்யாம் வர்த்ததே வித்வான் பகவத்-ஸேவகோத்தமஹ;
ஞானான்வேஷணாய கந்தவ்யம் தத்தத் ஸ்தானம் தீர்த்த பூதம்
பவித்ரம்.

கடவுள் சேவையில் சிறந்த அறிஞர் உலகில் எங்கே இருந்தாலும் அவரிடம் அறிவு பெறுவதற்காகப் போ. அந்த இடம் புண்ணியத் தலம் போலப் புனிதமானது.

ज्ञानमाहर, ज्ञानवान् वै सदसद् विवेकमेति ।
ऋतं च चरितुं शक्नुयान् मर्त्ये, गतिनिर्देशमाप्नुयात् च स्वर्गलोके ॥44॥

ஞானமாஹர, ஞானவான் வை சதசத் விவேகமேதி .
ருதம் ச சரிதும் சக்னுயான் மர்த்யே, கதி நிர்தேசமாப்னுயாத் ச
ஸ்வர்க்கலோகே.

அறிவைச் சேர்த்துக்கொள். அறிவு பெற்றவன் நல்லது எது, கெட்டது எது என்று அறிந்து கொள்ளும் விவேகத்தைப் பெறுவான். அவன் இவ்வுலகத்திலும் சுவர்க்கத்திலும் சரியான வழியை அறிந்து அதைக் கடைப்பிடிப்பான்.

तिष्ठास्मिन् जगत्यां नलिनीदलगतजलबिन्दुवत्
वित्तं वर्धय, मा भव तदासक्तः
कथं त्वमिह ईश्वरेण प्रेरितो यदि न कर्त्तुं जगत् ऋद्धतरम् ! 45॥

திஷ்டாஸ்மின் ஜகத்யாம் நளினிதலகதஜலபிந்துவத்
வித்தம் வர்தய, மா பவ ததாஸக்தஹ
கதம் த்வமிஹ ஈஸ்வரேண ப்ரேரிதோ யதி ந கர்த்தும் ஜகத் ருத்ததரம்.

தாமரை இலை மேல் தண்ணீர் போல இவ்வுலகத்தில் இரு. பொருளைப் பெருக்கு, ஆனால் அதற்கு அடிமையாகாதே. நீ பொருளைப் பெருக்கவில்லையெனில் கடவுள் ஏன் உன்னை இவ்வுலகத்துக்கு அனுப்ப வேண்டும் ?

यदि भवति अन्विष्टं शाश्वतमानन्दम्
भूमानन्दस्वरूपात् प्रार्थय आनन्दमश्नुते ध्रुवम् ॥46॥

யதி பவதி அன்விஷ்டம் சாஸ்வதமானந்தம்
பூமானந்தஸ்வரூபாத் ப்ரார்த்தய, ஆனந்தமஷ்னுதே த்ருவம்.

முடிவற்ற ஆனந்தத்தை விரும்பினால் சர்வ வியாபியான கடவுளைப் பிரார்த்தனை செய்பவன் அதை அடைவது திண்ணம்.

यस्याचाराः नीतिधर्मनियताश्चिन्तनं च उत्तमं तत्त्वविकाशकरम्
पितरौ तथाचार्यांश्च यस्मात् पूजा च सेवा च यथाविधि-प्राप्ता।
यस्तु स्व-दोषानां विशोधनाय स्वयमेव यतते सर्वदा
स भवति ईश्वरस्य परमप्रेमप्रसादभाजनमिति न संशयम् ॥47॥

யஸ்யாசாராஹ நீதிதர்மனியதாஸ்சிந்தம் ச உத்தம் தத்விகாசகரம்
பிதரௌ ததாசார்யஸ்ச யஸ்மாத் பூஜா ச ஸேவா ச யதாவிதி-ப்ராப்தா;
யஸ்து ஸ்வ-தோஷானாம் விசோதனாய ஸ்வயமேவ யததே ஸர்வதா
ஸ பவதி ஈஸ்வரஸ்ய பரமப்ரேமப்ரசாதபாஜனமிதி ந ஸ்ம்சயம்.

எவனுடைய நடத்தை நீதி, தருமத்தைப் பின்பற்றுகிறதோ, எவனது சிந்தனை உண்மைத் தத்துவத்தை மலரச் செய்கிறதோ, எவன் தன் பெற்றோருக்கும், குருவுக்கும் உரிய பூசை, சேவையைச் செய்கிறானோ, எவன் தன் குற்றங்களைத் தானே திருத்திக் கொள்ள முயல்கிறானோ, அவன் கடவுளின் பெரும் அன்புக்குப் பாத்திரமாகிறான், இதில் சந்தேகமில்லை.

महत् वै सत्यं मधुमच्च, सत्ये स्थिते पापान्मुच्यते
सत्याद् बलवत्तरो न कश्चिदपि त्राता विद्यते भूतले ॥48॥

மஹத் வை ஸத்யம் மதுமச்ச, ஸத்யே ஸ்திதே பாபான்முச்யதே
ஸத்யாத் பலவத்தரோ ந கஸ்சிதபி த்ராதா வித்யதே பூதலே.

சத்தியம் மகத்தானது, இனிமையானதும் கூட. சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன் பாவத்திலிருந்து விடுபடுகிறான். சத்தியத்தை விடச் சிறந்த காப்பவன் இவ்வுலகில் வேறு ஒருவரும் இல்லை.

मनो हि सर्वकरणानां ज्येष्ठं च श्रेष्ठं च ।
मनः-प्रभवा हि प्रवृत्तिराद्या चेष्टितानां कर्मणाम् ।
सर्वे भावपदार्थाश्च मनस्येव प्रजायन्ते ॥49॥

மனோ ஹி ஸர்வகரணானாம் ஜ்யேஷ்டம் ச ஸ்ரேஷ்டம் ச;
மனஹ - ப்ரபவா ஹி ப்ரவ்ருத்திராத்யா சேஷ்டிதானாம் கர்மணாம்;
ஸர்வே பாவபதார்த்தாஸ்ச மனஸ்யேவ ப்ரஜாயந்தே.

மனம் தான் எல்லா இந்திரியங்களுக்கும் மூத்தது, உயர்ந்தது. எல்லாக் காரியங்களிலும் மனதின் சக்தியே மிகவும் வலியது. எல்லாவகை உணர்ச்சிகளும் மனதிலேயே பிறக்கின்றன.

ईश्वरस्य जीवानां हितार्थं य उत्सृज्यति जीवनं कर्म च
स भवति प्रेमास्पदं सर्वजनानाम् ।
ईश्वरे तु संशयं यस्य स भवति घृणाभाजनम् ॥50॥

ஈஸ்வரஸ்ய ஜீவானாம் ஹிதார்த்தம் ய உத்ஸ்ருஜ்யதி ஜீவனம் கர்ம ச
ஸ பவதி ப்ரேமாஸ்பதம் ஸர்வஜனானாம்
ஈஸ்வரே து ஸம்சயம் யஸ்ய ஸ பவதி க்ருணாபாஜனம்.

கடவுளுடைய படைப்புகளின் நன்மைக்காகத் தன் செயல்களையும் வாழ்க்கையையும் தியாகம் செய்பவன் எல்லோராலும் விரும்பப்படுகிறான். கடவுளிடம் நம்பிக்கையற்றவன் வெறுப்புக்குரியவன்.

ईश्वर परलोके च यस्यास्ति दृढमतिः ।
तेन न कर्त्तव्यं हिंसनं प्रतिवेशिनं कायेन मनसा वापि ॥51॥

ஈஸ்வரே பரலோகே ச யஸ்யாஸ்தி த்ருடமதிஹி
தேன ந கர்த்தவ்யம் ஹிம்ஸனம் ப்ரதிவேசினம் காயேன மனஸா வாபி.

கடவுளிடமும் மறுமையிலும் உறுதியான நம்பிக்கை உள்ளவன் தன் அண்டை அயலார்களுக்கு உடலாலும் மனதாலும் கூடத் தீங்கு இழைக்கக் கூடாது.

प्रतिवेशिनां कमपि क्षुधार्तं पश्यन् तमभुक्तं त्यक्त्वा
धार्मिको जनः स्वयं तु भूरिभोजनं कर्त्तुं न शक्नोति ॥52॥

ப்ரதிவேசினாம் கமபி க்ஷுதார்த்தம் பஸ்யன் தமபுக்தம் த்யக்த்வா
தார்மிகோ ஜனஹ ஸ்வயம் து பூரிபோஜனம் கர்த்தும் ந சக்னோதி.

அண்டையிலுள்ள ஒருவன் பட்டினியாய் இருப்பதைப் பார்க்கும் தருமவான் அவனை அப்படியே விட்டு விட்டு விருந்துண்ண மாட்டான்.

जिह्वा यस्य मर्मघातिनी निन्द्यवाक्–भाषणरता ।
यो भवति सदा परपीडन–शोषण–प्रवृत्तिमनस्क: ॥
धर्मानुष्ठानादपि न तस्य निष्कृति: स्यात् कदाचन ।
न कुत्रापि तस्य हिताय प्रायश्चित्तोऽपि विधीयते ॥53॥

ஜிஹ்வா யஸ்ய மர்மகாதினீ நிந்த்யவாக்-பாஷணரதா;
யோ பவதி ஸதா பரபீடன-சோஷண-ப்ரவ்ருத்திமனஸ்கஹ.
தர்மானுஷ்டானாதபி ந தஸ்ய நிஷ்க்ருதிஹிஸ்யாத் கதாசன;
ந குத்ராபி தஸ்ய ஹிதாய ப்ராயஸ்சித்தோபி விதீயதே.

சுடு சொல் பேசுபவன், எப்போதும் வசை பாடுபவன், எப்போதும் பிறரைத் துன்புறுத்தும் எண்ணமுடையவன் - இப்படிப்பட்டவன் சமயச் சடங்குகளைச் செய்வதால் தன் பாவங்களிலிருந்து விடுதலை பெறமாட்டான். அவனுடைய பாவங்களுக்குப் பிராயச்சித்தம் கிடையாது.

प्राज्ञश्च विचक्षणश्च स एवास्ते संयता यस्येन्द्रियभोगवासना
यस्यास्ति च पारितोषिके विरक्ति: ॥
स वै मोहान्धकारे निमग्नो अन्धवदज्ञ: प्रचरति संसारे
यो भोगलालसापूरणे ताडितोऽपि क्षमां याचते ईश्वरान्मृषा ॥54॥

ப்ராக்ஞஸ்ச விசக்ஷணஸ்ச ஸ ஏவாஸ்தே ஸம்யதா யஸ்யேந்த்ரியபோக வாஸனா
யஸ்யாஸ்தி ச பாரிதோஷிகே விரக்திஹி.
ஸ வை மோஹாந்தகாரே நிமக்னோ அந்தவதக்ஞஹ ப்ரசரதி சம்ஸாரே
யோ போகலாலஸாபூரணே தாடிதோபி க்ஷமாம் யாசதே ஈஸ்வரான்ம்ருஷா.

இந்திரிய போகங்களை அனுபவிப்பதில் அடக்கம் உள்ளவன், தன் செயல்களின் பலனுக்கு ஆசைப்படாதவன் அறிஞன். மோக இருளில் மூழ்கி இந்திரிய சுகங்களுக்கு அடிமைப்படுபவன், தான் செய்யும் பாவங்களுக்குக் கடவுளிடம் பொய்யாக மன்னிப்பு வேண்டுபவன் மூடன்.

कुतश्चिद् देशादागतं वा काचन जनजातिजातं वा
ईश्वरादभयप्रार्थिनं शरणार्थिनमाश्रयं प्रदेयं मंगलं च विधेयम् ॥55॥

குதஸ்சித் தேசாதாகதம் வா காசன ஜனஜாதிஜாதம் வா ஈஸ்வராதபயப்ரார்த்தினம் சரணார்த்தினமாச்ரயம் ப்ரதேயம் மங்களம் ச விதேயம்.

எங்கிருந்து வந்தவனாயிருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் கடவுளிடம் அடைக்கலம் வேண்டுபவனுக்கு அடைக்கலம் அளித்து அவனுக்கு நன்மை செய்ய வேண்டும்.

ईश्वरं केवलं भयं कुर्वाण: सर्वापदि विपदि चैव
न कस्मादपरात् स बिभेति निर्भयं जीवतीति ध्रुवम् ॥56॥

ஈஸ்வரம் கேவலம் பயம் குர்வாணஹ ஸர்வாபதி விபதிசைவ
ந கஸ்மாதபராத் ஸ பிபேதி நிர்பயம் ஜீவதீதி த்ருவம்.

கடவுளிடம் பயப்படுபவன் எந்த விபத்து-ஆபத்திலும் ச்சப்படமாட்டான். அவன் பயமின்றி வாழ்க்கை நடத்துவான்.

अतिप्राकृतक्रियासिश्वश्च ईश्वरस्य मांगल्यवार्त्तावहाश्च केवलम् ।
ते च श्रद्धार्हास्तथापि उपास्यस्तु एक एवाद्वितीय: परमेश्वर: ॥57॥

அதிப்ராக்ருத்க்ரியாசித்தாஸ்ச ஈஸ்வரஸ்ய மாங்கல்யவார்த்தாவஹாஸ்ச கேவலம்
தே ச ஸ்ரத்தார்ஹாஸ்ததாபி உபாஸ்யஸ்து ஏக ஏவாத்விதீயஹ பரமேஸ்வரஹ.

கடவுளால் அனுப்பப்பட்டு அவரது மங்களச் செய்தியைக் கொண்டு வரும் புருஷர்கள் அற்புதச் செயல்களைச் சாதிக்க வல்லவர்கள். அவர்கள் நம்முடைய மரியாதைக்குரியவர்கள். ஆனால் கடவுள் ஒருவரே நம்மால் பூசிக்கப்படத் தக்கவர்.

विभवे सति तु यो नृशंसो विधिं विहाय चरति जीवनम् ।
अन्यायवत्तश्च भिक्षामाददाति तं प्रति ईश्वरो भवति पराङ्मख: ॥58॥

விபவே ஸதி து யோ ந்ருசம்ஸோ விதிம் விஹாய சரதி ஜீவனம்
அன்யாய வ்ருத்தஸ்ச பிக்ஷாமாததாதி தம் ப்ரதி ஈஸ்வரோ பவதி ப்ராங்முகஹ.

செல்வம் படைத்திருந்தாலும் ஈவிரக்கமற்றவன், விதிகளை மீறி வாழ்க்கை நடத்துபவன், அநியாயம் செய்பவன், பிச்சையெடுப்பவன் இவர்களைக் கடவுள் வெறுத்து ஒதுக்குகிறார்.

क्लान्तानां हृदयं य आह्लादयति आर्त्तानां क्लेशं च ।
यो दूरीकरोति स स्वर्गस्य लभते राजमार्गम् ॥59॥

க்லாந்தானம் ஹ்ருதயம் ய ஆஹ்லாதயதி ஆர்த்தானாம் க்லேசம் ச
யோ தூரீகரோதி ஸ ஸ்வர்கஸ்ய லபதே ராஜமார்க்கம்.

துன்புற்றவர்களுடைய துன்பத்தைப் போக்கி அவர்களை மகிழ்விப்பவன் சுவர்க்கத்துக்கான ராஜ பாட்டையை அடைகிறான்.

यः समर्थयते विश्वस्तान् आर्तानां च सहायकः ।
स पश्येत् स्वर्गद्वारमपावृतम् ईश्वरमपि सहायकम् ॥60॥

யஹ ஸமர்த்தயதே விச்வஸ்தான் ஆர்த்தானாம் ச ஸஹாயகஹ
ஸ பச்யேத் ஸ்வர்க்கத்வாரமபாவ்ருதம் ஈஸ்வரமபி ஸஹாயகம்.

கடவுளை நம்புபவர்களை ஆதரிப்பவர், துன்புற்றவர்களுக்கு உதவுபவர் ஆகியோர் சுவர்க்கத்தின் வாயில் தங்களுக்காகத் திறந்திருப்பதையும் கடவுளே தங்களுக்கு உதவியாய் இருப்பதையும் காண்பார்கள்.

पृष्ठघातो व्यभिचारादपि भयंकरः । ईश्वरः पृष्ठघातिनं
तावन् न क्षमते यावदेवाहतस्य क्षमामसौ न लभेत ॥61॥

ப்ருஷ்டகாதோ வ்யபிசாராதபி பயங்கரஹ. ஈஸ்வரஹ ப்ருஷ்டகாதினம்
தாவன் ந க்ஷமதே யாவதேவாஹதஸ்ய க்ஷமாம் அஸௌ ந லபதே.

பின்னாலிலிருந்து தாக்குவது (நம்பிக்கைத் துரோகம் செய்வது), கெட்ட நடத்தையைவிடப் பயங்கரமானது. நம்பிக்கைத் துரோகம் செய்தவனை அவனால் பாதிக்கப்பட்டவன் மன்னிக்கும் வரை கடவுளும் அவனை மன்னிக்க மாட்டார்.

यस्तु नाचरति भैक्ष्यं परिश्रमेण तु अर्जयति
स्वजीविकां पुरुषस्य तस्य ईश्वरः प्रसीदति ॥62॥

யஸ்து நாசரதி பைக்ஷ்யம் பரிஸ்ரமேண து அர்ஜயதி
ஸ்வஜீவிகாம் புருஷஸ்ய தஸ்ய ஈஸ்வரஹ ப்ரஸீததி.

எவன் பிச்சையெடுக்காமல் தன் உழைப்பின் மூலம் வாழ்க்கை நடத்துகிறானோ அவனைக் கடவுள் நேசிக்கிறார்.

यो ददाति अन्नं स्वजनाय स तवानुगत्यमर्हति
विरोधं तेन सह क्रियते चेत् ईश्वरो भवति विरक्तः ॥63॥

யோ ததாதி அன்னம் ஸ்வஜனாய ஸ தவானுகத்யமர்ஹதி
விரோதம் தேன ஸஹ க்ரியதே சேத் ஈஸ்வரோ பவதி விரக்தஹ.

உன் குடும்பத்துக்கு உணவளிப்பவனுக்கு அடங்கி நடக்க வேண்டும். அப்படி நடக்காதவனைக் கடவுள் வெறுக்கிறார்.

धनवान् पश्यतु धनवत्तरमुत्तरोत्तरम् ।
दरिद्रोऽपि पश्यतु दरिद्रतरमधः क्रमम् ।
एवमेव विचार्यं तारतम्येन ईश्वर-प्रसादम् ॥64॥

தனவான் பஸ்யது தனவத்தர முத்தரோத்தரம்
தரித்ரோபி பஸ்யது தரித்ரதரமதஹ க்ரமம்
ஏவமேவ விசார்யம் தாரதம்யேன ஈஸ்வர-ப்ரசாதம்.

செல்வம் படைத்தவர்கள் தங்களைவிடச் செல்வந்தர்களையும், ஏழைகள் தங்களைவிட வறியோர்களையும் பார்த்துக் கடவுளின் அருளால் நேரும் ஏற்றத்தாழ்வுகளை உணரவேண்டும்.

कामी इन्द्रियदासोऽस्ति कामभोगलालसा नीचत्वं नयति ।
तिष्ठ जगति पद्मपत्रमिवांभसा। एतद्वै ईश्वरानुशासनम् ॥65॥

காமீ இந்த்ரியதாஸோஸ்தி காமபோகலாலஸா நீசத்வம் நயதி
திஷ்ட ஜகதி பத்மபத்ரமிவாம்பஸா. ஏதத்வை ஈஸ்வரானுசாஸனம்.

காம உணர்ச்சி மிக்கவன் இந்திரியங்களுக்கு அடிமையாகிறான். காம இன்பத்தை நுகரும் வெறி மனிதனைக் கீழே தள்ளுகிறது. தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்க்கை நடத்த வேண்டும். இதுவே கடவுள் கட்டளை.

विषयसुखत्यागं वा समाजं प्रति यत् कर्त्तव्यम्
तत् त्यागं नैव त्यागमीश्वरप्रीणितम्
कामपाश-विमोचनमिति त्यागमी रसम्मतम् ॥66॥

விஷயசுகத்யாகம் வா ஸமாஜம் ப்ரதி யத் கர்த்தவ்யம்
தத் த்யாகம் நைவ த்யாகமீஸ்வரப்ரீணிதம்
காமபாசவிமோசனமிதி த்யாகமீஸ்வரஸம்மதம்.

புலனின்பங்களையோ சமூகத்துக்குசெய்ய வேண்டிய கடமைகளையோ தியாகம் செய்வது கடவுளுக்குப் பிரியமானதல்ல. காம வலையிலிருந்து விடுபடும் தியாகமே அவருக்குப் பிரியமானது.

सत्यं यस्य व्रतोपवासं सन्तोषं तीर्थभूतम् ।
दिव्यज्ञानं ध्यानं च यज्ञस्वरूपम् ॥
दया च प्रतिमा यस्य क्षमा वै जपमाला ।
तस्य प्रसीदति ईश्वरः पुरतो नित्यम् ॥67॥

67. ஸத்யம் யஸ்ய வ்ரதோபவாஸம் சந்தோஷம் தீர்த்தபூதம்
திவ்யஞானம் த்யானம் ச யக்ஞஸ்வரூபம்
தயா ச ப்ரதிமா யஸ்ய க்ஷமா வை ஜபமாலா
தஸ்ய ப்ரஸீததி ஈஸ்வரஹ புரதோ நித்யம்.

எவருக்கு சத்தியமே நோன்போ, திருப்தியே புனித யாத்திரையோ, ஞானமும் தியானமுமே யாகச் சடங்குகளோ, கருணையே கடவுள் சிலையோ, பொறுமையே ஜபமாலையோ அவரைக் கடவுள் அதிகமாக நேசிக்கிறார்.

हिंसनात् स्तेयादनृतात् विरतो भव । एष ईश्वरादेशः ॥68॥

68. ஹிம்ஸநாத் ஸ்தேயாதன்ருதாத் விரதோ பவ; ஏஷ ஈஸ்வராதேஷஹ.

கொலை, திருட்டு, பொய் இவற்றைத் துறக்க வேண்டும் என்பதே கடவுளின் கட்டளை.

ईश्वरं मा दूषय। स्वयं विचारय ।
स्वकृत-पापप्रजातं वै सर्वं तव दुःखभोगम् ॥69॥

69.. ஈஸ்வரம் மா தூஷய. ஸ்வயம் விசாரய.
ஸ்வக்ருத்-பாபப்ரஜாதம் வை ஸர்வம் தவ துக்கபோகம்.

நீ அனுபவிக்கும் துன்பங்களுக்காகக் கடவுளை நிந்திக்காதே. நீயே யோசித்துப்பார். நீ செய்த பாவங்களே உன் துன்பங்களுக்குக் காரணமாகும்.

ईश्वरं न दूषय यदि तव वारिणा परिपूरितो दीपो अन्धकारं न दूरीकरोति
यदि वा विनष्टेन्धनेनागिप्रज्ज्वलनस्य प्रचेष्टा विफला भवति ॥70॥

70. ஈஸ்வரம் ந தூஷய யதி தவ வாரிணா பரிபூரிதோ தீபோ அந்தகாரம் ந
தூரீ கரோதி

யதிவா வினஷ்டேந்தனேனாக்னிப்ரஜ்வலனஸ்ய ப்ரசேஷ்டா விபலா பவதி.

விளக்கில் நீரை ஊற்றி அதை ஏற்ற முயற்சித்தால், அல்லது எரிந்து போன விறகால் தீ மூட்ட முயற்சித்தால் இம் முயற்சிகளின் தோல்விக்குக் கடவுளைப் பொறுப்பாக்கி அவரை நிந்திக்காதே.

यावत् तृष्णा स्थिता नृषु संसारसुखभोगस्य
तावद् वृथा तपश्चर्या ईश्वरलाभाय यदि वा कृता ॥71॥

71. யாவத்த்ருஷ்ணா ஸ்திதா ந்ருஷு ஸம்ஸார சுகபோகஸ்ய
தாவத் வ்ருதா தபஸ்சர்யா ஈஸ்வரலாபாய யதுவாக்ருதா.

ஒருவன் கடவுளின் அருளைப் பெறுவதற்கு என்னதான் உடலை வருத்திக்கொண்டு தவம் செய்தாலும் அவனுக்கு சம்சார இன்பங்களில் வேட்கை இருக்கும் வரை அவனுடைய முயற்சி பலிக்காது.

प्राणरक्षार्थमावश्यकीयद्रव्यजातस्य भोगं न तु पापम् ।
शारीरं स्वास्थ्यरक्षणं सदैव कर्तव्यं धर्मसाधनार्थम् ॥
तेन वै वर्तते प्रोज्ज्वलः प्रज्ञाप्रदीपः साध्यते चाघकृत्प्रतिरोधम् ॥72॥

ப்ராணரக்ஷார்த்தமவஸ்யகீயத்ரவ்ய ஜாதஸ்ய போகம் ந து பாபம்
சரீரம் ஸ்வாஸ்த்ய ரக்ஷணம் ஸதைவ கர்தவ்யம் தர்மஸாதனார்த்தம்
தேன வை வர்த்ததே ப்ரோஜ்வலஹ ப்ரக்ஞாப்ரதீபஹ ஸாத்யதே
சாகக்ருத் ப்ரதிரோதம்.

உயிர் வாழ்வதற்குத் தேவையான பொருளை ஈட்டி அதை அனுபவிப்பது பாவமல்ல. தருமச் செயல்களைச் செய்வதற்காக உடலின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதும் அவசியம். இதன் மூலம் தான் ஞானமாகிய தீபம் எரியும், கொடுமைக்காரனை எதிர்க்கவும் இயலும்.

बोधे वा चिन्तायां कर्मणि वाचि वा
जीविकार्जने वा चेष्टायां शुद्धिलक्षणा स्यात्
सफला प्रार्थना कृता या ईश्वरसकाशम् ॥73॥

73. போதே வா சிந்தாயாம் கர்மணி வாசி வா
ஜீவிகார்ஜனே வா சேஷ்டாயாம் சுத்திலக்ஷணா ஸ்யாத்
ஸபலா ப்ரார்த்தனா க்ருதா யா ஈஸ்வர ஸகாசம்.

அறிவு, சிந்தனை, செயல், பேச்சு, உயிர் வாழ்வதற்காகச் செய்யப்படும் முயற்சிகள் இவற்றில் தூய்மையிருந்தால், கடவுளுக்குச் செய்யப்படும் பிரார்த்தனைகள் பலனளிக்கும்.

मत्स्यमांसवर्जनं दिगम्बरत्वं वा मस्तकमुण्डनम्
कर्दमालिप्ताङ्गं वाग्निहोत्रादिकं चैतानि
कानिचित् कर्माणि मोहग्रस्तं न विशुद्धं कुर्वन्ति ॥74॥

74. மத்ஸ்ய மாம்ஸ வர்ஜனம் திகம்பரத்வம் வா மஸ்தக முண்டனம்
கர்தமாலிப்தாங்கம் வாக்னிஹோத்ராதிகம் சைதானி
கானிசித் கர்மாணி மோஹக்ரஸ்தம் ந விசுத்தம் குர்வந்தி.

உணவில் மீனையும், இறைச்சியையும் ஒதுக்குதல், அம்மணமாயிருத்தல், தலையை மொட்டையடித்துக்கொள்ளல், உடலில் சேற்றைப் பூசிக்கொள்ளுதல், அக்கினிஹோத்திரம் செய்தல் இவையெல்லாம் மோகத்துக்கு அடிமைப்பட்டுள்ள மனிதனைத் தூய்மையாக்குவதில்லை.

स एव विश्वासवान् यस्य वाचनं कर्म च
निरापदमिति मन्यन्ते भगवत्-प्रजावर्गाः ॥75॥

ஸ ஏவ விஸ்வாஸவான் யஸ்ய வாசனம் கர்ம ச
நிராபதமிதி மன்யந்தே பகவத்-ப்ரஜாவர்காஹா.

எவனுடைய பேச்சும், செயலும் அபாயமற்றவை என கடவுள் பக்தர்கள் கருதுகிறார்களோ அவனே உண்மையான கடவுள் பக்தன்.

ये तु ईश्वर-कर्तृत्वे संशयन्ति कापुरुषाः
ते निकृष्टाः शत्रवश्च ईश्वरस्य, तेषां महती विनष्टिः ॥76॥

76. யேது ஈஸ்வர கர்த்ருத்வே ஸம்சயந்தி காபுருஷாஹா
தே நிக்ருஷ்டாஹா சத்ரவஸ்ச ஈஸ்வரஸ்ய, தேஷாம் மஹதீ
விநஷ்டிஹி.

கடவுளின் வலிமையைச் சந்தேகிக்கும் கோழைகள் தாழ்ந்தவர்கள். அவர்கள் கடவுளின் எதிரிகள். அவர்கள் பெரும் அழிவுக்குள்ளாவார்கள்.

सत्यमेव वाचं वदेत् प्रतिज्ञातं निर्वाहयेत् ।
न्यस्तदायं सम्पादयेत् मलिनवासनां च परित्यजेत् ॥77॥

77. ஸத்யமேவ வாசம் வதேத் ப்ரதிக்ஞாதம் நிர்வாஹயேத்
ந்யஸ்ததாயம் ஸம்பாதயேத் மலினவாஸனாம் ச பரித்யஜேத்.

உண்மையே பேசு; உறுதி மொழியைக் காப்பாற்று; கொடுக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்று;கெட்ட ஆசைகளைத் துற.

यावती स्नेहशीला माता सन्तानं प्रति भवति
तदधिको दयामयो भगवान् स्वयंसृष्टान् प्रजान् प्रति ॥
हिंसनं नार्हति प्रजानां यदि तन्न भवति चानिवार्यम्
खाद्यसंग्रहार्थं वा आत्मसंरक्षणार्थमपरिहार्यम् ॥78॥

78. யாவதீ ஸ்நேஹசீலா மாதா ஸந்தானம் ப்ரதி பவதி
தததிகா தயாமயோ பகவான் ஸ்வயம் ஸ்ருஷ்டான் ப்ரஜான்ப்ரதி
ஹிம்ஸனம் நார்ஹதி ப்ரஜானாம் யதி தன்ன பவதி சானிவார்யம்
காத்ய ஸங்க்ரஹார்த்தம் வா ஆத்மஸம்ரக்ஷணார்த்தமபரிஹார்யம்.

ஒரு தாய்க்குத் தன் குழந்தையிடம் உள்ள பரிவை விட அதிகமான பரிவு கடவுளுக்குத் தன்னால் படைக்கப்பட்ட ஜீவன்களிடம் உள்ளது. (ஆகையால்) உணவுத் தேவைக்காகவோ அல்லது தற்காப்புக்காகவோ தவிர்க்க முடியாத இம்சையைத் தவிர் வேறு இம்சையை உயிர்களுக்கு இழைக்காதே.

मनो यस्य पवित्रम् वासना च सुसंयता ।
श्लोकोच्चाराश्च मधुस्वना: स एव भवतुमर्हति
प्रार्थनायां पुरोहितो यजमानेभ्यो वहुदत्तदक्षिण: ॥
कवोष्णमृदुवाक् वै स द्रावणे तु भवति शक्त: ।
यावदेव भ्रान्तिं श्रावकानां वा कुमति च तेषाम् ॥79॥

மனோ யஸ்ய பவித்ரம் வாஸனா ச ஸுஸம்யதா
ஸ்லோகோச்சாராஸ்ச மதுஸ்வனாஹா ஸ ஏவ பவதுமர்ஹதி
ப்ரார்த்தனாயாம் புரோஹிதோ யஜமானேப்யோ பஹுதத்ததக்ஷிணஹ
கவோஷ்ணம்ருதுவாக் வை ஸ த்ராவணே து பவதி சக்தஹ
யாவதேவ ப்ராந்திம் ஸ்ராவகானாம் வா குமதிம்ச தேஷாம்.

எவர் தூய்மையான உள்ளம் கொண்டவரோ, புலன்களின் ஆசையை நன்றாக அடக்கியவரோ, சுலோகங்களை இனிய குரலில் உச்சரிக்க வல்லவரோ, அவரே கடவுள் பிரார்த்தனையில் புரோகிதராக இருக்க வல்லவர். பிரார்த்தனை செய்பவர்கள் அவருக்கு நிறைய தட்சிணை கொடுக்க வேண்டும். மென்மையாக உரையாற்றுகிற அவர் தம் உரையைக் கேட்கிறவர்களின் அறியாமையையும், கெட்ட எண்ணங்களையும் அகற்ற வல்லவர்.

विद्वत्वराणां भाषणश्रवणं चान्यान्
विज्ञानतत्त्वप्रबद्धकरणमुच्यते च
धर्मकर्मानुष्ठानतुल्यं वा तदधिकवरदम् ॥80॥

வித்வத்வராணாம் பாஷணஸ்ரவணம் சான்யான்
விக்ஞானதத்வப்ரபுத்தகரணமுச்யதே ச
தர்மகர்மானுஷ்டானதுல்யம் வா ததகிக வரதம்.

சிறந்த அறிஞர்களின் உரைகளைக் கேட்பதும், பிறருக்கு அறிவைப் புகட்டுவதும் சமயச் சடங்குகளை விட அதிகப் பயனளிப்பவை.

मनीषिणां मसिबिन्दुश्च वीराणां रक्तबिन्दव:
उभयोऽपि पवित्रौ च अमृतोपमावुच्यते ॥81॥

மனீஷிணாம் மஸிபிந்துஸ்ச வீராணாம் ரக்தபிந்தவஹ
உபயோபி பவித்ரௌ ச அம்ருதோபமாவுச்யதே.

அறிஞர்கள் பயன்படுத்தும் மையின் துளிகள், மக்களைக் காப்பதற்காக வீரர்கள் சிந்தும் இரத்தத் துளிகள் இவையிரண்டுமே அமுதம் போலப் புனிதமானவை.

'सुखी भव ईश्वरप्रसादात्'-एवमुवाच्य मित्रमभिनन्द्येत् ।
स यदि साहाय्यं याचते तत् पाश्र्व स्थितो भव सर्वसम्पत् सह ॥82॥

ஸுகீ பவ ஈஸ்வரப்ரஸாதாத் - ஏவமுவாச்ய மித்ரமபினந்த்யேத்
ஸ யதி ஸஹாயம் யாசதே தத் பார்ஸ்வே ஸ்திதோ பவ ஸர்வஸம்பத் ஸஹ

நண்பனை வாழ்த்தும்போது 'கடவுளருளால் சுகமாக இரு' என்று கூறி வாழ்த்து. அவன் ஏதாவது உதவி வேண்டினால் உன் எல்லாப் பொருள்களையும் கொண்டு அவனுக்கு உதவு.

ईश्वर: स्वयंशुक्र: स्निह्यति पवित्रजनमसंशयम् ।
दिवा उपोष्य नक्तं पावनं पङ्क्तिभोजनं स्वजनै: सह
एवं यस्तु पौर्णमासमाचरति तस्य वै ईश्वर: प्रसीदति ॥83॥

83. ஈஸ்வரஹ ஸ்வயம்சுக்ரஹ ஸ்னிஹ்யதி பவித்ரஜனமஸம்சயம்
திவா உபோஷ்ய நக்தம் பாவனம் பங்க்தி போஜனம் ஸ்வஜனைஹி ஸஹ
ஏவம் யஸ்து பௌர்ணமாஸமாசரதி தஸ்ய வை ஈஸ்வரஹ ப்ரஸீததி.

கடவுள் புனிதமானவர். அவர் புனிதமான மக்களை நேசிக்கிறார். பௌர்ணமியன்று பகலில் உண்ணா நோன்பு கடைப்பிடித்து விட்டு இரவில் தன் உறவினர்கள், நண்பர்களுடன் கூட்டு விருந்து உண்பவன் கடவுளின் அருளைப் பெறுகிறான்.

ईश्वरसृष्टेषु जीवेषु यो दयावान् तं प्रति ईश्वरोऽपि दयावान् ।
पशुवधश्चेदनिवाय तर्हि तान् स्वल्पतमा पीडा भीतिश्च देया ॥
एष ईश्वरादेशः ॥84॥

ஈஸ்வரஸ்ருஷ்டேஷு ஜீவேஷு யோ தயாவான் தம்ப்ரதி ஈஸ்வரோ அபி தயாவான்;
பசுவதஸ்சேதனிவார்யம் தர்ஹி தான் ஸ்வல்பதமா பீடா பீதிஸ்ச தேயா
ஏஷ ஈஸ்வராதேசஹ.

கடவுளால் படைக்கப்பட்ட ஜீவன்களிடம் இரக்கம் காட்டுபவர்களிடம் கடவுள் இரக்கம் காட்டுகிறார். ஜீவன்களைக் கொல்வதைத் தவிர்க்க முடியாவிட்டால் அவற்றுக்கு மிகக் குறைவாகப் பயமும், வலியும் ஏற்படும் வகையில் அவற்றைக் கொல்ல வேண்டும்.

आस्तिको न व्यभिचारी स्यात् परदारं नाभिगच्छेत् ।
न वदेत् प्रतिषिद्धं च सदा सत्ये स्थितो भवेत् ॥85॥

ஆஸ்திகோ ந வ்யபிசாரீ ஸ்யாத் பரதாரம் நாபிகச்சேத்
ந வதேத் ப்ரதிஷித்தம் ச ஸதா சத்யே ஸ்திதோ பவேத்.

கடவுள் நம்பிக்கையுடையவன் ஒழுக்கங்கெட்டவனாகவோ, பிறன் மனைவியை இச்சிப்பவனாகவோ இருக்கக் கூடாது. அவன் கெட்ட சொற்களைச் சொல்லக் கூடாது. எப்போதும் உண்மையில் உறுதியாக இருக்க வேண்டும்.

पशवश्च भगवत्-सृष्टाः । तान् प्रति सदयो भव ।
यतस्ते च मानुषीवाक्वाचने अशक्ताः ॥
क्षुधार्तेभ्यो तृष्णार्तेभ्यश्च खाद्यं पेयं च दीयताम् ।
ते नैव प्राप्तक्लमाः प्रपीडिताश्च भवन्तु ॥86॥

பசவஸ்ச பகவத்ஸ்ருஷ்டாஹா தான் ப்ரதி ஸதயோ பவ
யதஸ்தேச மானுஷீவாக் வாசனே அசக்தாஹா
க்ஷுதார்த்தேப்யோ க்ருஷ்ணார்த்தேப்யஸ்ச காத்யம் பேயம் ச தீயதாம்
தே நைவ ப்ராப்தக்லமாஹா ப்ரபீடிதாஸ்ச பவந்து.

விலங்குகளும் கடவுளால் படைக்கப்பட்டவை. அவற்றிடம் பரிவு காட்டு; ஏனெனில் அவை பேசும் சக்தியற்றவை. அவற்றின் பசிக்கு உணவும், தாகத்துக்குத் தண்ணீரும் கொடு. அவற்றுக்கு மிதமிஞ்சிய வேலை கொடுத்து அவற்றைத் துன்புறுத்தாதே.

श्रावकस्य बोधशक्तिं विभाव्य वक्तुमर्हसि वाचम् ।
एषा वै भगवदिच्छा । सर्वविषये युगपदालोच्यमाने
न कश्चिद् विषयो न कस्यापि बोधं गम्यते । भ्रान्तिरेव जायते च ॥87॥

87. ஸ்ராவகஸ்ய போத சக்திம் விபாவ்ய வக்துமர்ஹஸி வாசம்
ஏஷா வை பகவதிச்சா; ஸர்வ விஷயே யுகபதாலோச்யமானே
ந கஸ்சித் விஷயோ ந கஸ்யாபி போதம் கம்யதே; ப்ராந்திரேவ ஜாயதே ச.

உன் பேச்சைக் கேட்பவருடைய அறிவுத்திறனைக் கருத்தில் கொண்டு நீ பேச வேண்டும் என்பதே கடவுள் விருப்பம். எல்லா விஷயங்களையும் எல்லோரும் வாதித்தால் ஒருவருக்கும் ஒன்றும் புரியாது. தவறுதான் நேரும்.

अन्नं देहि क्षुधार्ताय शश्रूषस्व आतुरं जनम् ।
कश्चिदन्यायेनाबद्धश्चेत् कुरु तस्य वन्धनमोचनम् ॥88॥

88. அன்னம் தேஹி க்ஷுதார்த்தாய சுஷ்ருஷஸ்வ ஆதுரம் ஜனம்
கஸ்சிதன்யாயேனாபத்தஸ்சேத் குரு தஸ்ய பந்தனமோசனம்.

பசித்தவனுக்கு உணவளி; துன்புற்றவனுக்குச் சேவை செய். அநியாயமாகக் கட்டப்பட்டவனைக் கட்டிலிருந்து விடுதலை செய்.

सहचराः पापकर्त्तारोऽपि यदि साहाय्यमुपयाचन्ते
पापान्निवार्य तान् कुरुष्व पापविरतान् ॥89॥

89. ஸஹசராஹா பாபகர்த்தாரோபி யதி ஸஹாயமுபயாசந்தே
பாபான்னிவார்யதான் குருஷ்வ பாபவிரதான்.

பாவமிழைக்கும் உன் நண்பர்கள் உன் உதவியை வேண்டினால், அவர்கள் பாவத்திலிருந்து விடுபடும்படி அவர்களுக்கு உதவி செய்து அவர்களை நல்லவர்கள் ஆக்கு.

यो य़ोग्यो यः समर्थश्च करोति कर्म च आत्मनो
परस्य च तत्सहायः प्रसन्नश्च स्वयं भवति ईश्वरः ॥90॥

90. யோ யோக்யோ யஹ ஸமர்த்தஸ்ச கரோதி கர்ம ச ஆத்மனோ
பரஸ்ய ச தத்ஸஹாயஹ ப்ரஸன்னஸ்ச ஸ்வயம் பவதி ஈஸ்வரஹ.

தகுதியும் திறமையும் உள்ளவன்,தனக்காகவும் பிறருக்காகவும் உழைப்பவன் கடவுளின் உதவியைப் பெறுகிறான். அவரை மகிழ்விக்கிறான்.

ईश्वरलाभाय आत्मानं विद्धि ।
प्रतिजनस्य ज्ञानाहरणमवश्यं करणीयम् ॥91॥

ஈஸ்வரலாபாய ஆத்மானம் வித்தி
ப்ரதிஜனஸ்ய ஞானாஹரணமவஸ்யம் கரணீயம்.

கடவுளை அடைவதற்கு உன்னை அறிந்து கொள். அறிவைச் சம்பாதித்துக்கொள்வது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

नारी तु समादरणीया । एष ईश्वरादेश:
सा वै भवति माता च कन्या च भगिनी वा ।
तां प्रति यत् कर्तव्यं तदकरणं नरकं नयति ॥92॥

92. நாரீ து ஸமாதரணீயா; ஏஷ ஈஸ்வராதேசஹ
ஸா வை பவதி மாதா ச கன்யா ச பகினீ வா
தாம் ப்ரதி யத் கர்த்தவ்யம் ததகரணம் நரகம் நயதி.

பெண் மரியாதைக்குரியவள். இது கடவுளின் கட்டளை. அவள் தாயாக, பெண்ணாக, சகோதரியாக இருக்கிறாள். அவளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாதவன் நரகத்துக்குப் போகிறான்.

प्रतिदानं वा पुनर्लाभमिच्छन् न कुरुष्व किमपि दानम्
एवमनिच्छन्नपि लभेत्तु पुण्यं जगदपिच भवति तव मित्रम् ॥93॥

ப்ரதிதானம் வா புனர்லாபமிச்சன் நகுருஷ்வ கிமபி தானம்
ஏவமனிச்சன்னபி லபேத்து புண்யம் ஜகதபி ச பவதி தவ மித்ரம்.

நீ செய்யும் உதவிக்குப் பிரதிபலன் எதிர்பார்க்காமல் உதவி செய். அப்படிச் செய்தால் நீ விரும்பாமலே உனக்குப் புண்ணியம் கிடைக்கும்.
உலகமே உன் நண்பனாகிவிடும்.

समुत्पन्ने विवादे तु विचारात् प्रागेव श्रोतव्यम्
उभयपक्षस्य वक्तव्यं यतो विस्पष्टं भवति तथ्यमवितथम् ॥94॥

ஸமுத்பன்னே விவாதே து விசாராத் ப்ராகேவ ஸ்ரோதவ்யம்
உபயபக்ஷஸ்ய வக்தவ்யம் யதோ விஸ்பஷ்டம் பவதி தத்ய மவிததம்.

ஒரு விவாதம் நேர்ந்தால் அதன் முடிவைச் சொல்வதற்கு முன் இரு தரப்பு வாதங்களையும் கேள். அப்படிக் கேட்டால் தான் உண்மை தெளிவாகும்.

यो जीवान् द्रुह्यति तेषामनिष्टं करोति च
सर्वजीवेषु यस्य मैत्रीभावना च नास्ति,
पतितः स समाजच्युतिमर्हति ॥95॥

யோ ஜீவான் த்ருஹ்யதி தேஷாமனிஷ்டம் கரோதி ச
ஸர்வ ஜீவேஷு யஸ்ய மைத்ரி பாவனா ச நாஸ்தி
பதிதஹ ஸ ஸமாஜச்யுதிமர்ஹதி.

ஜீவன்களுக்குத் துரோகம் செய்பவன்,அவர்களை இம்சிப்பவன், மற்ற ஜீவன்களிடம் நட்பு கொள்ளாதவன் கீழானவன்; அவன் மூகத்திலிருந்து விலக்கப்படத் தக்கவன்.

शौर्यं तु जगद्-विजयक्षमं जीवने च सुप्रतिष्ठा
कृतिषु च कीर्तिरतत् सर्वमीश्वरानुग्रहे पूर्णतया निर्भरम्
निश्चितं वै निर्णयमेतद् आस्तिक्यबद्धेर्विशिष्टलक्षणम् ॥96॥

96. சௌர்யம் து ஜகத்-விஜயக்ஷமம் ஜீவனே ச ஸுப்ரதிஷ்டா
க்ருதிஷு ச கீர்த்திரேதத் ஸர்வமீஸ்வரானுக்ரஹே பூர்ணதயா நிர்பரம்
நிஸ்சிதம் வை நிர்ணயமேதத் ஆஸ்திக்யபுத்தேர்விசிஷ்டலக்ஷணம்.

உலகத்தை வெல்லத் தக்க வீரம், வாழ்க்கையில் நல்ல நிலை, செயல்களில் புகழ் இவையெல்லாம் கடவுளின் கிருபையால் ற்படுவதாக உறுதியாக நம்புவது ஆஸ்திகனின் அடையாளம்.

यावदायुस्तावदिह सदा दानशीलो नरः प्रेत्यास्माल्लोकात् ।
पश्यति स्वर्गद्वारं विशालं तस्य कृते उन्मुक्तमनर्गलम् ॥97॥

யாவதாயுஸ்தாவதிஹ ஸதா தானசீலோ நரஹ ப்ரேத்யாஸ்மால்லோகாத்
பஸ்யதி ஸ்வர்க்கத்வாரம் விசாலம் தஸ்ய க்ருதே உன்முக்தமனர்கலம்.

ஆயுள் முழுதும் தான தர்மங்கள் செய்தவன் இவ்வுலகை விட்டுச் செல்லும்போது சுவர்க்கத்தின் வாயில் தனக்காக அகலமாகத் திறந்திருக்கக் காண்பான்.

हृदयं यत् सदा जीवप्रेमपूरितं तदभीष्टतममिह संसारे ॥98॥

98. ஹ்ருதயம் யத் சதா ஜீவப்ரேமபூஜிதம் ததபீஷ்டதமமிஹஸம்ஸாரே.

உலகத்தில் எல்லாவற்றையும் விட அதிகம் தேவைப்படுவது எல்லா ஜீவன்களிடமும் பரிவு கொண்ட இதயம்.

आस्ते भग आसीनस्य - चरैवेति चरैवेति ।
चरन् वै मधु विन्दति चरन् स्वादु उदुम्वरम् ॥
पश्य सूर्यस्य श्रेमाणं यो न तन्द्रयते चरन् ।
चरैवेति चरैवेति चरैवेति ॥99॥

ஆஸ்தே பக ஆஸீனஸ்ய-சரைவேதி சரைவேதி
சரன் வை மது விந்ததி சரன் ஸ்வாது உடும்வரம்
பஸ்ய ஸூர்யஸ்ய ச்ரேமாணம் யோ ந தந்த்ரயதே சரன்
சரைவேதி, சரைவேதி, சரைவேதி.

சோம்பியிருப்பவனுக்கு நோய் தான் வரும். எப்போதும் நடந்து கொண்டு (இயங்கிக்கொண்டு) இரு. நடந்து கொண்டிருப்பவன் தான் தேனையும் இனிய அத்திப்பழத்தையும் அடைகிறான். சூரியனைப் பார். அவன் சோம்பலின்றித் திரிவதால் பிரகாசிக்கிறான்.

நட, நட, நடந்துகொண்டே இரு.

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः ।
स्थिरैरङ्ग्स्तुष्टुवांसस्तनूभिः । व्यशेम देवहितं यदायुः ॥
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥100॥

ஓம் பத்ரம் கர்ணேபிஹி ச்ருணுயாம தேவாஹா பத்ரம்
பஸ்யேமாக்ஷபிர்யஜத்ராஹா
ஸ்திரைரங்கைஸ்துஷ்டுவாம்ஸஸ்தனூபிஹி வ்யசேமதேவஹிதம்
யதாயுஹு.
ஓம் சாந்திஹி, சாந்திஹி, சாந்திஹி.

தேவர்களே, நாங்கள் நன்மையையே காதுகளால் கேட்க அருளுங்கள். புகழுக்குரியவர்களே நாங்கள் கண்களால் மங்கலத்தையே பார்ப்போமாக ! நாங்கள் வலிமையான உடல் உறுப்புகளால் வாழ்க்கையை இன்பமாக அனுபவித்து உங்களைப் புகழ்ந்து கொண்டு வாழ்வோமாக !
அமைதி ! அமைதி ! அமைதி !

# பகவான் கிருஷ்ணரும் பகவத் கீதையும்

मूकं करोति वाचालं, पंगुं लंघयते गिरिम् ।
यत् कृपा तमहं वन्दे, परमानन्द माधवम् ॥

மூகம் கரோதி வாசாலம் ,பங்கும் லங்கயதே கிரிம்
யத்க்ருபா தயஹம் வந்தே, பரமானந்த மாதவம்.

எவரது கருணையால் ஊமை பேச்சில் வல்லவனாக ஆகிறானோ, முடவன் மலையைக் கடக்கிறானோ அத்தகைய பகவான் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

பகவான் கிருஷ்ணர் கி.மு 1550ம் ஆண்டில் வட மதுரையில் பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் வசுதேவர், தாய் தேவகி. அப்போது கம்சன் என்பவன் மதுரையின் மன்னனாக இருந்தான். அவன் உறவு முறையில் தேவகியின் அண்ணன், அதாவது கிருஷ்ணனின் மாமா.

அவன் கொடுங்கோலன், குடிமக்களையும் முனிவர்களையும் மிகவும் துன்புறுத்தினான். அவன் தன் தந்தை உக்கிரசேனரையும் சிறையிலிட்டுத் தானே அரியணையேறினான்.

ஒரு சோதிடன் கம்சனிடம் "உன் தங்கை தேவகியின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது மகன் உன்னைக் கொல்வான்" என்று கூறினான். இதனால் அச்சமடைந்த கம்சன் வசுதேவரையும், தேவகியையும் சிறையிலடைத்தான். பிறகு அவர்களுக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் பிறந்ததுமே கொன்றான்.

தேவகி எட்டாம் முறையாகக் கருத்தரித்தாள். அப்போது விஷ்ணுவின் சக்தியே எட்டாவது குழந்தையாக - கிருஷ்ணராக - அவதரித்தது.

கிருஷ்ணரின் பிறப்பு நள்ளிரவில் நிகழ்ந்தது. அப்போது இடி, புயலோடு பெருமழை பெய்தது. சிறைக்கதவுகள் அதிசயமாகத் தானே திறந்து கொண்டன. அப்போது வசுதேவருக்கு ஒரு தெய்வீகக் குரல் கேட்டது. - "குழந்தையை எடுத்துக்கொண்டு யமுனை நதியைக் கடந்து கோகுலத்துக்குப் போ. குழந்தை பிறந்த செய்தி வேறு எவருக்கும் தெரிவதற்கு முன் நீ சிறைக்குத் திரும்பி விடலாம்." வசுதேவர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு யமுனைக் கரைக்குச் சென்றார்.

பெருமழையால் யமுனையில் வெள்ளம். ஆனால் அவர் அங்கு போய்ச் சேர்ந்ததுமே யமுனை நீர் இரண்டாகப் பிரிந்து அவருக்கு வழி விட்டது.

வசுதேவர் பத்திரமாகக் கோகுலம் போய்ச் சேர்ந்தார். அப்போது கோகுல வாசிகள் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

வசுதேவர் கோகுலத்தின் தலைவனான நந்தனின் வீட்டுக்குச் சென்று அவனுடைய மனைவி யசோதையின் பக்கத்தில் குழந்தையை விட்டு விட்டு மதுரைக்குத் திரும்பினார்.

நந்தனும் யசோதையும் கிருஷ்ணரை வளர்த்தனர். 'கிருஷ்ண' என்ற சொல்லுக்குக் 'கருப்பு' என்று பொருள். கிருஷ்ணரின் நிறம் கருப்பாக இருந்ததால் அவர் இந்தப் பெயர் பெற்றார்.

கொடுங்கோலன் கம்சன் தேவகிக்குக் குழந்தை பிறந்த செய்தி கேட்டு உடனே சிறைச்சாலைக்குச் சென்றான். அந்தக் குழந்தையைக் கொல்ல முடியாததால் அவன் கோகுலம் மற்றும் அதன் அருகிலுள்ள இடங்களில் பிறந்த குழந்தைகள் எல்லோரையும் கொல்ல உத்தரவிட்டான். ஆனால் சநாதன தருமத்தை மறுபடி நிறுவுவதற்காகப் பிறந்துள்ள கிருஷ்ணரைக் கொல்ல அவன் செய்த முயற்சிகள் வீணாயின.

கம்சன் கிருஷ்ணரைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி அவருடைய உறவு முறைச் சித்தப்பா அக்ரூரரைக் கோகுலத்துக்கு அனுப்பினான். அப்போது கிருஷ்ணருக்கு வயது பதினான்கு. அவர் மதுரைக்கு வந்ததும் கம்சன் அவரைக் கொல்ல ஒரு மல்லனை அனுப்பினான். கிருஷ்ணர் அவனைக் கொன்று விட்டார். பிறகு கம்சன் ஒரு மதங்கொண்ட யானையைக் கிருஷ்ணர் மேல் ஏவினான். இந்த முயற்சியும் தோல்வியுற்றது. கிருஷ்ணர் இப்போது கம்சனுடன் நேருக்கு நேர் சண்டையிட்டு அவனைக் கொன்றார். பிறகு கம்சனின் தந்தை உக்கிரசேனரைச் சிறையிலிருந்து விடுவித்து அவரை அரியணையில் அமர்த்தினார்.

கோகுலம் என்பது இடைச் சாதியினரின் குடியிருப்பு. அங்கு வாழ்பவர்கள் கோபர்கள் எனப்படுவர். மகளிர் கோபியர் என அழைக்கப்படுவர். பாலியப் பருவத்தில் கிருஷ்ணர் அவர்களுடன் வளர்ந்தார். பாலியப் பருவத்துக்குரிய ஜீவசக்தியை இசை, நடனம் முதலிய கலைகள் மூலம் எப்படி வளர்ப்பது என்பதை அவர் அவர்களுக்குக் கற்பித்தார். ராதை என்ற கோபி அவரை மிகவும் நேசித்தாள்.

ஆகவே கிருஷ்ணர் தாம் கோகுலத்தில் இருந்த வரையில் இசை, நடனம், சிறு பருவத்து விளையாட்டுகள், குறும்புகள் மூலம் கோபர் கோபியரை மகிழ்வித்தார். கோகுலத்திலும் அதன் ஒரு பகுதியான பிருந்தாவனத்திலும் அவர் பங்கு பெற்ற விளையாட்டுகளின் கதைகள் இன்றும் இந்துக்களை மகிழ்விக்கின்றன. இந்த இனிய கதைகளின் அடிப்படையில் சிறந்த வைணவ இலக்கியம் பிறந்துள்ளது.

பள்ளிப் பருவத்தில் கிருஷ்ணர் சந்தீபனி முனிவரின் ஆசிரமத்தில் இருந்துகொண்டு அவரிடம் வேதம், கணிதம், மருத்துவம், போர்க்கலை

ஆகிய கலைகளைக் கற்றார்.

சுரண்டப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்காகக் கிருஷ்ணர் அவர்கள் சார்பில் வாழ்நாள் முழுதும் போரிட்டார். அவர்களுக்காக அவர் தம் வாழ்க்கை வசதிகளையும், இறுதியில் தம் உயிரையும் கூடத் துறந்தார். இந்த முயற்சியில் அவர் தம் சம காலத்திய வலிமை வாய்ந்த அரசர்களுடன் போர் செய்ய நேரிட்டது. சநாதன தருமத்தை ஒரு குடைக்குக் கீழே கொண்டு வந்து ஒரே மையத்தைக் கொண்ட ஓரியக்கத்தை நிறுவுவதே அவரது நோக்கமாகும். மிகவும் ஏழைகளும் கவுரவமான வாழ்க்கை நடத்த வாய்ப்பளிக்கும் ஒரு தரும ராஜ்யத்தை நிறுவுவதற்காக அவர் பாண்டவ அரசர் யுதிஷ்டிரருக்கு ஆதரவு அளித்தார். இத்தகைய சநாதன தருமத்தின் மூலம் சாதாரண மக்களுக்கு நியாயம் கிடைக்குமென்று அவர் நம்பினார்.

அந்தக் காலத்தில் பல இந்துக்கள் பல குழுக்களாகப் பிரிந்திருந்தனர். அவர்கள் தங்கள் நிலமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தங்களைக் கடவுளின் அவதாரங்களாகக் கூறிக்கொண்டு தங்களை நம்பியவர்களை ஏமாற்றினார்கள். கிருஷ்ணர் அவர்களை எதிர்த்துத் தொடர்ந்து போரிட்டார். இதன் விளைவாக அவர் மற்றவர்களால் தூற்றப்பட்டார், விபத்துக்கு உள்ளானார்.

அவரது காலத்தில் ஜராசந்தன் என்ற கொடுங்கோலன் மகத நாட்டு மன்னனாக இருந்தான். அவன் கம்சனின் மருமகன். அவன் கம்சன் கொலைக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் பாரதத்தின் வடமேற்கெல்லையிலாண்ட ஒரு வெளிநாட்டுக் குதிரைப்படை வீரன் காலயவனனை பாரதத்தின் மேல் படையெடுக்கத் தூண்டினான். காலயவனன் இந்து குஷ் பள்ளத்தாக்கைக் கடந்து வந்து மதுரையைத் தாக்கினான். கிருஷ்ணர் அவனைப் போரில் கொன்றார்.

ஜராசந்தன் கிருஷ்ணரைச் சார்ந்தவர்களைத் தொடர்ந்து துன்புறுத்தினான். அவன் பலமுறை மதுரை மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டான். இதனால் மதுரை மக்கள் போதிய உணவுப் பண்டங்கள் கிடைக்காமல் அவதிப் பட்டனர். கிருஷ்ணர் ஒவ்வொரு முறையும் ஜராசந்தனை முறியடித்து விரட்டினார்.

ஜராசந்தனின் செல்வம், பிற வசதிகளோடு ஒப்பிட்டால், கிருஷ்ணரின் செல்வம் குறைவு. ஆகவே ஜராசந்தனின் வலிமையான சேனையை எளிதில் அடியோடு அழிப்பது கடினம் என்று உணர்ந்து கொண்டார் கிருஷ்ணர். ஜராசந்தனின் தொடர்ந்த படையெடுப்புகளால் மதுரை மக்களுக்கு நேர்ந்து வந்த துன்பத்தைப் போக்க அவர் அவர்களைக் கூட்டிக்கொண்டு ஒரு நீண்ட பயணத்தை மேற்கொண்டார். சுமார் ஆயிரம்

மைல்களைக் கடந்து போய்ப் பாரதத்தின் மேற்குக் கடற்கரையில் துவாரகை என்ற நகரத்தை நிறுவினார்.

பிறகு அவர் துவாரகையின் ஆட்சிப் பொறுப்பைத் தன் உறவினர்களான விருஷ்ணி இனத்தாரிடம் ஒப்படைத்தார். அவர் ஒரு சிறந்த போர் வீரராகவும், திறமை வாய்ந்த நிர்வாகியாகவும், தேர்ந்த அரசியல் ஞானியாகவும் இருந்தாலும் தாமே அரியணையேற விரும்பவில்லை. அவர் தாம் நிறுவிய ராச்சியத்தை மக்களுக்கே அளித்துவிட்டார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தம் 53ம் வயதில் தம் பழைய நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று மறுபடியும் பிருந்தாவனத்துக்குப் போய் அங்கு சுமார் ஒரு வார காலம் தங்கினார். அவரது வருகையால் மகிழ்சியடைந்த மக்கள் உற்சாக மிகுதியால் அவர் ஏறி வந்த தேரின் குதிரைகளை அவிழ்த்துவிட்டுத் தாங்களே அதை இழுத்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். இந்தத் தேர் ஊர்வலத்தின் நினைவாக உலகெங்கும் உள்ள இந்துக்கள் ஆண்டுதோறும் ரத யாத்திரை விழா கொண்டாடுகிறார்கள்.

கிருஷ்ணரின் வாழ்க்கை மிகவும் பரபரப்பு மிக்கதாக இருந்தது. ஆனால் அவர் எப்போதும் அமைதியாகவும், பற்றற்றவராகவும் இருந்தார். அவர் பிறருடைய துன்பங்களைத் தாமே ஏற்றுக்கொண்டார். தம் உயிரையே ஆபத்துக்குள்ளாக்கிக் கொண்டு ஏழை எளியோருக்காகச் செயல் பட்டார்.

பிராக்ஜோதிஷ்பூர் என்ற நகரத்தில் ஒரு கொடுங்கோல் மன்னன் இருந்தான். அவன் 1600 இளம் பெண்களைக் கைது செய்து காவலில் வைத்திருந்தான். தன் மக்களையும் கொடுமைப் படுத்தினான். அவனுடைய குடிகள் கிருஷ்ணரிடம் அடைக்கலம் வேண்டினர்.

கிருஷ்ணர் போரிட்டு அந்த அரசனைக் கொன்று அவனுடைய மகனை அரியணையில் அமர்த்தினார். இப்போது ஒரு பிரச்னை எழுந்தது. இறந்துபோன அரசனால் சிறை வைக்கப்பட்டிருந்த 1600 பெண்களின் கதி என்ன ? அவர்களை யார் பராமரித்துக் காப்பாற்றுவார்கள் ?

அந்தப் பெண்கள் தம் மனைவியராகக் கருதப்படுவார்கள் என்றும், அவருடைய நாட்டு மக்கள் அவர்களுடைய பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் கிருஷ்ணர் அறிவித்தார். அவர் அந்தப் பெண்களுடன் வேறு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. இவ்வாறு அவர் அந்த அநாதை மகளிரைக் காப்பாற்றினார். இன்றும் இன்னலுக்குள்ளான இந்துப் பெண்கள் கிருஷ்ணரைத் தங்கள் பாதுகாப்பாளராகக் கருதி நம்பிக்கை பெறுகிறார்கள்.

கிருஷ்ணர் அன்பும் பரிவும் வாய்ந்தவராகவும், சிறந்த அறிவாளியாகவும்,

விஞ்ஞானியாகவும் விளங்கினார். அவர் குழலிசையில் வல்லவர். அவர் ஒரு சிறந்த அரசியல் நிபுணராகவும் பெரு வீரராகவும் இருந்தார். எனினும், அவர் சாதாரண மனிதர்களைப் போல எளிய வாழ்க்கையே நடத்தினார்.

கிருஷ்ணர் பகவானின் சொந்தப் பிள்ளை என்றும் அவர் மக்களின் துன்பங்களைக் குறைப்பதற்காக இவ்வுலகில் பிறந்து அந்தத் துன்பங்களைத் தாமே அனுபவித்ததாகவும் இந்துக்கள் நம்புகிறார்கள்.

அரண்மனையில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, மெத்தையில் படுத்துக்கொண்டு சுகமாக உறங்க வசதி இருந்தது அவருக்கு. எனினும் அவர் ஏழைகளைப் போல் மரத்தடியில் ஓய்வு எடுத்துக்கொள்வார். கி.மு 1475ம் ஆண்டில் ஒரு நாள் அவர் ஒரு மரத்தடியில் படுத்திருந்தார். அப்போது அவருடைய சிவந்த பாதங்களைத் தொலைவிலிருந்து பார்த்த ஒரு வேடன் அவற்றை ஒரு சிவப்புப் பறவை என எண்ணி அவற்றின் மேல் அம்பெய்தினான். அம்பு கிருஷ்ணரின் பாதங்களைக் குத்திக் கிழித்தது. வேடன் உண்மையை அறிந்துகொண்டபோது தன் செயலுக்கு மிகவும் வருந்தித் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டான். கிருஷ்ணர் அவனைத் தடுத்து அவனுக்கு ஆசியளித்தார். சிறிது நேரத்துக்குப் பின் அவரது உயிர் பிரிந்தது.

கிருஷ்ணர் மறைந்து பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும் இலட்சக்கணக்கான பக்தர்கள் இன்றும் அவரது நினைவைப் போற்றி வருகின்றனர். அவர்களுடைய காதுகளில் அவரது குழலிசை இன்றும் ஒலிக்கிறது.

கிருஷ்ணரின் பூசனை பலவகைகளில் நடைபெறுகிறது. குழந்தைகள், இளைஞர், முதியோர், ஆண்கள், பெண்கள் எல்லோரும் அவரைத் தங்கள் இலட்சியமாகக் கருதுகின்றனர். அவர் இல்லறத்தில் இருந்துகொண்டே அதே சமயத்தில் பற்றற்ற துறவியாகவும் விளங்கினார். எல்லாச் செல்வங்களும் படைத்திருந்தும் அவர் துறவி போல் வாழ்க்கை நடத்தினார்.

அவர் உயிர் துறந்த பின் சிறிது காலத்திலேயே கடலுக்கு அடியில் ஏற்பட்ட ஒரு கடுமையான நில நடுக்கத்தின் விளைவாகத் துவாரகையும் சில கடலோரப் பகுதிகளும் கடலுக்குள் முழுகி விட்டன.

பகவான் கிருஷ்ணர் கடவுளின் பிரதிநிதி, சகலரின் இரட்சகர். அவரை நேசிக்கும் எல்லோருக்கும் அவர் வெற்றி, மங்கலம், அமைதி இவற்றை அளிக்கிறார், ஏழைகளையும், கொடுமைக்குள்ளானவர்களையும் கொடுமையிலிருந்து காப்பாற்றுகிறார். அவர் ஏழை உழைப்பாளி மக்களுக்காகத் தம் சுகங்களைத் துறந்தார். அவர் ஒருபோதும் அரசனாகவில்லை.

கிருஷ்ணரிடம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவரின் துன்பங்கள் நீங்கும். அவர் சுவர்க்கத்தில் கடவுளின் அண்மையில் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்.

கிருஷ்ணர் பகவத் கீதையில் கூறியுள்ளார் -

यदा यदाहि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युथानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम्॥
परित्राणाय साधनाम् विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युग॥

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர் பவதி பாரத
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்;
பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

எப்போதெல்லாம் தருமம் இன்னலுக்குள்ளாகி அதருமம் தழைக்கிறதோ, அப்போதெல்லாம் நான் நல்லோரைக் காப்பாற்றி, கெட்டவர்களை அழித்துத் தருமத்தை மீண்டும் நிலை நாட்டுவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் என்னைப் படைத்துக் கொள்கிறேன்.

கீதை இந்து சமயத் தத்துவங்களின் கருவூலம், இந்து வாழ்க்கை இலட்சியத்தை அடைவதற்கான வழிகாட்டி. அது இந்துக்களின் மிகவும் மரியாதைக்குரிய நூல். பிற சமயத்தவர்களும் அதைப் படித்துத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் அதன் அறிவுரைகளைப் பின்பற்றலாம். மகாபாரதப் போர் தொடங்குமுன் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அளித்த அறிவுரைகளின் தொகுப்பு கீதை.

இந்தப் போர் கி.மு 1550ம் ஆண்டில் தில்லிக்கு வடமேற்கே சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குருட்சேத்திரத்தில் கவுரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடைபெற்றது. கிருஷ்ணர் தியான நிலையில் இருந்துகொண்டு இந்த உபதேசத்தை அர்ஜுனனுக்கு, அவன் மூலமாக உலகுக்கு, அளித்தார்.

வாழ்க்கை நடத்தவும் கடவுளை அடையவும் சிறந்த வழியைக் கிருஷ்ணர் கீதையில் போதித்தார்.அவரது கருத்துப்படி கரும யோகம் (கடுமையான உழைப்பு) ஞான யோகத்தை (ஞானத்தைப் பெறப் பயிற்சி) விடச் சிறந்தது. கடவுள் பரம சத்தியம், முழுமையானவர், முதலும் முடிவும் அற்றவர், எல்லாக் காரனங்களுக்கும் காரணர். வருண பேதங்கள் மனிதர்களின் சக்திக்கேற்ப அவரவரது தொழிலின் அடிப்படையில் மனிதனால்

ஏற்படுத்தப்பட்டவை, கடவுளாலல்ல. உலகம் முழுதும் கடவுளின் படைப்பு. அவர் யாரையாவது வெறுத்தால் அவனைத் தாமே அழிக்க வல்லவர், இதற்காக வேறு ஒருவரது உதவியும் அவருக்குத் தேவையில்லை.

பொய்யர்கள் மோட்சம் (இறுதி விடுதலை) பெற மாட்டார்கள் என்கிறது கீதை. அத்தகையவர்களை ஒதுக்கவேண்டும். நாம் நமது கடமையை முழு ஈடுபாட்டுடன் அதன் பலனை எதிர்பாராமல் செய்ய வேண்டும். அந்த கருமத்துக்குரிய பலன் தானாகவே ஏற்படும்.

உலக வாழ்க்கையைத் துறந்து துறவியாவது எளிது. ஆனால் அது கடவுளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி தராது என்கிறது கீதை. பக்தர்கள் கடுமையான உழைப்பாலும் நல்ல வழியில் அறிவைச் செலுத்தியும் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவதற்காக வாழ்க்கைப் போரில் ஈடுபட்டு வெற்றி பெற வேண்டும் என்பதே கிருஷ்ணரின் அறிவுரை. இவ்வாறு வெற்றி பெறுபவர்களே கடவுளுக்குப் பிரியமானவர்கள். மெய்ஞானம் பொய்யின் புகை மூட்டத்தால் மூடப்பட்டிருக்கிறது, ஆகையால் காலத்துக்கேற்ற ஞானத்தைப் பயில வேண்டும் என்று கீதை சொல்கிறது.

கீதை 18 அதிகாரங்கள் கொண்டது. அதில் 700 சுலோகங்கள் உள்ளன.

உழைத்து வாழும் மக்களின் நலனுக்காகக் கீதையின் சில சுலோகங்கள் பின் வரும் அதிகாரத்தில் அளிக்கப்படுகின்றன.

தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதாஹா ஸ்வயா.

தங்கள் தங்கள் தன்மைகளால் கட்டுப்படுத்தப்பட்டு, தங்கள் இச்சைகளுக்கு வசப்பட்டு விவேகமிழந்தவர்கள் வேறு வேறு தேவதைகளிடம் அடைக்கலம் தேடுகிறார்கள்.

# கீதை சுலோகங்கள்

1

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ।।

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்;
மம மானுவர்த்தந்தே மனுஷ்யாஹா பார்த்த ஸர்வசஹ.

மனிதர்கள் எந்த வகையில் என்னிடம் சரணடைகிறார்களோ அந்த வகையில் நான் அவர்களை ஏற்றுக்கொள்கிறேன். பார்த்தனே, மனிதர்கள் எல்லா வகையிலும் நான் ஏற்படுத்திய வழியையே பின்பற்றுகிறார்கள்.

2

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ।।

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன;
மா கர்மபலஹேதுர்பூர்மா தே ஸங்கோஅஸ்த்வகர்மணி.

உனக்குக் கருமம் செய்யவே உரிமை இருக்கிறது, அதன் பலனில் ஒருபோதும் அல்ல. பலனுக்கான ஆசை உன் செயலுக்குக் காரணமாக இருக்கக் கூடாது. ஆனால் நீ அதற்காக ஒன்றும் செய்யாமலேயே இருந்துவிட விரும்பாதே.

3

यदा ते मोहकलिलं बुद्धिर्व्यतितरिष्यति ।
तदा गन्तासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ।

யதா தே மோஹகலிலம் புத்திர்வ்யதிதரிஷ்யதி;
ததா கந்தாஸி நிர்வேதம் ஸ்ரோதவ்யஸ்ய ஸ்ருதஸ்யச.

உன் அறிவு மோகமாகிய சேற்றைக் கடந்து விட்டால் நீ இதுவரை கேட்டதும், இனிமேல் கேட்கவிருப்பதுமான எல்லா விஷயங்களிலும் பற்றற்றவனாகி விடுவாய்.

4

नमः पुरस्तादथ पृष्ठतस्ते नमोऽस्तु ते सर्वत एव सर्व ।
अनन्तवीर्यामितविक्रमस्त्वं सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः ।।

நமஹ புரஸ்தாதத் ப்ருஷ்டதஸ்தே நமோஸ்துதே ஸர்வத ஏவ ஸர்வ;

அனந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி
ஸர்வஹ.

நான் உன்னை முன்னும் பின்னும் எல்லாத் திசைகளிலும் வணங்குகிறேன். நீ எல்லையற்ற வீரியமும் வலிமையும் வாய்ந்தவன். நீயே எல்லாவற்றையும் தாங்கியிருக்கிறாய். நீயே எல்லாமாக இருக்கிறாய்.

5

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वामृतमश्नुते ।
अनादिमत्परं ब्रह्म न सत्तत्रासदुच्यते ।।

நேயம் யத்தத் ப்ரவக்ஷாமி யத்ஞாத்வா ஸர்வமஸ்னுதே;
அனாதி மத்பரம்ப்ரஹ்ம ந ஸத் தத்ராஸதுச்யதே.

எதை அறிந்துகொண்டால் இறவாமையை அனுபவிக்கலாமோ அதையெல்லாம் நான் சொல்கிறேன். பிரும்மம் முதல் அற்றது. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது. 'சத்', 'அசத்' இரண்டையும் கடந்தது.

6

दिवि सूर्यसहस्त्रस्य भवेद्युगपदुत्थिता ।
यदि भा: सदृशी सा स्यात्भासस्तस्य महात्मन: ।।

திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா;
யதி பாஹா ஸத்ருசீ ஸா ஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மனஹ.

ஆயிரம் சூரியன்கள் ஒரே சமயத்தில் உதித்தால் ஏற்படும் பிரகாசத்தை ஒத்தது மகத்தான பிரும்மத்தின் ஒளி.

7

सर्वत: पाणिपादं तत्यर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वत: श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ।।

ஸர்வதஹ பாணி பாதம் தத்யர்வதோஅக்ஷி சிரோமுகம்;
ஸர்வதஹ ச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி.

எல்லாப் பக்கங்களிலும் பிரும்மத்தின் கால்கள், கைகள், கண்கள், தலைகள், காதுகள் இருக்கிறாற்போல அது எங்கும் வியாபித்திருக்கிறது.

8

नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥

நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபுஹு ;
அக்ஞானேனாவ்ருதம் ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவஹ.

கடவுள் எல்லோருடய பாவ புண்ணியங்களுக்கும் அப்பாற்பட்டவர். ஜீவன்களின் அறிவு அறியாமையினால் (மோகத்தால்) மூடப்பட்டிருப்பதால் அவர்கள் குழம்புகிறார்கள்.

9

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥

ஞானேன து ததஞானம் யேஷாம் நாசிதமாத்மனஹ;
தேஷாம் ஆதித்யவத் ஞானம் ப்ரகாசயதி தத்பரம்.

அந்த அறியாமையை அறிவால் (ஞானத்தால்) அழித்து விட்டவர்களுடைய அறிவு சூரியன் போலப் பிரகாசிக்கும்.

10

बलं बलवतां चाहं कामरागविवर्जितम् ।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ॥

பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம்;
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப.

பரத சிரேஷ்டனே, நான் வலிமையானவர்களுடைய, ஆசையும் பற்றும் அற்ற, பலமாக இருப்பவன், ஜீவன்களின் தருமத்தோடு முரண் படாத காமமும் நான்.

11

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥

உத்தமஹ புருஷஸ்த்வன்யஹ பரமாத்மேத்யுதாஹ்ருதஹ;
யோ லோகத்ரயமாவிஸ்ய பிபர்த்யவ்யய ஈஸ்வரஹ.

கடவுள் உத்தம புருஷர். அவர் பரமாத்மா எனப்படுகிறார். அவர் மூவுலகங்களிலும் நிறைந்து எல்லாவற்றையும் தாங்கியிருக்கிறார். அவர் அழிவற்றவர்.

12

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।
परस्योत्सादनाथ वा तत्तामसमुदाहृतम् ॥

மூடக்ராஹேணாத்மனோ யத் பீடயா க்ரியதே தபஹ;
பரஸ்யோத்ஸாதனார்த்தம் வா தத்தாமஸமுதாஹ்ருதம்.

பிறரை அழிப்பதற்காக ஒருவன் தன்னை வருத்திக்கொண்டு மேற்கொள்ளும் விரதம் அல்லது தவம் தாமச குணம் பொருந்தியது எனப்படுகிறது.

13

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्विकं स्मृतम् ॥

தாதவ்ய்மிதி யத்தானம் தீயதே அனுபகாரிணே;
தேசே காலே ச பாத்ரே ச தத்தானம் ஸாத்வீகம் ஸ்ருதம்.

இடம், காலம், பாத்திரம் இவற்றைக் கருத்தில் கொண்டு ஒருவன் தனக்கு எந்த உதவியையும் செய்யாதவனுக்குச் செய்யும் தானமானது சத்துவ குணம் பொருந்தியதாகும்.

14

यत्तु प्रत्युपकाराथ फलमुद्दिश्य वा पुनः ।
दीयते च परिक्लिष्टं तद्दानं राजसं स्मृतम् ॥

யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திஸ்ய வா புனஹ;
தீயதே ச பரிக்லிஷ்டம் தத்தானம் ராஜஸம் ஸ்ம்ருதம்.

ஒருவன் தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்துக்கு நன்றியாகவோ அல்லது ஒரு பலனைக் கருதியோ தானம் செய்தால் அந்தத் தானம் ராஜஸ குணம் பொருந்தியது.

15

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

ஈஸ்வரஹ ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜுன திஷ்டதி;
ப்ராமயன்ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா.

அர்ஜுனா, கடவுள் எல்லா ஜீவன்களுடைய இதயங்களிலும் வீற்றிருக்கிறார். அவர் மாயையால் அந்த ஜீவன்களை இயந்திரங்களால் இயக்கப்பட்டவர் போலக் குழம்பச் செய்கிறார்.

16

परस्तस्मात्तु भावोऽन्योऽव्यक्तोऽव्यक्तात्सनातनः ।
यः स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ॥

பரஸ்தஸ்மாத்து பாவோன்யோ அவ்யக்தோ அவ்யக்தாத்ஸனாதனஹ;
யஹ ஸ ஸர்வேஷு பூதேஷு நஸ்யத்ஸு ந வினஸ்யதி.

இந்த உலகம் சார்ந்த, முதலில் வெளிப்பட்டுப் பிறகு சாவினால் மறைந்து போன, தன்மையைக் கடந்து ஒரு வெளிப்படாத சனாதனமான தன்மை, உள்ளது. ஜீவன்கள் அழிந்தாலும் இந்தத் தன்மை அழிவதில்லை.

17

अश्रद्धया हुतं दत्तं तपस्तप्तं कृतं च यत् ।
असदित्युच्यते पार्थ न च तत्प्रेत्य नो इह ॥

அஸ்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் ச யத்;
அஸதித்யுச்யதே பார்த்த ந ச தத்ப்ரேத்ய நோ இஹ.

சிரத்தையின்றிச் செய்யப்படும் ஹோமம், தானம், தவம் இவை 'அசத்' எனப்படும். அவை இம்மைக்கும் பயன்படா, மறுமைக்கும் உதவா.

18

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥

யத்யதாசரதி ஸ்ரேஷ்டஹ தத்ததேவேதரோ ஜனஹ;
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததனுவர்த்ததே.

சமூகத்தில் உயர்ந்தவன் என்னென்ன செய்கிறானோ அதையே மற்றவர்களும் செய்கின்றனர். அவனுடைய செயல்களையே சிறந்ததாகக் கொண்டு அவற்றையே பின்பற்றுகின்றனர்.

19

उत्सीदेयुरिमे लोका: न कुया कर्म चेदहम् ।
संकरस्य च कर्ता स्यामुपहन्यामिमा: प्रजा: ।।

உத்ஸீதேயுரிமே லோகாஹா ந குர்யாம் கர்ம சேதஹம்;
ஸங்க்ரஸ்ய ச கர்த்தா ஸ்யாம் உபஹன்யாமிமாஹா ப்ரஜாஹா.

நான் கருமங்களைச் செய்யாவிட்டால் இந்த உலகங்கள் (ஜீவன்கள்) அழிந்து விடும். நான் இந்த ஜீவன்களின் அழிவுக்குக் காரணமாகி விடுவேன்.

20

इन्द्रियाणि पराण्याहुरिन्द्रियेभ्य: परं मन: ।
मनसस्तु परा बुद्धिर्यो बुद्धे: परतस्तु स: ।।

இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்யஹ பரம் மனஹ;
மனஸ்து பரா புத்திர்யோ புத்தேஹ பரதஸ்து ஸஹ.

இந்திரியங்கள் (புலன்கள்) மிகவும் சூட்சுமமானவை (நுண்ணியவை). அவற்றை விடச் சூட்சுமமானது மனம். மனதை விடச் சூட்சுமமானது அறிவு (புத்தி). அறிவை விடக் கடவுள் சூட்சுமமானவர்.

21

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परंतप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणै: ।।

ப்ராஹ்மணக்ஷத்ரியவிசாம் ஸூத்ராணம் ச பரம்தபஹ;
கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர்குணைஹி.

பிரம்மண, சத்திரிய, வைசிய, சூத்திரர்களின் தொழில்கள் அவரவரது குணத்திற்கேற்ப அளிக்கப்படுகின்றன.

22

संन्यासस्तु महाबाहो दु:खमाप्तुमयोगत: ।
योगयुक्तो मुनिर्ब्रह्म नचिरेणाधिगच्छति ।।

ஸன்யாஸஸ்து மஹாபாஹோ துக்கமாப்துமயோகதஹ;
யோகயுக்தோ முனிர்ப்ரஹ்ம நசிரேணாதிகச்சதி.

கருமயோகத்தில் நிலைத்திராமல் கருமங்களைத் துறப்பது கடினம். கருமயோகத்தில் நிலத்திருப்பவன் விரைவில் பிரும்மத்தை அடைகிறான்.

23

न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ॥

ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபுஹு;
ந கர்மபல ஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே.

கடவுள் கருமங்களையோ, அவற்றைச் செய்பவனையோ, அவற்றின் பலனையோ படைப்பதில்லை. கருமங்கள் மனிதன் சுபாவப்படி நிகழ்கின்றன.

24

सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।
मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ॥

ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாச்ரயஹ;
மத்ப்ரஸாதாதவாப்னோதி சாஸ்வதம் பதமவ்யயம்.

என்னிடம் அடைக்கலம் பெற்றவன் எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருந்தாலும், என் கருணையால் அழிவற்ற பதவியை (நிலையை) அடைகிறான்.

25

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மணஹ;
சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்யேதகர்மணஹ.

நீ தொடர்ந்து உன் கருமங்களைச் செய். கருமம் எதுவும் செய்யாமல் இருப்பதை விடக் கருமம் செய்து கொண்டிருப்பது மேலானது. ஒரு கருமத்தையும் செய்யாமலேயே இருந்தால் உடலைக் கூடக் காப்பாற்றிக் கொள்ள இயலாது.

26

मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः ।
राक्षसीमासुरो चैव प्रकृतिं मोहिनो श्रिताः ।।

மோகாசா மோககர்மாணோ மோகக்ஞானா விசேதஸஹ;
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹினீம் ச்ரிதாஹா.

ராட்சச-அசுர குணங்கள் வாய்ந்தவர்கள் புத்தி கெட்டுப் போய், தவறான நம்பிக்கைகளோடு கெட்ட காரியங்களைச் செய்கிறார்கள்.

27

यान्ति देवव्रता देवान्पितन्यान्ति पितृव्रताः ।
भूतानि यान्ति भूतेज्या यान्ति मद्याजिनोऽपि माम् ।।

யாந்தி தேவவ்ரத தேவான்பித்ருன்யாந்தி பித்ருவ்ரதாஹா;
பூதானி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜினோஅபி மாம்.

தேவதையை வழிபடுபவர்கள் தேவதைகளையும், பித்ருக்களை வழிபடுபவர்கள் பித்ருக்களையும், பூதங்களை வழிபடுபவர்கள் பூதங்களையும், என்னை வழிபடுபவர்கள் என்னையும் அடைகிறார்கள்.

28

यः सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ।।

யஹ ஸர்வத்ரானபி ஸ்னேஹஸ்தத்தத்ப்ராப்ய சுபாசுபம்;
நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா.

எதிலும் பற்றற்றவன், இன்பம் நேரும்போது மகிழ்ச்சியும் துன்பம் வந்தால் துக்கமும் அடையாதவன்,நிலையான புத்தி உள்ளவன் ஆவான்.

29

क्रोधात्भवति सम्मोहः सम्मोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ।।

க்ரோதாத்பவதி ஸம்மோஹஹ ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரமஹ;
ஸ்ம்ருதிப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத்ப்ரணஸ்யதி.

கோபத்தால் மோகம் (அறியாமை) ஏற்படுகிறது; மோகத்தால் நினைவு தவறுகிறது; நினைவு தவறினால் அறிவு கெடுகிறது; அறிவு கெட்டவன் அழிகிறான்.

30

न कर्मणामनारम्भान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥

ந கர்மணாமனாரம்பான் நைஷ்கர்ம்யம் புருஷோஅஸ்னுதே;
ந ச ஸன்யஸனாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி.

ஒருவன் கருமம் செய்யாமலிருப்பதாலேயே அவனைக்(மனதால், வாக்கால், உடலால்) கருமம் செய்யாதவனாகக் கருதமுடியாது. துறவினாலேயும் ஒருவன் மோட்சத்தை அடைய முடியாது.

31

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥

நஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்;
கார்யதே ஹ்யவசஹ கர்ம ஸர்வஹ ப்ரக்ருதிஜைர்குணைஹி.

ஒருவரும் ஒரு கண நேரங்கூடக் கருமம் செய்யாமலிருக்க முடியாது. ஏனெனில் எல்லோரும் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் கருமம் செய்யத்தான் வேண்டும்.

32

तस्मादसक्तः सततं कार्यं कर्म समाचर ।
असक्तो ह्याचरन्कर्म परमाप्नोति पूरुषः ॥

தஸ்மாதஸக்தஹ ஸததம் கார்யம் கர்ம ஸமாசர;
அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷஹ.

ஆகவே பலனில் பற்று வைக்காமல் கருமம் செய்து கொண்டே இரு. இவ்வாறு செய்து கொண்டே இருந்தால் மோட்சத்தை அடையலாம்.

33

य इमं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति ।
भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयः ॥

ய இதம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதாஸ்யதி;
பக்திம் மயி பராம் க்ருத்வா மாமைவேஷ்யத்யஸம்சயஹ.

எவன் என்னிடம் பக்தி செலுத்திக்கொண்டு இந்தப் பரம ரகசியத்தைப் பக்தர்களிடம் பரப்புகிறானோ, அவன் என்னையே அடைகிறான். இதில் ஐயமில்லை.

34

चातुर्वण्य मया सृष्टं गुणकर्मविभागश: ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ।।

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகசஹ;
தஸ்யகர்தாரமபி மாம் வித்தி அகர்த்தாரமவ்யயம்.

(மனிதர்களின்) நான்கு வர்ணங்களும் (அவர்களுடைய) குணங்களின் தன்மையைப் பொறுத்து என்னால் படைக்கப்பட்டவை.
நான் அவற்றின் 'கர்த்தா' (செய்தவனாக) வாக இருந்தாலும் என்னை அழிவற்ற 'அகர்த்தா' வாக அறிந்துகொள்.

35

श्रेयान्स्वधर्मो विगुण: परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेय: परधर्मो भयावह: ।।

ஸ்ரேயான்ஸ்வதர்மோ விகுணஹ பரதர்மாத்ஸ்வனுஷ்டிதாத்;
ஸ்வதர்மே நிதனம் ஸ்ரேயஹ பரதர்மோ பயாவஹஹ.

ஒருவனது கருமம் கீழானதாகக் கருதப்பட்டாலும் அவன் வேறு கருமத்தைச் செய்யாமல் தன் கருமத்தையே செய்வது சிறந்தது. தன் கருமத்தைச் செய்யும்போது இறந்தாலும் அந்த மரணம் சிறப்பானது. பிற கருமங்கள் பயங்கரமானவை.

36

संन्यास: कर्मयोगश्च नि:श्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात्कर्मयोगो विशिष्यते ।।

ஸன்யாஸஹ கர்மயோகஸ்ச நிஸ்ரேயஸகராவுபௌ;
தயோஸ்து கர்மஸன்யாஸாத் கர்மயோகோ விசிஷ்யதே.

துறவு, கருமத்தில் ஈடுபட்டிருப்பது இரண்டுமே சிறந்தவைதாம். எனினும் இவற்றில் கருமத்தில் ஈடுபட்டிருப்பதே துறவை விடச் சிறந்தது.

37

सांख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यगुभयोर्विन्दते फलम् ॥

ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலாஹா ப்ரவதந்தி ந ப்ண்டிதாஹா;
ஏகமப்யாஸ்திதஹ ஸம்யகுபயோர்விந்ததே பலம்.

சாங்கியமும், கர்மயோகமும் வெவ்வேறு என்று சொல்பவர்கள் அறிவிலிகளே, அறிஞர்களல்லர். இவ்விரண்டில் ஏதாவது ஒன்றைச் சரியாகக் கடைப்பிடித்தாலே இரண்டுக்குரிய பலனும் கிடைக்கும்.

38

नियतं सङ्गरहितमरागद्वेषतः कृतम् ।
अफलप्रेप्सुना कर्म यत्तत्सात्त्विकमुच्यते ॥

நியதம் ஸங்கரஹிதமராகத்வேஷதஹ் க்ருதம்;
அபலப்ரேப்ஸுனா கர்ம யத்தத்ஸாத்விகமுச்யதே.

பற்றில்லாமலும், ஆசை, கோபம் இவற்றால் தூண்டப்படாமலும் பலனை விரும்பாமலும் செய்யப்படும் கருமம் 'சாத்துவீக' கருமம் எனப்படுகிறது.

39

रागी कर्मफलप्रेप्सुर्लुब्धो हिंसात्मकोऽशुचिः ।
हर्षशोकान्वितः कर्ता राजसः परिकीर्तितः ॥

ராகீ கர்ம பல ப்ரேப்ஸுர் லுப்தோ ஹிம்ஸாத்மகோ ஸுசிஹி;
ஹர்ஷசோகான்விதஹ கர்தா ராஜஸஹ பரிகீர்திதஹ.

ஆசையால் தூண்டப்பட்டவன், தருமத்தின் பலனை விரும்புபவன், கொடிய உள்ளங்கொண்டவன், தூய்மையற்றவன், மகிழ்ச்சியாலும் துக்கத்தாலும் பீடிக்கப்பட்டவன் - இத்தகையவன் 'ராஜஸிக' கருமம் செய்பவனாகிறான்.

40

यत: प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानव: ॥

யதஹ ப்ரவ்ருத்திர்பூதானாம் யேன ஸர்வமிதம் ததம்;
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவஹ.

எவனிடமிருந்து ஜீவன்களின் தன்மைகள் பிறந்தனவோ, எவன் எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறானோ, அந்த ஈசுவரனைத் தன் கருமத்தால் பூசிக்கிறவன் சித்தி பெறுகிறான்.

41

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचार: स उच्यते ॥

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன்;
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசாரஹ ஸ உச்யதே.

வெளிப் பார்வைக்குப் புலன்களைத் துறந்து மனதால் அவற்றில் பற்று வைத்திருக்கும் மூடன் கபடன் ஆவான்.

42

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ॥

அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருத்க்விதம்;
விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா தைவம்சாத்ர பஞ்சமம்.

ஒரு காரியம் சித்தி பெற ஐந்து காரணங்கள் உண்டு - இடம், கர்த்தா (செய்பவன்), வெவ்வேறு சாதனங்கள் (கருவிகள்), வெவ்வேறு செயல்கள், இறுதியில் ஐந்தாவது தெய்வம் (மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி).

43

यज्ञदानतप:कर्म न त्याज्यं कार्यमेव तत् ।
यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ॥

யக்ஞ தான தபஹ்கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவதத்;
யக்ஞோ தானம் தபஸ்சைவ பாவனானி மனீஷிணாம்.

யக்ஞம், தானம், தவம் இவற்றை விட்டுவிடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும். இவையெல்லாம் மனிதர்களுக்குப் புனிதமானவை.

44

दु:खमित्येव यत्कर्म कायक्लेशभयात्त्यजेत् ।
स कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ॥

துக்கமித்யேவ யத்கர்ம காயக்லேச பயாத்யஜேத்;
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாக பலம் லபேத்.

ஒரு காரியம் கடினமானது என்று ஒருவன் கஷ்டத்துக்குப் பயந்து அந்தக் காரியத்தைக் கைவிட்டால், அது 'ராஜஸ' தியாகம் ஆகும். அந்தத் தியாகத்தால் பலன் கிடைக்காது.

45

न हि देहभृता शक्यं त्यक्तुं कर्माण्यशेषत: ।
यस्तु कर्मफलत्यागी स त्यागीत्यभिधीयते ॥

ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்யசேஷதஹ;
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீத்யபிதீயதே.

உடலெடுத்தவர்களால் ஒருபோதும் கருமம் செய்வதை முழுமையாக விட்டுவிட முடியாது. ஆனால் எவன் தன் கருமங்களின் பலனைத் துறக்கிறானோ அவனே உண்மையான தியாகி.

46

इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन ।
न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति ॥

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன;
ந சாசுஸ்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோ அப்யஸூயதி.

அறிவைப் பெற முயற்சி செய்யாதவனுக்கோ, என்னிடம் பக்தியற்றவனுக்கோ, கேட்க ஆர்வமற்றவனுக்கோ, என்னை

வெறுப்பவனுக்கோ என்னுடைய இந்த உபதேசத்தைச் சொல்லக்கூடாது.

47

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परंतप ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ॥

அஸ்ரத்தானாஹா புருஷாஹா தர்மஸ்யாஸ்ய பரந்தப;
அப்ராப்ய மாம் நிவர்தந்தே ம்ருத்யு ஸ்ம்ஸார வர்த்மனி.

எதிரிகளை அழிப்பவனே ! என்னுடைய இந்த உபதேசத்தில் சிரத்தையற்றவர்கள் என்னை அடைய இயலாமல் மீண்டும் மீண்டும் மரணச் சக்கரத்தில் அகுப்பட்டுச் சுழல்கிறார்கள்.

48

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप ॥

க்லைப்யம் மா ஸ்ம கமஹ பார்த்த நைதத்வய்யுபபத்யதே;
க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட பரந்தப.

கோழைத்தனத்துக்கு இடம் கொடுக்காதே. அது உனக்கு ஏற்றதல்ல. அற்பமான இதய பலவீனத்தைத் துறந்து எழுந்து நில், எதிரிகளை அழிப்பவனே!

# அன்றாடப் பிரார்த்தனை

## (இந்துக்களின் அவசியக்கடமை)

இந்துக்கள் தினந்தோறும் குறைந்தது கீழ்க்கண்ட மந்திரங்களையாவது இரண்டு முறை உச்சரிக்க வேண்டும். 10 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் இவ்வாறு செய்ய வேண்டும். வேத மந்திரங்களை அவற்றுக்குறிய ஸ்வரத்துடன் உச்சரிப்பவர்கள் அதிசயிக்கத்தக்க அளவில் தேக ஆரோக்கியம், செல்வம், பலம், அமைதி இவற்றைப் பெறுவார்கள். அவர்களுடைய எல்லா முயற்சிகளும் வெற்றி பெறும். அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமையும். எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் இதைச் செய்யலாம்; எனினும் அதிகாலையிலும் அந்தி வேளையிலும் கோயிலில் அல்லது ஒரு தோட்டத்தில் பலர் கூடி இந்த மந்திரங்களை உச்சரித்தால் சிறப்பான பலன் கிடைக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த மந்திரங்களின் சக்தி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவை ஸ்வரத்துடன் உச்சரிக்கப்படும்போது அசாதாரணத் தன்மை வாய்ந்த ஓர் அதிர்வு ஏற்படுகிறது; இதன் விளைவாக உச்சரிப்பவர்களைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையம் தோன்றுகிறது. தற்கால அறிவியல் இந்த மந்திர சக்தியை உணருகிறது, ஆனால் அதன் காரணத்தை விளக்க அறிவியலால் இயலவில்லை. எவர் வேண்டுமானாலும் இந்த மந்திரங்களை உச்சரித்துப் பலன் பெறலாம்.

### மந்திரங்கள்

ॐ श्री विष्णु: ॐ श्री विष्णु: ॐ श्री विष्णु:

ॐ भूर्भुव: स्व: तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि ।
धियो यो न: प्रचोदयात् ॥

ஓம் ஸ்ரீ விஷ்ணுஹு, ஓம் ஸ்ரீ விஷ்ணுஹு, ஓம் ஸ்ரீ விஷ்ணுஹு.
ஓம் பூர்புவஸ்ஸுவ : தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி;
தியோயோன: ப்ரசோதயாத்.

ॐ जवाकुसुमसंकाशं काश्यपेयं महाद्युतिम् ।
ध्वान्तारिं सर्वपापघ्नं प्रणतोऽस्मि दिवाकरम् ॥

ஓம் ஜவாகுஸுமஸங்காசம் காச்யபேயம் மஹாத்யுதிம்;
த்வாந்தாரிம் ஸர்வபாபக்னம் ப்ரணதோஸ்மி திவாகரம்.

ॐ वक्रतुण्ड महाकाय सूर्यकोटिसमप्रभ
निर्विघ्नं कुरू मे देव सर्वकार्येषु सर्वदा ।
ॐ नमो गणपतये । ॐ नमो गणपतये ॥

ஓம் வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடிஸமப்ரப;
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா.
ஓம் நமோ கணபதயே! ஓம் நமோ கணபதயே!

ॐ बन्दे सर्वभूते विराजमानम् ईश्वरम् एकमेवाद्वितीयम् ।
प्रणमामि देवरूपेण तान् सर्वान् ईश्वरप्रेरितदूतान् ॥
ईश्वर-प्रेरिता दूता आगच्छन्ति देवरूपेण पुनः पुनः ।
तन्मध्ये श्रेष्ठत्रयं ब्रह्माविष्णुमहेश्वराः ॥

ஓம் வந்தே ஸர்வபூதே விராஜமானம் ஈஸ்வரம் ஏகமேவாத்விதீயம்;
ப்ரணமாமி தேவரூபேண தான் ஸர்வான் ஈஸ்வரப்ரேரிததூதான்.
ஈஸ்வர-ப்ரேரிதா தூதா ஆகச்சந்தி தேவரூபேண புன:புன:
தன்மத்யே ஸ்ரேஷ்டத்ரயம் ப்ரஹ்மாவிஷ்ணுமஹேஸ்வராஹா.

ॐ नमो ब्रह्मण्य देवाय गो ब्राह्मण हिताय च ।
जगद्धिताय कृष्णाय गोविन्दाय नमो नमः ॥

ஓம் நமோ ப்ரஹ்மண்ய தேவாய கோ ப்ராஹ்மண ஹிதாய ச;
ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நமஹ.

ॐ कृष्णाय वासुदेवाय हरये परमात्मने ।
प्रणतक्लेशनाशाय गोविन्दाय नमो नमः ॥

ஓம் க்ருஷ்ணாய வாஸுதேவாய ஹரயே பரமாத்மனே;
ப்ரணதக்லேசநாசாய கோவிந்தாய நமோ நமஹ.

ॐ नागेन्द्रहाराय त्रिलोचनाय भस्माङ्गरागाय महेश्वराय ।
नित्याय शुद्धाय दिगम्बराय तस्मै नकाराय नमः शिवाय ॥

ஓம் நாகேந்த்ரஹாராய த்ரிலோசனாய பஸ்மாங்கராகாய மஹேஸ்வராய
நித்யாய சுத்தாய திகம்பராய தஸ்மை நகாராய நமஸ்சிவாய.

ॐ मन्दाकिनी सलिल-चन्दनचर्चिताय ।
नन्दीश्वर-प्रमथनाथ-महेश्वराय ।
मन्दारपुष्प-बहुपुष्प सुपूजिताय तस्मै मकाराय नमः शिवाय ॥

ஓம் மந்தாகினீ சலில-சந்தனசர்ச்சிதாய;
நந்தீஸ்வர-ப்ரமதநாத மஹேஸ்வராய;
மந்தாரபுஷ்ப-பஹுபுஷ்ப-சுபூஜிதாய தஸ்மை மகாராய நமஸ்சிவாய.

ॐ नमः शिवाय शान्ताय कारणत्रयहेतवे ।
निवेदयामि चात्मानं त्वं गतिः परमेश्वर ॥

ஓம் நமஸ்சிவாய சாந்தாய காரணத்ரயஹேதவே;
நிவேதயாமி சாத்மானம் த்வம் கதிஹிபரமேஸ்வர.

ॐ त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनातमृत्योर्मुक्षीय मामृतात् ॥

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த்தனம்;
ஊர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர்முக்ஷீய மாம்ருதாத்.

ॐ सर्वमङ्गलमाङ्गल्ये, शिवे सर्वार्थसाधिके ।
शरण्ये त्र्यम्बके गौरि नारायणि नमोऽस्तु ते!

ஓம் ஸர்வமங்களமாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே;
சரண்யே த்ரயம்பகே தேவி நாராயணி நமோஸ்து தே.

ॐ त्रिमस्तकानां ज्ञानम् एकशिरे अवस्थितं ।
चतुर्बाहुतुल्यबलं द्विहस्ते रोपितम् ।
भक्तेच्छापूरणाथ पुनः पुनः आविर्भूतम् ।
प्रणमामि तं हि ईश्वरप्रेरितदूतम् ॥

ஓம் த்ரிமஸ்தகானாம் ஞானம் ஏகசிரே அவஸ்திதம்;
சதுர்பாஹுதுல்யபலம் த்விஹஸ்தே ரோபிதம்;
பக்தேச்சா பூரணார்த்தம் புனஹ்புனஹ் ஆவிர்பூதம்;
ப்ரணமாமி தம் ஹி ஈஸ்வரப்ரேரிததூதம்.

ॐ य आस्तिको धर्मनिष्ठः स वै शूरो न नास्तिकः ।
नास्तिकः कापुरुषोऽभुत् पृथिव्यां परिधावति ।
एकांशं स्वोपार्जनेस्य देयम् दीनजनाय ।
यो भुंजीत-स्वयमेव, स मोघं केवलादी च ॥

ஓம் ய ஆஸ்திகோ தர்மனிஷ்டஹ ஸ வை சூரோ ந நாஸ்திகஹ;
நாஸ்திக: காபுருஷோபூத் ப்ருதிவ்யாம் பரிதாவதி;
ஏகாசம் ஸ்வோபார்ஜனேஸ்ய தேயம் தீனஜனாய;
யோ புஞ்ஜீத-ஸ்வயமேவ, ஸ மோகம் கேவலாதீ ச.

ॐ ईशा वास्यमिदं सव यत् किञ्च जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृध: कस्यस्विद्धनम् ॥

ஓம் ஈசாவாஸ்யமிதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்;
தேன த்யக்தேன புஞ்சீதா மா க்ருத: கஸ்யஸ்வித்தனம்.

ॐ त्वमेव माता च पिता त्वमेव, त्वमेव वन्धुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या द्रविणं त्वमेव, त्वमेव सर्व मम देवदेव ॥

ஓம் த்வமேவ மாதா ச பிதா த்வமேவ, த்வமேவ பந்துஸ்ச சகா த்வமேவ;
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ, த்வமேவ ஸர்வம் மம தேவதேவ.

10 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு இந்துவுக்கும் தன் சமயத்தைக் காப்பாற்றச் சில கடமைகள் உண்டு;

1. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் சுமார் 5 நிமிடங்களாவது இந்தப் 15 மந்திரங்களைச் சொல்ல வேண்டும்,
அவற்றின் பொருளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

2. தினமும் குறைந்தது ஒருமுறை பத்து நிமிடங்கள் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

3. மாதமொருமுறை அண்டை, அயலார், நண்பர், உறவினருடன் கூட்டு விருந்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது அத்தகைய விருந்தில் கலந்துகொள்ள வேண்டும்.

பிராணாயாமம் செய்வது மிக எளிது. தரையில் பத்மாசனமிட்டுக் கொண்டு அல்லது நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு முதுகெலும்பை விறைப்பாக வைத்துக்கொண்டு வலது மூக்கைக் கட்டை விரலால் அடைத்துக்கொண்டு மூச்சை நன்றாக இழுக்கவும். பிறகு சுட்டு விரலால் இடது மூக்கை அடைத்துக்கொண்டு வலது மூக்கு வழியே மூச்சை விடவேண்டும். பிறகு இடது மூக்கை அடைத்துக்கொண்டு வலது மூக்கு

வழியே மூச்சிழுத்து இடது மூக்கு வழியே வெளியே விடவேண்டும். இவ்வாறு மாற்றி மாற்றிச் செய்யவேண்டும். எப்போது வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். ஆனால் சாப்பிட்ட உடனே இதைச் செய்யக் கூடாது. தேவைப்பட்டால் நிபுணர் ஒருவரிடம் பிராணாயாமம் கற்றுக்கொள்ளலாம். இந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் சுகமான, வளமான, ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துவார்கள்.

சாதாரணக் கல்வி கற்றுவிட்டு அதன் மூலம் கடவுளின் விருப்பத்தை ஆராய முற்படுவது முட்டாள்தனம்.

மனிதர்களில் உயர்வு தாழ்வு வேற்றுமை காண்பது, தன் லாபத்துக்காகப் பிறருக்குத் தீங்கு செய்வது, சோம்பல், கோழைத்தனம் இவை இந்துவுக்குப் பாவங்களாகும்.

மேலே கொடுக்கப்பட்ட பதினைந்து மந்திரங்களும் பீஜ மந்திரங்கள். சுகமான இவ்வுலக வாழ்க்கைக்கும் மறுமையில் சுவர்க்கம் பெறவும் இவை போதுமானவை. எனினும் திருமணம், அன்னப்பிராசனம், வெவ்வேறு தேவதைகளின் பூசைகள் போன்ற விழாக்களில் அவற்றுக்குரிய மந்திரங்களையும் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும்.

சிறப்புப் பூசைகளிலும் விழாக்களிலும் எல்லோரும் ஒன்று கூடி இந்தப் பதினைந்து மந்திரங்களையும் உச்சரிக்க வேண்டும். நம் வாழ்க்கையில் பூசைக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் பூசிப்பவர்களுடைய செல்வச் செழிப்பைக் காட்டுவதற்காகவோ அல்லது புரோகிதர்களின் சொந்த நலனுக்காக பக்தர்களைக் கட்டாயப்படுத்தியோ ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவை தேவைக்கு அதிகமானவை. இவற்றைக் கடவுள் ஏற்றுக்கொள்வதில்லை.

## பஜனை

(பஜனை என்பது கடவுளின் தன்மைகளின் வர்ணனை. முக்கியமான சமய, சமூக விழாக்களில் பலர் ஒன்றுகூடிப் பஜனை செய்ய வேண்டும்.)

भजतामीशं जपतामीशं समवेतं सर्व जनेषु रे

नाशित सर्व प्रभेदजनो ईशमनसि खलु स वसति रे ॥

भजतामीशं जपतामीशं समवेतं सर्व जनेषु रे

य विश्वसिति परमेश्वरं भयहीनः खलु स भवति रे ॥

भजतामीशं जपतामीशं समवेतं सर्व जनेषु रे

यः करोति स्वधर्मरक्षामीश मनसि खलु स वसति रे ॥

भजतामीशं जपतामीशं समवेतं सर्व जनेषु रे

यः पूजयति परमेश्वरं-अमरलोकं खलु स गच्छति रे ॥

பஜதாமீசம் ஜபதாமீசம் சமவேதம் சர்வ ஜனேஷு ரே,

நாசித சர்வ ப்ரபேதஜனோ ஈசமனஸி கலு ஸ வஸதி ரே,

பஜதாமீசம் ஜபதாமீசம் சமவேதம் சர்வ ஜனேஷு ரே,

ய விஸ்வஸிதி பரமேஸ்வரம் பயஹீன: கலு ஸ பவதி ரே,

பஜதாமீசம் ஜபதாமீசம் சமவேதம் சர்வ ஜனேஷு ரே,

யஹ் கரோதி ஸ்வதர்ம ரக்ஷாமீச மனஸி கலு ஸ வஸதி ரே

பஜதாமீசம் ஜபதாமீசம் சமவேதம் சர்வ ஜனேஷு ரே,

யஹ் பூஜயதி பரமேஸ்வரம் அமரலோகம் கலு ஸ கச்சதி ரே.

# சுவர்க்கமும் நரகமும்

கடவுள் சாதனை செய்யாதவர்கள், அதாவது கடவுளைப் பூசிக்காதவர்கள் நரகம் செல்கிறார்கள். கடவுளின் விதிகளுக்கும் மனிதத் தன்மைக்கும் எதிராகச் செயல்படுபவர்கள் மனிதர்களின் துன்பத்துக்குக் காரணமாகிறார்கள். அவர்கள் நரகத்தில் கொதிக்கும் வெந்நீரில் தள்ளப்படுவார்கள்; தொழு நோயாளிகளுடன் இல்லறம் நடத்தும் நிலைக்குள்ளாவார்கள். அவர்களுக்கு முட்செடிகள் உணவாகக் கொடுக்கப்படும். அவர்கள் எப்போதும் தாகத்தாலும் பலவகை நோய்களாலும் பீடிக்கப்படுவர். அவர்களுடைய தோழர்களும் பாவிகளாகவே இருப்பர். அழுகல் நெடி வீசும் பிணங்களுக்கிடயே அவர்கள் எப்போதும் வசிக்க நேரும்.

மனிதப் பண்பாட்டின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுபவர்கள், உலகில் எல்லோருடைய நன்மைகளையும் விரும்புபவர்கள், மனிதத் தன்மை கொண்டவர்கள், கீதை, வேதங்கள் ஆகியவை விதித்துள்ள விதிகளின்படி வாழ்க்கை நடத்துபவர்கள் - இவர்கள் சுவர்க்கம் செல்கிறார்கள். அங்கே அவர்களுக்கு வசதியான இருப்பிடங்கள் கிடைக்கும். அவர்களது குடியிருப்புக்கு முன்னால் கடலும் பின்னால் பனி சூழ்ந்த மலைகளும் இருக்கும். மகிழ்ச்சி நிரம்பிய தோழர்கள் அவர்களைச் சூழ்ந்திருப்பர். அவர்கள் எப்போதும் கவுரவத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பார்கள். உண்மையான ஞானம் அவர்களுக்குக் கிட்டும். அவர்களுக்குச் சுவையான உணவு கிடைக்கும். அவர்கள் ஆரோக்கியமாக இருப்பார்கள். இன்பம் தரும் வாழ்க்கைத் துணைவியைப் பெற்று மகிழ்ச்சியாக இல்லறம் நடத்துவார்கள். நல்லதெல்லாம், விரும்புவதெல்லாம் சுவர்க்கத்தில் கிடைக்கும். சுவர்க்க வாசிகள் எப்போதும் கடவுளின் அண்மையை அனுபவிப்பார்கள், அவரது கருணையைப் பெறுவார்கள்.

# உருவ வழிபாடு

*"நாமெல்லோரும் ரஜாதி ராஜனான கடவுளின் அரியணைக்கு உரிமை பெற்றவர்கள்."*

ஓர் இந்துவின் நோக்கில் கடவுள் ஒருவரே ஆராதனைக்கு உரியவர். வேறு எந்தத் தேவதைய்யையும் கடவுளாகக் கருதத் தேவையில்லை. தென்னிந்தியாவில் கடவுள் ஈஸ்வரன், தேவதை, தேவுடு, இறைவன் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். அவர் எங்கும் பரவியிருப்பவர், எல்லையற்ற வலிமை வாய்ந்தவர்; எந்தக் காரியத்தையும் சாதிப்பதற்கு அவருக்கு வேறு எவருடைய உதவியும் தேவையில்லை.எவரிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றியிருக்கிறதோ அவரே கடவுள். அவரது கருணையால் இவ்வுலகம் உண்டாகியிருக்கிறது. அவரது இச்சைப்படி அது அழிகிறது.

ईश्वर: परमैकस्वरूप: ॥

स नित्य:सर्वव्यापी विभुरनादिरनन्तश्च स निराकारो निरूपो वर्णनातीतो निष्कामश्च ।

क्वचित् शब्दरूपेण स आत्मानं प्रकाशयति स विधाता

कारणानां कारणं तथा सर्वशक्तिमान् तदिच्छापूरणाय कस्यापि सहायस्य प्रयोजनं न वर्तते

यतो द्वितीय: कोऽपि नास्ति ॥

ஈஸ்வரஹ பரமைகஸ்வரூபஹ.

ஸ நித்யஹ ஸர்வவ்யாபீ விபுரனாதிரனந்தஸ்ச நிராகாரோ நிரூபே

வர்ணனாதீதோ நிஷ்காமஸ்ச;

க்வசித் சப்தரூபேண ஸ ஆத்மானம் ப்ரகாசயதி ஸ விதாதா

காரணானாம் காரணம் ததா ஸர்வ சக்திமான் ததிச்சா பூரணாய கஸ்யாபி

ஸஹாயஸ்ய ப்ரயோஜனம் ந வர்த்ததே

யதோ த்விதீயஹ கோஅபி நாஸ்தி.

கடவுள் மேலான ஒருவர், அவர் அழிவற்றவர், எங்கும் நிறைந்தவர், முதலும் முடிவுமற்றவர், உருவமற்றவர், வர்ணனைக்கப்பாற் பட்டவர், ஆசையற்றவர். சில இடங்களில் அவர் ஒலியுருவத்தில் வெளிப்படுகிறார். அவர் படைப்பவர், எல்லாக் காரணங்களுக்கும் காரணர், சர்வ வல்லமையுடையவர், அவரது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அவருக்கு எவருடைய உதவியும் தேவைப்படுவதில்லை.

கடவுள் பரம சத்தியம். அவரது இன்னொரு பெயர் 'விஷ்ணு'. இந்த 'விஷ்ணு'வையும் 'பிரும்ம'த்தையும் சநாதன தருமத்தின் ஆதி தேவதைகளான 'விஷ்ணு-பிரும்மா'க்களுடன் சேர்த்துக் குழம்பக் கூடாது.

பெயர்கள் ஒன்றாக இருப்பதால் குழப்பம் நேருகிறது.

இவ்விஷயத்தில் எச்சரிக்கை தேவை. 'விஷ்ணு' என்ற சொல்லின் வேர் 'விஸ்' (வியாப்தி). 'விஷ்ணு' என்றால் எங்கும் வியாபித்து இருக்கும் கடவுள்; அவருக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. அவருக்குப் பிறப்பு அளிக்க எவரும் தேவைப்படவில்லை.

இந்தப் பரம புருஷருக்கு மனிதன் தான் 'ஈஸ்வரன்' அல்லது 'கடவுள்' என்று பெயரிட்டிருக்கிறான். மற்ற மதங்களைச் சார்ந்தவர்கள் இவரையே வெவ்வேறு பெயர்களால் அழைக்கிறார்கள். இந்துக்கள் அவரை 'ஈஸ்வரன்', 'பிரும்மம்' என்றெல்லாம் அழைக்கிறார்கள்.

கடவுளின் அடையாளச் சின்னம் 'ஓம்'.

வேதம் கூறுகிறது -

इश्वरः तस्य दूतरूपेण पृथिव्यां प्रेरयति देवान्
तस्माच्च मङलं मनुष्यत्वं प्रापोति ॥

ஈஸ்வரஹ தஸ்ய தூதரூபேண ப்ருதிவ்யாம் ப்ரேரயதி தேவான்
தஸ்மாச்ச மங்களம் மனுஷ்யத்வம் ப்ராப்னோதி

கடவுள் தேவதைகளைத் தம் தூதர்களாக வெவ்வேறு இடங்களுக்கு அனுப்புகிறார். அதனால் மனித இனத்துக்கு மங்கலம் ஏற்படுகிறது. மனிதன் பயனுள்ள, அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்காகக் கடவுள் தம் ஒரு பாகத்தைத் தேவதைகளாக இவ்வுலகுக்கு அனுப்புகிறார் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். அவர்கள் இந்தத் தூதர்களைக் கடவுளின் பிரதிநிதிகளாகக் கருதி அவர்களைத் தேவதைகள் என்று அழைக்கிறார்கள். இவர்கள் மிகவும் மரியாதைக்குரிய இந்து வீரர்கள். இவர்கள் இந்த உலக வாழ்க்கையை முடித்துக் கொண்ட பின் மறுபடியும் சுவர்க்கத்துக்குப் போய்க் கடவுளுடன் ஐக்கியமாகி விடுகிறார்கள் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இந்தத் தேவதைகள் உலகத்தில் இல்லாத காலத்திலும் மனிதர்களுக்கு உதவுவார்கள், வழிகாட்டுவார்கள் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். அவர்கள் இந்தத் தேவதைகளின் உருவங்களைச் சமைத்து அவற்றைப் பூசிக்கிறார்கள், விழாக் கொண்டாடுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் கடவுளைப் பூசிக்கிறார்கள். இந்தச் சிலைகள் கடவுள் அல்ல என்று இந்துக்களுக்குத் தெரியும். அவர்களைப் பொருத்த வரையில் இந்தச் சிலைகள் கடவுளிடம் மனதைச் செலுத்த உதவும் கருவிகள் மட்டுமே; இவற்றுக்குச் செய்யப்படும் ஆராதனை கடவுள் பூசையே ஆகும் - ஒரு தேச பக்தன் தன் நாட்டின் கொடியை எங்கு கண்டாலும் அதற்கு மரியாதை செலுத்துவதுபோல.

நாட்டின் கொடி என்பது சில நிறங்கள் பூசப்பட்ட ஒரு துணித்துண்டு தான். அது நாடு அல்ல. எனினும் அதற்கு அவமானம் செய்யப்பட்டால் தேச பக்தன் வெகுண்டு எழுகிறான்., அதன் கவுரவத்தைக் காப்பாற்றத் தன் உயிரையும் தியாகம் செய்யத் துணிகிறான். நாட்டுக் கொடிக்கு மரியாதை செய்வதும் ஒரு வகை உருவ வழிபாடு தான். கற்சிலைக்கு முன் செய்யப்படும் பிரார்த்தனை அந்தச் சிலைக்குச் செய்யப்படுவதல்ல, கடவுளுக்குச் செய்யப்படுவதாகும். அதனால் தான் எல்லா மந்திரங்களும் 'ஓம்' என்ற சொல்லுடன் தொடங்குகின்றன. 'ஓம்' என்ற சொல்லுக்கு 'கடவுள் எல்லாவற்றையும் விட மகத்தானவர்' என்று பொருள்.

பூசை முடிந்த பிறகு இந்துக்கள் மண் சிலையைத் தண்ணீரில் எறிந்து விடுகிறார்கள். சிலைக்குத் தனியே எந்த முக்கியத்துவமும் இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. சிலையை ஒரு கருவியாக மனத்தில் வைத்துக் கொண்டு கடவுளிடம் மனதைச் செலுத்துவதே சிலையின் பயனாகும். மக்கள் ஒன்று கூடி மகிழ்ந்திருக்க உருவ வழிபாட்டு விழாக்கள் உதவுகின்றன.

இந்து சமயம் உலகமெங்கும் பரவியிருந்தபோது வெவ்வேறு பகுதிகளிலிருந்த வெவ்வேறு இனத்தவர்கள் பூசித்த பல தேவதைகளின் சிலைகளும் இந்து மதத்தோடு மூலப்போக்கில் கலந்து விட்டன. இதன் விளைவாகப் பலவகை உருவங்களின் வழிபாடு தொடங்கியது. இத்தகைய சிறு தேவதைகளின் வழிபாடு அந்தந்தப் பகுதிகளில் மட்டும் வழங்குகிறது.

வட இந்திய இந்துக்கள் கடவுள் சிலையைத் தேவதை என்றும் கடவுளை ஈஸ்வரன் என்றும் அழைக்கிறார்கள். பிரும்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியோர் ஆதிதேவதைகள். மகேஸ்வரனின் மகன் 'கார்த்திக்' என்ற பெயரில் பூசிக்கப்படுகிறார். தென்னிந்தியாவில் சிலை 'மூர்த்தி', 'விக்கிரகம்' எனப்படுகிறது. கடவுள் 'ஈஸ்வரன்', 'ஈஸ்வரரு', 'பகவான் வெங்கடேஸ்வரர்', 'பாலாஜி' என்றும், கார்த்திக் 'முருகன்', 'சண்முகன்', குமரன்' என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

ஆனால் எல்லா இந்துக்களும் ஒன்றே. அவர்கள் எல்லோரும் நிகரற்ற, சர்வவியாபியான, சர்வ வல்லமையுள்ள ஒரே கடவுளை, அதாவது பரப்பிரும்மத்தை, சகல காரணங்களுக்கும் காரணராக நம்புகிறார்கள்.

ஆயுதங்களைக் கையாள்வதிலும், அறிவிலும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட தேவதைகளின் சக்தியை வலியுறுத்துவதற்காகக் கதை சொல்பவர்கள் அவர்கள் பற்றி பல மிகையான வர்ணனைகளைச் செய்துள்ளனர். சிற்பிகளும், ஓவியர்களும் அந்த மிகைக் கற்பனைகளைத் தங்கள் படைப்புகளில் சித்திரித்துத் தேவதைகளுக்கு இயற்கைக்கு மாறான உருவங்களைக் கொடுத்துள்ளனர். ஆனால் தேவதைகளும்

மனிதர்களாகவே இருந்தார்கள், இயற்கையின் விதிகளுக்கு மாறுபடவில்லை. அவர்களுக்கும் ஒரு தலை, இரு கைகள் தாம் இருந்தன.

இந்த மந்திரத்தில் கடவுளின் உருவம் இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது;

ॐ त्रिमस्तकानां ज्ञानम् एकशिरे अवस्थितं ।
चतुर्बाहुतुल्यबलं द्विहस्ते रोपितम् ॥
भक्तेच्छापूरणाथ पुनः पुनः आविर्भूतम् ।
प्रणमामि तं हि ईश्वरप्रेरितदूतम् ॥

ஓம் த்ரிமஸ்தகானாம் ஞானம் ஏகசிரே அவஸ்திதம்
சதுர் பாஹு துல்ய பலம் த்விஹஸ்தே ரோபிதம்.
பக்தேச்சா பூரணார்த்தம் புனஹ புனஹ ஆவிர்பூதம்
ப்ரணமாமி தம் ஹி ஈஸ்வர ப்ரேரித தூதம்.

மூன்று தலைகளின் அறிவு ஒரு தலையில் உள்ளது. நான்கு கைகளின் பலம் இரு கைகளில் உள்ளது. அவர் (கடவுளின் தூதர் - தேவதை) பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அடிக்கடி அவதரிக்கிறார். அப்படிப்பட்ட, கடவுளால் அனுப்பப்பட்ட தூதரை வணங்குகிறேன்.

கடந்த 20,000 ஆண்டுகளின் இந்துக்கள் பல தேவதூதர்களைப் பெற்றிருக்கிறார்கள், அவர்களை ஆதி தேவதைகளான பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் அவதாரங்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, 5,000 ஆண்டுகளுக்கு முன் பிறந்த இராமனும், 3,500 ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்த கிருஷ்ணனும் விஷ்ணுவின் அவதாரங்களாகப் பூசிக்கப்படுகிறார்கள். இந்துக்கள் கடவுளை நேசிப்பவர்கள். வேதம், கீதை இவற்றைப் பயிலாதவர்கள் சிலைகளை வழிபடுகிறார்கள். வேதம், கீதை இவற்றில் தேர்ந்தவர்கள் கடவுள் ஒருவரே என்று அறிவார்கள். மனிதனால் அளிக்க முடிந்த எல்லாவற்றையும் பெறக் கடவுளுக்கு உரிமை உண்டு. சிலை என்பது கடவுளின் அடையாளம் மட்டுமே. ஒரே கடவுளை ஆராதிப்பதே பலனளிக்கும். கீதையின் ஏழாம் அத்தியாயம் 20ம் சுலோகத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

कामैस्तैस्तैर्हतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः ।
तं तं नियममास्थाय प्रकृत्या नियताः स्वया ॥

காமைஸ்தைஸ்தைர்ஹதக்ஞானாஹா ப்ரபத்யந்தேஅன்யதேவதாஹா
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதாஹா ஸ்வயா.

தங்கள் தங்கள் தன்மைகளால் கட்டுப்படுத்தப்பட்டு, தங்கள் ச்சைகளுக்கு வசப்பட்டு விவேகமிழந்தவர்கள் வேறு வேறு தேவதைகளிடம் அடைக்கலம் தேடுகிறார்கள்.

# சாதி வேற்றுமை முறை

மத்திய ஆசியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்கள் இந்துக்களைச் சமூக ரீதியாகச் சுரண்டவும் அவர்களிடையே ஒழுங்கீனத்தைப் பரப்பவும் சாதி வேற்றுமை முறைகளைப் பரப்பினார்கள். இதன் விளைவாக இந்துக்களிடையே பிரிவுகள் ஏற்பட்டு அவர்கள் பலவீனர்களாயினர். இந்த ஆக்கிரமிப்பாளர்களின் வருகைக்கு முன்னால் சமூகம் பொருளாதார வசதிக்காகத் தொழில் ரீதியாக நான்கு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது.

கல்வி கற்று அதைப் பிறருக்கு போதித்து வாழ்க்கை நடத்த விரும்பியவர்கள் பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டனர். போர்க் கலையில் தேர்ந்தவர் க்ஷத்திரியர் ஆயினர். தங்கள் அறிவுத் திறனாலும், உழைப்பாலும் செல்வத்தை உண்டாக்கி அதை வியாபாரம் செய்தவர்கள் வைசியர். கைவேலை செய்பவர்கள், உழைப்பாளிகள் சூத்திரர் எனப்பட்டனர். ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் தங்கள் அறிவு, அனுபவத்துக்கேற்பத் தொழில் செய்து வாழ்க்கை நடத்தினர். ருக் வேத காலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு வெவ்வேறு வகைத் தொழில்களைச் செய்ததுண்டு.

ஏறக்குறைய கி.மு 4500ம் ஆண்டிலிருந்து கி.மு 3500ம் ஆண்டு வரையுள்ள கால கட்டத்தில் வெளி நாட்டிலிருந்து இரத்த வெறி கொண்ட நாடோடி இனத்துக் குதிரை வீரர்கள் இந்தியாவின் செல்வத்துக்கு ஆசைப்பட்டுக் கூட்டம் கூட்டமாக வந்து மீண்டும் மீண்டும் நம் நாட்டைத் தாக்கினர். நாளடைவில் அவர்கள் நம் நாட்டைக் கைப்பற்றி, தொழில் முறையில் அமைந்திருந்த நான்கு பிரிவுகளை நான்கு சாதிகளாகப் பிரித்தனர். இதனால் இந்துக்கள் பிளவு பட்டு வலிமை குறைந்தனர். பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் தனித்தனி சாதிகளாயினர். துரதிருஷ்டவசமாகக் கல்வி கற்காத, எந்தத் தொழிலையும் நன்கு பயிலாத மக்களைப் பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் எந்த ஆதரவுமின்றித் தனியே விடப்பட்டனர். அந்த அப்பாவி மனிதர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அரசிய, சமூகச் சுரண்டலுக்கு ஆட்பட்டிருந்ததால் அவர்கள் இப்போது 'தலித்' என அழைக்கப்படுகிறார்கள்.

தொழில் முறைப் பிரிவு சாதிப் பிரிவாகி விட்டது. தொழில் முறைப் பிரிவு ஒரு சமூக வழக்கமாகியிருந்தது. இதன் மூலம் ஒருவன் தன் தந்தையின் தொழில் திறனைக் கற்றுக்கொள்கிறான். அந்தக் காலத்தில் தொழில் கற்றுக்கொள்ளும் வகையில் பள்ளியோ, காகிதமோ, புத்தகமோ இருக்கவில்லை. குடும்பத்துக்கு வெளியே ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள வசதி எதுவும் இல்லை. ஆகவே தொழிலறிவைக்

குடும்பத்திலிருந்தே பெற வேண்டிய நிலை இருந்தது. ஒரு தொழில் பிரிவைச் சேர்ந்தவர்கள் வேறு பிரிவிற்கு மாறவும் வாய்ப்பிருந்தது.

வன்முறையை மேற்கொண்ட ஆக்கிரமிப்பாளர்கள் அமைதியை விரும்பும் நாடான பாரதத்தை அடிமைப்படுத்தினர். ஆனால் இந்துக்களின் ஒழுக்கக் கட்டுப்பாடும் திட நம்பிக்கையும் குலையவில்லை. ஆட்சியாளர்களால் இந்துக்களின் மன உறுதியை நசுக்க இயலவில்லை. அவர்கள் அப்போது சாதி முறை என்ற கொடிய வழக்கத்தை நுழைத்து,பொருளாதார நோக்கில் ஏற்பட்டிருந்த பிரிவுகளை மதம் சார்ந்த பிரிவுகளாக ஆக்கிவிட்டார்கள். அவர்களுடைய ஏற்பாட்டின் விளைவாக வெவ்வேறு பிரிவினரிடையே சுவர் எழும்பி, சாதி வேற்றுமைகள் மதம் சார்ந்த நிரந்தரப் பிரிவுகளாக மாறிவிட்டன. கல்வியறிவற்ற அப்பாவி மனிதர்கள் அரசியல் ஏற்பாட்டில் நேர்ந்த இந்த வேற்றுமைகளிடையே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்ததன் விளைவாகத் தவறான நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டுவிட்டனர்.

உலகத்தின் எந்தப் பகுதியிலும் ஒரு சமூக அநீதி நீண்ட காலம் தொடர்ந்து இருக்குமானால் அதற்குச் சட்டத்தின் அந்தஸ்து கிடைத்து விடுகிறது. தொழில் முறை அல்லது சாதி முறைப் பிரிவுகளிடையே கடக்கவியலாத சுவர்களை எழுப்பியது இந்து சமூகம் இழைத்த மிகப் பெரும் கொடுமை ஆகும்.

கெட்ட எண்ணங்கொண்ட அரசியல் வாதிகள் காலம் காலமாக இந்தச் சமூக அநீதியின் துணையால் கொடுங்கோலாட்சி நடத்தி சமூகத்தைச் சுரண்டி வருகிறார்கள். இந்தச் சாதி வேற்றுமை ஏற்பாட்டால் பயன் பெற்றவர்கள் இதை ஆதரிக்கிறார்கள்.

சநாதன தருமத்தின் தத்துவங்கள் இந்துக்களுக்கு நெடுங்காலமாகவே வலுவான ஒழுக்கத்திறனை அளித்து வந்துள்ளன. இந்துத் தத்துவம் மிகவும் சிறந்ததாகும். இது கடவுளால் நிறுவப்பட்டது. அதனால் தான் ஆக்கிரமிப்பாளர்களால் இந்துக்களைப் பெருமளவில் மதம் மாற்ற இயலவில்லை.

ஆக்கிரமிப்பாளர்கள் குதிரை வீரர்கள், வேகமாக இயங்கக்கூடியவர்கள், கொலை செய்யத் துணிந்தவர்கள். அவர்கள் பெற்ற வெற்றிகளெல்லாம் பயமுறுத்திப் பெறப்பட்டனவை, மரியாதை மூலம் அடையப்பட்டவை அல்ல.

புதிய ஆட்சியாளர்கள் கபடர்கள், பொய்யர்களின் உதவியால் இந்துக்களைப் பிரித்துப் பலவீனப்படுத்தி வைத்தார்கள். இந்த ஐந்தாம் படையினர் தங்கள் சுய நலத்துக்காகவும், தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளவும்,ஆட்சியாளர்களைத் திருப்தி செய்யவும் மதப் பற்றுள்ள இந்துக்களாகவும், மனித நேயம் மிக்கவர்களாகவும் வேடம் பூண்டு இந்து சமூகத்தை நாசம் செய்தார்கள், பல வகைகளில் மனிதர்களை வழி தவறச் செய்தார்கள். வெளிநாட்டவர்களோடு சேர்ந்துகொண்டு

இந்துக்களைக் கொள்ளையடிக்க வழி வகுத்தார்கள்.
எண்ணற்ற நம் நாட்டு மக்கள் கல்வியறிவற்றவர்களாகவும், தவறான கருத்துக்களால் பீடிக்கப்பட்டவர்களாகவும், எல்லையற்ற வறுமையில் உழல்பவர்களாகவும் இருந்தார்கள். நாளடைவில் புதிய ஆட்சியாளர்களின் ஆதிக்கம் வலுப்பட்டது. நாட்டில் எஞ்சியிருந்த கொஞ்ச நஞ்சச் செல்வத்தையும் கைப்பற்றப் பல குழுக்கள் போட்டி போட்டன. ஒவ்வொரு குழுவுக்குள்ளேயும் 'நம் ஆள்' ,'வேற்று ஆள்' என்ற உணர்ச்சி தோன்றியது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தப் பொருளாதார வேற்றுமைகள் சாதி வேற்றுமை முறையை ஒரு சமூக நோயாக்கிவிட்டன. இந்தச் சுரண்டலை நிரந்தரமாக்கும் நோக்கத்துடன் கபட வேடதாரிகள் இந்த வேற்றுமைக்குச் சமயச் சாயம் பூசிவிட்டனர். வருண வேற்றுமை முறை தொழில் அடிப்படையில் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதே என்று கீதை தெளிவாகக் கூறுகிறது. இதற்குக் கடவுளுடனோ சமயத்துடனோ ஒரு தொடர்புமிலலை.

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परंतप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥

ப்ராஹ்மண க்ஷத்ரிய விசாம் சூத்ராணாம் ச பரந்தப;
கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவ ப்ரபவைர் குணைஹி.

பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் அவரவரது தொழிலின் தன்மைக்கேற்பப் பிரிக்கப்படுவார்கள்.

चातुर्वण्य मया सृष्टं गुणकर्मविभागशः ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥

சாதுர் வர்ணயம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகசஹ;
தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்தியகர்த்தாரமவ்யயம்.

குணங்கள், தொழில்கள் இவற்றின் பிரிவுகளுக்கேற்ப நான்கு வருணங்கள் என்னால் படைக்கப்பட்டவை. அகர்த்தாவும் அழிவற்றவனுமான நானே அவற்றைப் படைத்தவன் என்று அறி.
மகா பாரதத்தின் வன பருவத்தில் யுதிஷ்டிரரின் நான்கு தம்பிகளும் ஒரு யக்ஷனின் நீர்நிலையில் அவனது அனுமதியின்றித் தண்ணீர் குடிக்கப் போய் மயக்கமடைகின்றனர். யுதிஷ்டிரர் அவர்களைத் தேடிக்கொண்டு அங்கு வந்து அவர்களை உயிர்ப்பிக்கும்படி யக்ஷனை

வேண்டிக்கொள்கிறார். தான் கேட்கும் பன்னிரண்டு கேள்விகளுக்கு யுதிஷ்டிரர் சரியாகப் பதில் சொன்னால் அவர்களுடைய தம்பிகளை உயிர்ப்பிப்பதாக யக்ஷன் சொல்கிறான். யுதிஷ்டிரர் இணங்குகிறார்.

யக்ஷனின் ஒன்பதாவது கேள்வியாவது:

राजन् कुलेन वृत्तेन स्वाध्यायेन श्रुतेन वा ।
ब्राह्मण्यं केन भवति प्रब्रह्येतत् सुनिश्चितम् ॥
(वनपर्व ३१३ अध्याय, श्लोक १०७)

ராஜன் குலேன வ்ருத்தேன ஸ்வாத்யாயேன ஸ்ருதேன வா;
ப்ராஹ்மண்யம் கேன பவதி ப்ரப்ப்ரூஹ்யேதத் ஸுநிஸ்சிதம்.
(வன பருவம், 313ம் அத்தியாயம், 207ம் சுலோகம்)

"பிறப்பாலேயே ஒருவன் பிராமணன் ஆவானா ? அல்லது நடத்தையாலோ, கல்வி கேள்விகளால் ஞானத்தைச் சம்பாதிப்பதாலோ பிராமணன் ஆக முடியுமா ?"

யுதிஷ்டிரர் பதிலளிக்கிறார் -

शृणु यक्ष कुलं तात न स्वाध्यायो न च श्रुतम् ।
कारणं हि द्विजत्वे च वृत्तमेव न संशयः ॥
(वनपर्व ३१३ अध्याय, श्लोक १०८)

ஸ்ருணு யக்ஷ குலம் தாத ந ஸ்வாத்யாயோ ந ச ஸ்ருதம்;
காரணம் ஹி த்விஜத்வே ச வ்ருத்தமேவ ந ஸம்சயஹ.
(வன பருவம், 313ம் அத்தியாயம், 208ம் சுலோகம்)

"ஒருவன் தன் நடத்தை மூலமாகவே பிராமணனாகிறான்; பிறப்பாலோ, கல்வியாலோ அல்ல."

மனிதன் தன் விருப்பம், உழைப்பு, தொழில் திறமை இவற்றின் மூலம் வருண வேற்றுமைப் பிரிவைக் கடந்து தனக்குப் பிடித்தமான வருணத்தில் சேரலாம் என்பதற்கு இது ஒரு சான்று.

பொருளாதாரம் மற்றும் அரசியல் சார்ந்த கொடுமைகளால் ஏற்படுத்தப்பட்ட சாதி வேற்றுமைகள் கடவுளால் நிறுவப்பட்ட தூய இந்து மதத்தைக் கூடக் குப்பையாக்கிவிட்டன. இந்துக்கள் பல குழுக்களாகப் பிரிந்துவிட்டனர். சநாதன தருமம் அதாவது இந்து சமயம், வருண வேற்றுமையை

ஏற்படுத்தவில்லை.

ஆனால் இந்துக்கள் தங்கள் அறியாமையினால் பல நூற்றாண்டுகளாக இந்த வருண வேற்றுமைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். இதனால் கோபங்கொண்ட கடவுள் அவர்களைப் பரம ஏழைகளாகவும் பிறருக்கு அடிமைகளாகவும் இருக்கும்படி சபித்திருக்கிறார்.

இந்த வருண வேற்றுமைகளை ஒழித்து இந்துக்களை ஒன்றுபடுத்த முற்படுபவர்களும் அவர்களுடைய பின் தலைமுறைகளும் முடிவற்ற சுவர்க்க சுகத்தை அனுபவிப்பார்கள் என்று கடவுள் விதித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வருண வேற்றுமை ஏற்பாடு பொருளாதார மற்றும் அரசியல் சுரண்டலுக்கான ஒரு ஆயுதமே,சமய விதியல்ல என்பதை நிரூபிக்கப் பல சான்றுகள் உண்டு. உதாரணமாக, வங்காளத்தை எடுத்துக்கொள்வோம். கி.மு 1200ம் ஆண்டில் வங்காளத்தில் வல்லால சென் என்ற பெரும் வலிமை மிக்க அரசன் இருந்தான். அவன் காலத்தில் பிராமணர்களிலேயே உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட 'நாத் பிராமணர்' (இவர்களை ருத்திரப் பிராமணர் என்றும் சொல்வதுண்டு.) என்ற பிரிவினர் அரசப் புரோகிதராகச் செயல்பட்டு வந்தனர்.

வல்லால சென்னுடைய அரசப் புரோகிதராக இருந்தவருடைய பெயர் பீதாம்பர நாத். அரசனின் தந்தை இறந்த பிறகு ஈமச் சடங்குகளில் இறந்தவருக்காகக் கொடுக்கப்படும் பிண்டத்தைத் தன் புரோகிதர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அரசனின் விருப்பம். ஆனால் பீதாம்பர நாத் பிண்டத்தை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார். இதனால் கோபங்கொண்ட அரசன் அவருடைய பூணூலைப் பிடுங்கிக்கொண்டு "இனி நாத் பிராமணர்கள் (ருத்திரப் பிராமணர்கள்) சூத்திரர்களாகக் கருதப்படுவார்கள்" என்று அறிவித்தான்.

இதன் விளைவாக இந்தப் பிரிவைச் சேர்ந்த பிராமணர்கள் வங்காளத்தில் சூத்திரர்களாக நடத்தப்பட்டனர்.

ஆனால் வங்காளத்துக்கு வெளியே அவர்கள் முன்போல் பிராமணர்களாக்வே மதிக்கப்பட்டனர்.

வருண வேற்றுமை ஏற்பாடு அரசியல் தந்திரசாலிகளின் சுரண்டல், அது சமய விதிகளால் ஏற்பட்டதல்ல என்பது இந்த உதாரணத்திலிருந்து தெரிகிறது. நாத் (ருத்திர) பிராமணர்கள் ருத்திரன் என்றழைக்கப்படும் சிவனது வழித்தோன்றல்கள் என்று பழைய புராணங்கள் சொல்கின்றன. இப்போது உலகத்தில் எஞ்சியுள்ள ஒரே இந்து நாடான நேபாளத்தில் அரசப் புரோகிதர் ஒரு நாத் பிராமணரே.

கொல்கத்தா காளி கோயிலின் முதல் புரோகிதராகப் பணியாற்றியவர் ஸ்ரீ சௌரங்கீ நாத். கொல்கத்தாவின் ஒரு முக்கிய வீதி 'சௌரங்கீ' என்று அவர் பெயரில் அழைக்கப்படுகிறது. வேறு புகழ் பெற்ற நாத் பிராமணர்களான

சோம் நாத், கோரக் நாத் ஆகியோரின் நினைவாகக் குஜராத்திலுள்ள சோம்நாத் கோயிலும், உத்தரப் பிரதேசத்திலுள்ள கோரக்நாத் கோயிலும் கட்டப்பட்டுள்ளன.

பாரத நாட்டில் குப்தர்களின் ஆட்சிக் காலத்தில் பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் பல இடங்களில் தாங்களாகவே வேறு தொழில்கள் செய்து வாழ்க்கை நடத்தியதாகச் சரித்திரம் சொல்லுகிறது. மயூர சர்மா என்ற பிராமணர் போர்த் தொழிலை மேற்கொண்டு கதம்ப ராஜ்ஜியத்தை நிறுவினார். மாத்ரு விஷ்ணு என்ற இன்னொரு பிராமணரும் க்ஷத்திரியத் தொழிலில் ஈடுபட்டு குப்த சாம்ராஜ்ஜியத்துக்கு அடங்கிய ஒரு நிலப்பகுதிக்குத் தலைவரானார். சாதியில் சூத்திரராக இருந்த பிரதோஷ் பர்மன் என்பவரும் க்ஷத்திரியத் தொழிலை மேற்கொண்டு ஒரு நிலப்பகுதியை ஆண்டார். குப்தர்களின் காலத்தில் பல பிராமணர்கள் காடுகளில் வேட்டையாடி வாழ்க்கை நடத்தினர்; காரணம் அப்போது வேட்டை மூலம் நிறைய வருமானம் கிடைத்தது. சூத்திர சாதியில் பிறந்தவர்கள் மாண்டசோரிலுள்ள புகழ் பெற்ற சூரியன் கோயிலை நிறுவினர்.

இந்து சமய ஏற்பாட்டில் வருண வேற்றுமை தொழில் சார்ந்த ஏற்பாடு தான் என்பது இந்த உதாரணத்திலிருந்து தெரிகிறது.

வேத காலத்தில் சூத்திரனையோ அல்லது வேறு எவரையுமோ தீண்டத்தகாதவராக (தலித்) கருதும் வழக்கம் இல்லை. ஒருவருடைய தொழிலும் நடத்தையும் சமூகத்துக்குத் தீங்கு செய்வதாக இருந்தால் மட்டுமே அவர் வெறுக்கப்பட்டார். எனினும் அவர் தம் தொழிலை மாற்றிக்கொண்டு நடத்தையையும் திருத்திக்கொண்டு சமூகத்தின் மரியாதையை மீண்டும் பெறமுடிந்தது.

பண்டைய் காலத்தில் மாணவப் பருவம் நீண்ட காலம் நீடித்தது. மாணவன் பல ஆண்டுகள் குருவின் ஆசிரமத்தில் வசித்துக்கொண்டு அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும். கடுமையான நியமங்களைப் பின்பற்றவேண்டும். எழுதப்பட்ட சுவடிகள் அந்தக் காலத்தில் போதிய அளவு கிடைக்காததால் குரு பெரும்பாலும் வாய் மூலமே மானவனுக்குக் கல்வி போதித்தார்.

மறுபக்கத்தில், பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரக் குடும்பங்களில் அவரவரது தொழிலுக்குரிய சூழல் நிலவியதால் குடும்பத் தொழிலில் தேர்ச்சி எளிதாகக் கிட்டியது. பெற்றோர் தங்கள் சந்ததியருக்குத் தொழிலை எளிதில் பயில்விக்க முடிந்தது. நாளடைவில் ஒவ்வொரு குடும்பமும் அந்தந்தத் தொழில்களையே நிரந்தரமாக மேற்கொள்ளும் வழக்கம் நிலைத்து விட்டது. ஆனால் தொடக்கத்தில் வருணப் பிரிவு ஏற்பாட்டில் தொழிலை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது. இவ்விஷயத்தில் இந்து சமூகம் எந்த வித நிர்ப்பந்தமும் செய்யவில்லை. ஒவ்வொருவருக்கும் தான்

மேற்கொள்ளும் தொழிலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்தது. (உதாரணமாக சத்திய காமன் பிறப்பால் சூத்திரன். ஆனால் அவன் வேதம் பயின்று பிராமணனாகிப் பிறரது மதிப்பிற்க்குரியவனானான்.)வேத காலத்தில் யார் வேண்டுமானாலும் புரோகிதர் ஆகலாம். அந்தத் தொழில் பிராமணருக்காக ஒதுக்கி வைக்கப் படவில்லை.

पवित्रात्मा संयतेन्द्रियः पेशलां मधु जीऔवा च
तं गुरुं श्रद्धया श्रृणु उपहार च प्रयच्छतु ॥

பவித்ராத்மா ஸம்யதேந்த்ரியஹ பேசலாம் மது ஜீவௌவா ச
தம் குரும் ஸ்ரத்தயா ஸ்ருணு உபஹார ச ப்ரயச்சது.

புனித உள்ளம் படைத்தவர், புலன்களை அடக்கியவர், இனிய குரலில் சுலோகங்கள், மந்திரங்கள் சொல்லக்கூடியவர், இப்படிப்பட்டவரை குருவாக ஏற்றுக்கொண்டு அவர் சொல்வதைக் கேள்; அவருக்கு நிறைய தட்சிணை கொடு.

ஒரே வருணத்துக்குள் திருமணத் தொடர்பு வைத்துக்கொள்வது வசதியாகக் கருதப்பட்டது. ஏனென்றால், ஒரே தொழில் சூழலிலிருந்து வருபவர்கள் திருமணத்துக்குப் பின் புகுந்த வீட்டின் சூழலோடு எளிதில் இணைந்து விடுவார்கள். அவர்களுக்கு ஒரு புதிய தொழிலைக் கற்றுக்கொள்ளும் அவசியம் நேரிடாது. மேலும் இத்தகைய திருமண ஏற்பாட்டில் திருமணத்துக்குப் பிறகு மணமகனுக்கும், மணமகளுக்கும் தங்களுக்குப் பழக்கமற்ற, எதிர்பாராத, தங்கள் முந்தைய பழக்கங்களுக்கு முரண்பட்ட, விரும்பத்தகாத சமூக நிலைமைகளைச் சந்திக்கும் வாய்ப்பு குறைவாக இருக்கும்.

எனினும் குடும்பச் சூழலில் பெரும் வேற்றுமைகள் உள்ள ஆண் பெண்கள் திருமணம் செய்துகொள்வது பழங்காலத்தில் நிகழ்ந்ததுண்டு. மகாபாரதத்தில் அரசன் சந்தனு ஒரு மீனவப் பெண்ணான சத்தியவதியை மணந்து கொண்டதைச் சமூகம் எதிர்க்கவில்லை.

வருண வேற்றுமை முறை ஒரு பொருளாதார ஏற்பாடுதான். பொதுவாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் தொழில் வசதிக்காக அதே தொழிலைச் செய்தனர். அவ்வாறு ஒரே தொழிலைச் சார்ந்தவர்களிடையே திருமணத் தொடர்புகள் நிகழ்ந்தன.

சாம வேதத்தின் ஒரு சுலோகம் இங்கு கவனிக்கத்தக்கது -

यो ददाति बुभुक्षितेभ्यः पीडितानां सहायकः
दुःखार्तानां समाश्लिष्यति तमेव ईशः प्रसीदति ॥

யோ ததாதி புபுக்ஷிதேப்யஹ பீடிதானாம் ஸஹாயகஹ;
துஹ்கார்த்தானாம் ஸமாஸ்லிஷ்யதி தமேவ ஈஸ்வரஹ ப்ரஸீததி.

பசித்தவர்களுக்கு உணவளிப்பவன், துன்புற்றவர்களுக்கு உதவுபவன், துக்கமடைந்தவர்களுக்கு ஆறுதல் அளிப்பவன் - இத்தகையோருக்குக் கடவுள் அருள் செய்கிறார்.

ஆயிர ஆண்டுக்கால அடிமைத்தனத்துக்குப் பிறகு நமது நாடு 1947ம் ஆண்டில் விடுதலை பெற்று, சமூக வேற்றுமைகளை, அதாவது சாதி வேற்றுமைகளை வேரோடு அழிக்கும் உரிமையைப் பெற்றது.

நீண்ட காலம் சாதிச் சுரண்டலுக்கு ஆட்பட்டிருந்த மக்களுக்கு அரசு வேலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. நாட்டுச் சட்டப்படி சாதி காரணமாக வேற்றுமை பாராட்டுதல் தண்டனைக்குரியது . தற்காலத்தில் கல்வியறிவு பெற்ற இந்தியன் சாதி வேற்றுமை முறையை வெறுக்கிறான், அதைப் பற்றிய பேச்சு எழுந்தால் வெட்கப்படுகிறான்.

# மனு ஸ்மிருதி

ஏறக்குறைய கி.மு 3400ம் ஆண்டில் பாரதத்தின் வடமேற்கு எல்லைக்கப்பாலிருந்து ஒரு கூட்டம் நம் நாட்டின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக்கொண்டது. இந்த ஆக்கிரமிப்பாளர்கள் நம் நாட்டினரின் வெளி வாழ்க்கையை மட்டுமன்றி அவர்களது பண்பாட்டையும் தாக்க விரும்பினார்கள். வேதங்களையும் தங்கள் ஆதிக்கத்துக்கு உள்ளாக்க முற்பட்டார்கள். வேதங்கள் ஆன்மீகத் துறையிலும், மக்களின் பரஸ்பர உறவுகளிலும், சமூக நடவடிக்கைகளிலும் மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்து வந்தன. அவை 'ஒரே கடவுள்' தத்துவத்தைப் போதித்தன. இந்த 'ஒரே கடவுள்' தத்துவத்தோடு பாரசீகர்களின் சூரிய மற்றும் இந்திர வழிபாடும், பலியிடும் வழக்கமும் ஆக்கிரமிப்பாளர்களால் பலவந்தமாக இணைக்கப்பட்டன. புல முனிவர்கள் தென்னிந்தியாவிற்கு ஓடிப் போயினர். பலர் இமயமலைக் குகைகளில் அடைக்கலம் பெற்றனர். பாரசீகம், ஆசியா மைனர் ஆகிய இடங்களிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் பாரத சமூகத்தைப் பிளவு படுத்தி, பலவீனமாக்கி, அடிமைப்படுத்தி அவர்களைத் தங்கள் ஆட்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைந்தனர்.

பிறகு ஏறக்குறைய 3250ம் ஆண்டில் மனு (இவர் ஜெர்மன் இனத்தைச் சேர்ந்தவர் என்று பலர் உறுதியாக நம்புகின்றனர்) சமூகத் தொழில் பாகுபாட்டை ஓர் உறுதியான கட்டுமானத்துக்குள் கொணர்ந்து ஒரு நூல் எழுதினார். இந்த நூலின் பெயர் 'மனு ஸ்மிருதி'. மனு அறிவுத் திறன் மிக்கவர். கணிதத்திலும் சட்ட அறிவியலிலும் வல்லவர். உண்மையில் வேதமே சநாதன தருமம் (இந்து சமயம்). வெளிநாட்டு ஆட்சியாளர்களுக்கு உதவி செய்வதே மனுவின் நோக்கமாக இருந்தது. மனுவால் தோற்றுவிக்கப்பட்ட சமூகப் பிரிவினை தங்களை எவ்வளவு வழி தவறச் செய்து விட்டது என்பதை நம்மக்கள் உணர வேண்டும். எனினும் கணிதத் துறையிலும் அறிவியலிலும் மனுவின் கொடை மதிப்புக்குரியது.

மனு ஒரு சிறந்த சட்ட நூல் எழுதியுள்ளார். அது தான் மனுஸ்மிருதி. 'மனு' என்றால் மனிதன் என்று பொருள். ஒரு கால் 'மனு' என்ற சொல்லில் ஒரு மிகப் பண்டைய இந்தோ-ஐரோப்பிய மரபின் ப்ரதிபலிப்பு இருக்கலாம். அத்தகைய தொடர்பு இல்லாமலும் அந்தச் சொல் தோன்றியிருக்கலாம் - உதாரணம்: 'ஆதாம்' என்ற ஹீப்ரு சொல்லுக்கும் 'மனிதன்' என்று தான் பொருள்.

வேத காலத்துக்குப் பிற்பட்ட ஒரு முக்கிய நூலான 'சதபத பிராமண'த்தில் ஒரு கதை உள்ளது. மனு ஒரு சமயம் ஒரு மீனுக்கு ஏதோ உதவி செய்தாராம்.

ஒரு பெரிய வெள்ளம் வந்து மனித இனத்தின் பெரும் பகுதியை அழித்து விடப்போகிறது என்று அந்த மீன் மனுவிற்கு எச்சரிக்கை செய்ததாம். மனு அந்த மீனின் ஆலோசனைப்படி ஒரு படகைக் கட்டி அதில் ஏறிக்கொண்டாராம். வெள்ளம் ஏற்பட்டபோது படகை மீனின் நரம்பில் கட்டிவிட்டாராம். மீன் அவரை ஒரு பாதுகாப்பான மலையுச்சியில் கொண்டு போய்ச் சேர்த்ததாம். விஷ்ணுவின் ஒரு அவதாரம் மீன் என்று புராணம் சொல்கிறது. பிற்காலத்தில் ஏற்பட்ட புராணங்களிலும் மனுஸ்மிருதியிலும் ப்ரபஞ்சத்தின் தோற்றம் பற்றிப் பல கற்பனைகள் செய்யப்பட்டன. பதினான்கு மனுக்கள் இருந்ததாகவும், 4,320,000,000 ஆண்டுகளடங்கிய ஒரு கல்பத்தில் பதினான்கு யுகங்கள் உள்ளதாகவும், ஒவ்வொரு யுகமும் ஒவ்வொரு மனுவுக்கு உரியதென்றும் சொல்லப்படுகிறது. பதினான்கு மனுக்களுக்குப் பிறகு பிரபஞ்சம் அழிந்து விடும். அதன் பிறகு புதிய படைப்பு. இவ்வாறு படைப்பும் அழிவும் முடிவின்றித் தொடரும். எனினும் பிரம்மாண்டம் என்பது எப்போதும் இருக்கும்.

மனுஸ்மிருதி சமூக விதிகள் அடங்கிய ஒரு நூல். அரசன் தூய்மையான ஆட்சி நடத்த வேண்டும் என்று இந்த நூலில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதில் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான விதிகளும், மனித வாழ்க்கையின் நான்கு பருவங்களான மாணவப் பருவம், இல்லறம், வானப்ரஸ்தம், துறவு ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. வெளி நாட்டார் நம் மக்களைப் பிளவு படுத்தவும், பலவீனப்படுத்தவும் தொழில் முறைப் பிரிவை முறைக்கு மாறாகப் பயன்படுத்தினர். தொழில் முறைப் பிரிவு சமூகத்தில் சாதிப் பிரிவாக ஆகிவிட்டது. பாரதத்தின் அரசியல் மற்றும் சமூக அமைப்பின் வரலாற்றை அறிந்து கொள்ள ஆதாரமாக இருப்பது மனுஸ்மிருதி. அது இந்துக்களைப் பலவீனமாக்கியது. வேதங்களை விட மனுஸ்மிருதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததன் விளைவாக மக்கள் வெளி நாட்டினருக்கு அடிமையானார்கள். தூய வைதிக விதிப்படியும், கீதையின் அறிவுரைப்படியும் வருணப் பாகுபாடு அநியாயமானது. மக்கள் தாங்கள் அறியாமலேயே சில சமயங்களில் வருணப் பாகுபாட்டைப் பின்பற்றுகிறார்கள். பலர் அரசியல் காரணங்களுக்காகவும், சொந்த நலன்களுக்காகவும், நாட்டைப் பிளவுபடுத்திப் பலவீனமாக வைத்திருக்கவும் மனுஸ்மிருதியைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களெல்லோரும் கடவுளின் எதிரிகள்.

# உபநிடதங்கள்

உபநிடதங்கள் (கி.மு 18000-6000) உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட விஷயங்களையும் மோட்சம் அடைவதற்கான முறையையும் விளக்கும் பண்டைய நூல்களாகும். வேதங்களின் இறுதி மலர்ச்சி இந்த உபநிடதங்களில் ப்ரதிபலிப்பதால் இவற்றில் அறிவு வளர்ச்சியின் உச்சத்தைக் காண்கிறோம். ஆகையால் உபநிடதங்கள் கூறும் தத்துவங்கள் 'வேதாந்தம்' என அழைக்கப்படுகின்றன. வேதங்களின் இறுதிக் கட்டத்தில் உபநிடதங்கள் தோன்றின.

ஆன்மீகம், லௌகீகம் ஆகிய இரு துறைகளையும் சார்ந்த தத்துவமும் நடைமுறையும் உபநிடதங்களில் இடம் பெறுகின்றன. ருக் வேதத்தின் இறுதிப் பகுதியில் உள்ள ஸ்தோத்திரங்களின் இரகசியத் தத்துவங்கள் உபநிடதங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. தனி மனிதனின் ஆத்மாவும் ப்ரபஞ்சத்தின் ஆத்மாவும் (அதாவது பரமாத்மா அல்லது பிரம்மம்) ஒன்றுதான் என்ற உண்மையை உபநிடங்கள் நாம் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்குகின்றன. இந்தத் தத்துவத்தின் சாரமான 'தத்வமஸி' (அது நீயேதான்) என்ற வாக்கியம் சாந்தோக்கிய உபநிடதத்தில் மிக அழகாக விளக்கப்பட்டிருக்கிறது. முடிவற்ற வாழ்க்கையின் தன்மை கட்டோபநிடதத்தில் ஆராயப்படுகிறது. ஆத்மா வேறு உடலை அடைவது, மாயையின் தத்துவம் முதலியவை ஸ்வேதாஸ்வேதர உபநிடதத்தில் இடம் பெறுகின்றன. உபநிடத வாக்கியங்கள் மிகச் சுருக்கமானவை. அவற்றால் மிகக் கடினமான தத்துவங்களின் சாரம் அறிவூட்டும் கதைகள் மூலம் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் சொல்லப்பட்டுள்ளது. வேதம் சார்ந்த உபநிடதங்கள் நாற்பத்திமூன்று. வேதங்களுக்குப் பிற்பட்ட உபநிடதங்கள் சுமார் நூறு இருக்கலாம். வேதங்களில் குறிப்பிடப்படும் தேவதைகளின் உருவங்களைக் கற்பனை செய்து கவிகளும், எழுத்தாளர்களும், சிற்பிகளும் பல அறிவூட்டும் கதைகளைப் படைத்திருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தேவதைகளின் அசாதாரண அறிவுத் திறனையும், போர்த்திறனையும் வலியுறுத்துவதற்காக இவர்களுக்குப் பல தலைகள், பல கைகள் முதலியவற்றைக் கற்பனை செய்துள்ளனர். ஆனால் உண்மையில் தேவதைகளுக்கும் மற்ற மனிதர்கள் போலவே ஒரு தலையும் இரு கைகளும் மட்டுமே இருந்தன. மக்களுக்குத் தேவதைகளிடம் பக்தி உண்டாக்குவதற்காகவே கவிகள்இந்த மிகைக் கற்பனையைச் செய்திருக்கிறார்கள்.

ஓம் த்ரிமஸ்தகானாம் ஞானம் ஏகசிரே அவஸ்திதம், சதுர் பாஹு துல்ய பலம் த்விஹஸ்தே ரோபிதம், பக்தேச்சா பூரணார்த்தம் புனஹ புனஹ ஆவிர்பூதம் ப்ரணமாமி தம் ஹி ஈஸ்வர ப்ரேரித தூதம்.

கடவுளே நீ உன் தூதர்களை மீண்டும், மீண்டும் மனித உருவில் அனுப்புகிறாய். இந்தத் தூதர்கள் மிக்க அறிவுடையவர்கள்., ஒரு

தலைக்குள் மூன்று தலைகளின் சக்தியைப் பெற்றவர்கள். அவர்கள் தங்கள் இரு கைகளால் ஆயுதங்களைக் கையாளும்போது நான்கு கைகளில் ஆயுதமேந்தியவர்கள் போலத் தெரிகிறார்கள்.

## புவி. அமைப்பியல் சார்ந்த கால அட்டவணையும் விஷ்ணுவின் பத்து அவதாரங்களும்

| கல்பம் | உபகல்பம் | யுகம் | அயுத ஆண்டுகள் * | |
|---|---|---|---|---|
| ஸெனோஜோயிக் | க்வாடர்னரி | ஹலோசின் | 0.0115 - 0.00 | புத்தர், கிருஷ்ண, இராம அவதாரங்கள் |
| | | ப்ளிஸ்டோசின் | 1.81 - 0.0115 | பரசுராம அவதாரம் |
| | டெர்ஷியரி | ப்ளையோசின் | 2.59 - 3.60 | வாமன அவதாரம் |
| | | மையோசின் | 7.25 - 20.4 | நரசிம்ம அவதாரம் |
| | | அலிகோசின் | 23.4 - 28.4 | |
| | | இயோசின் | 37.2 - 48.6 | வராக அவதாரம் |
| | | ப்யாலியோசின் | 58.7 - 61.7 | |
| மெஸோஜோயிக் | கிரிடேஷியஸ் | | 70.6 - 140 | உருவ மாற்றங்கள்- பல கட்டங்கள் |
| | ஜூராஸிக் | | 151 - 197 | |
| | ட்ரயாஸிக் | | 204 - 250 | |
| ப்யாலியோ ஜோயிக் | பார்மியன் | | 254 - 295 | |
| | கார்பனிஃபெரஸ் | | 304 - 345 | கூர்ம அவதாரம் |
| | டிவோனியன் | | 375 - 411 | மத்ஸ்ய அவதாரம் |
| | ஸிலுரியன் | | 419 - 439 | |
| | அர்டோவிஷியன் | | 446 - 479 | பிரும்ம கல்பம் |
| | கேம்ப்ரியன் | | 496 - 534 | |
| ப்ரிகேம்ப்ரியன் | ப்ரோடேரொஜோயிக் | | 630 - 2300 | |
| | ஆர்க்கியேன் | | 2800 - 3600 | |
| | ஹேடின் | | 3850 - 4150 | |

* ஒரு அயுத ஆண்டு = 10 இலட்சம் ஆண்டுகள்.

# விஷ்ணுவின் பத்து அவதாரச் சக்கரம்

இந்துத் தத்துவங்களில் சொல்லப்பட்டிருக்கும் பத்து அவதாரங்களான மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம,ராம, கிருஷ்ண, புத்த, கல்கி அவதாரங்கள் நிச்சயமாகப் பரிணாம வளர்ச்சியின் அறிவுசார்ந்த விளக்கந்தான். பல யுகங்களுக்கு முன்னால் கடவுளின் விருப்பத்தால் சூரியனின் ஒரு பகுதி பிரிந்து போயிற்று.

இந்தப் பகுதி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் சூனிய வெளியில் சுற்றிக்கொண்டே கொஞ்சம் கொஞ்சமாகக் குளிர்ந்து இறுகிப் பூமியாக உருவம் பெற்றது. தொடக்கத்தில் பூமி தண்ணீர் மயமாகவே இருந்தது. அப்போது நீரில் வாழும் மீன் தோன்றியது. (ப்யாலியோஜோயிக் கல்பத்தின் சிலூரியன்-டிவோனியன் யுகத்தையே மத்ஸ்ய யுகம் என்கிறோம்.) இந்தக் காலத்தில்தான் கடவுள் மீனுருவில் வேதத்தைக் கண்டெடுத்தார். இந்த வேதம் நூல் அல்ல. படைப்பு ஞானந்தான். அப்போது மீன் தன் இனத்தைக் காப்பாற்றி வளர்ப்பதில் தேர்ச்சி பெற்றது. அதாவது வாழ்க்கைக்கான அறிவைப் பெற்றது. 'கோத்ரம் நோ வர்ததாம்' (எங்கள் வம்சம் பெருகட்டும்) என்பது மந்திரமாயிற்று.

அடுத்த அவதாரம் - ஆமை. தண்ணீரிலிருந்து கரைக்கு வரும் பிராணி. அது காற்றிலிருந்து நேரடியாகப் பிராண வாயுவை எடுத்துக்கொள்ளும் திறன் பெற்றது. தண்ணீரிலிருந்து சேற்றைப் பூசிக்கொண்டு அது கரைக்கு வந்ததையே அது பூமியைத் தாங்கியதாக உருவகிக்கிறோம்.

மூன்றாவது அவதாரம் பன்றி. அது தரை வாழ் பிராணியாக இருந்தாலும் அதனால் தண்ணீரை முற்றிலும் துறக்க இயலவில்லை. அது சேற்றில் வசித்து முலைப் பால் கொடுக்கும் பிராணியாக மாறியது. குழந்தை பிறப்பிக்கக் கற்றுக்கொண்டது . (ஸேனோஜோயிக் கல்பத்தின் ப்யாலியோசின்-இயோசின் யுகம்). அதன் இயற்கைத் தன்மையே மண்ணைப் பற்களால் கிளறுவதாகும்.

நான்காவது அவதாரம் நரசிம்மர் (பாதி மிருகம், பாதி மனிதன்). அதாவது இது உருவம் மாறும் பருவம்.

(சிம்பன்சி, உராங்க் உடான் போல - அலிகோசின்-மையோசின் யுகம்) பகவான் நரசிம்மர் இரண்யகசிபு என்ற அசுரனைத் தம் நகங்களால் குத்திக் கிழித்துக் கொன்றார். பரிணாம வளர்ச்சிப் பாதையில் ஒரு வலிய எதிர் சக்தி இயற்கையாகத் தோன்றிய உணவுச் செல்வத்தை அழிக்க முற்பட்டது. இந்த உணவு காட்டு வாழை.

இந்த வாழையின் எதிரி ஒரு வகை மண்புழு. (வாழை சாதாரணமாகச் சேற்றில் வளர்வதால் அங்கு மண்புழுத் தொல்லை அதிகம்.) இந்த

மண்புழுவின் பெயர்தான் இரண்யகசிபு. இதன் மூலம் உணவுப் பொருளின் எதிரி அழிக்கப்பட்டு எதிர்கால மனித இனத்தின் உணவு பாதுகாக்கப்பட்டது. (இப்போதும் சிம்பன்சி, உராங்க் உடான், பேபூன் போன்ற பிராணிகள் மண்புழு போன்ற ஜந்துக்களின் எதிரிகள்.) இவை பொதுவாக இறைச்சியுண்ணாதவை, எனினும் ஓரளவு புழுக்களைத் தின்பவை. வாழை பண்டைக்காலத்து உணவு. ஆதலால் இவ்வளவு பயன் வாய்ந்த வாழை மரம் இந்துக்களின் மங்கலச் சடங்குகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

இதன் பிறகு ஐந்தாம் அவதாரம் - வாமனன் - முற்றிலும் ராமாப்பித்தேகஸ், அதாவது மனித இனத்தின் தோற்றம் (ப்ளையோசின் யுகம்). வாமனன் இடையிடையே இரண்டு கால்களால் நடந்தாலும் அவனுக்குக் கொஞ்சம் கைகளின் உதவியும் தேவைப்படுகிறது. வாமனின் உயரம் தற்கால மனிதனின் உயரத்தில் பாதிதான்.

பிறகு ஆறாவது அவதாரம் - முழுமையான மனித உருக்கொண்ட பரசுராமர். அவரது கையில் கோடரி. அவர் உடல் வலிமையில் க்ஷத்திரியர் அல்லர், பிராமணர் - அதாவது அறிவு வல்லமை பெற்றவர். அவர் நெருப்பின் உபயோகத்தை உணர்ந்தவர் - ஆகையால் அக்கினிஹோத்ரி. புகவான் ஆயிரம் கைகள் கொண்ட கார்த்தவீரியார்ஜுனனைக் கொன்றார், க்ஷத்திரிய இனத்தை இருபத்தோரு முறை அழித்தார், தன் தாய் ரோகிணியைக் கொன்றார்.மனிதனுக்கு ஆயிரம் கைகள் இல்லை. ஆனால் அர்ஜுன (மருத) மரம் எண்ணற்ற கிளைகளைக் கொண்டது. பரசுராமர் கோடரியால் மருதமரங்களை வெட்டிக் காட்டை அழித்து (க்ஷத்திரியர்களை அழித்து) பூமியை மனிதர்கள் வாழத் தக்கதாக ஆக்கினார். பிறகு தாய் போன்ற பூமியைக் கோடரியால் பிளந்து மண்ணைத் துகள் துகளாக (ரேணுவாக) ஆக்கினார். இப்போது மிருகங்களின் பருவம் கழிந்து மனித யுகத்தின் வைகறையொளி தோன்றியது.

பிறகு வந்தார் சீதாபதி ராமன். அவர் கையில் வில், அம்பு. கையில் வைத்துக்கொண்டு போரிட உதவும் கோடரியால் வெகு தொலைவில் செல்லக்கூடிய அம்பை வெல்ல இயலவில்லை. ராமன் பரசுராமனை வென்றார். பரசுராமர் தயார் செய்து வைத்திருந்த நிலப்பரப்பில் ராமன் மனிதர்களைக் குடியேற்றினார்.

நிலையான ஊர்கள் தோன்றின. அவற்றின் தலைவனாக மன்னன் தோன்றினான். க்ஷத்திரியர்களை அழித்த பரசுராமனின் இடத்தில் இப்போது வில்லேந்திய ராமன். இந்தப் பருவத்தில்தான் தரத்தில் உயர்ந்த விவசாயம் தொடங்கியது. அகல்யா உயிர்ப்பிக்கப்பட்டாள். அதாவது தரிசு நிலம் கலப்பையைக் கொண்டு பண்படுத்தப்பட்டது. ராமனுக்கு சீதாபதி என்ற

பெயரும் பொருத்தம்தான். ஏனெனில் *சீதா* என்ற சொல் கலப்பையின் மேழியைக் குறிக்கும். மிதிலை மன்னன் ஜனகன் விவசாயத்தில் கலப்பையின் உபயோகத்தைக் கண்டுபிடித்தார்.எனினும், ராமன் அதைப் பெருமளவில் பயன்படுத்தி மனித மனங்களில் *சீதை*யை ஒரு தாயின் உருவகமாக நிலை நிறுத்தினார். அதாவது ஒரு தாய் எப்படித் தன் குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்றுகிறாளோ அவ்வாறே விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட பாரத மக்களிடையே கலப்பையின் உபயோகத்தைப் பிரசாரம் செய்து அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டினார் ராமன் - விஷ்ணுவின் ஏழாவது அவதாரம்.

இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின் எட்டாவது அவதாரமாக வந்தார் பகவான் கிருஷ்ணன். விவசாய நாகரீகம் முழு வளர்ச்சி பெற்றது - வேதம் சார்ந்த காட்டு நாகரீகம், புராணங்கள் காலத்து விவசாய நாகரீகம். ஞானம் (அறிவு) தன் உச்சத்தைத் எட்டியது. பகவான் விஷ்ணுவின் முழுமையான அவதாரம் கிருஷ்ணாவதாரம்.

இதன் பிறகு வரலாற்று யுகம் தொடங்கியது. ஒன்பதாவது அவதாரமாகப் புத்தர் தோன்றினார்.

அவர் வாழ்க்கையின் அமுத மந்திரத்தை மூன்றே வார்த்தைகளில் சொல்லிவிட்டுச் சென்றார் - அஹிம்சா பரமோ தர்ம: (துன்பம் செய்யாமையே பெரும் தர்மம்). ஞானம் முழுமை பெற்றது.

விஷ்ணுவின் பத்தாவது அவதாரம் கல்கி. அவர் தெர்மோ நுக்ளியர் அறிவியலின் உதவியால் மனித இனத்தின் துன்பங்களைக் களைவார் என்று சொல்லப்படுகிறது.

**பத்து அவதாரங்கள் எடுக்கும் பகவான்**
**கிருஷ்ணனுக்கு வணக்கம்!**

# சுவாமி விவேகானந்தரும் அவருடைய தத்துவமும்

சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார் - "உபநிடதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் எனக்குச் சொல்லப் பட்டிருப்பது என்னவென்றால் அது துணிவு. இதுதான் எல்லாவற்றையும் விட முக்கியமாக நினைவில் கொள்ளவேண்டிய விஷயம். நான் என் வாழ்வில் இந்தப் பெரிய படிப்பினையையே கற்றேன். மனிதனே! வீரியங்கொண்டவனாக இரு! பலவீனனாக இருக்காதே!"

சுவாமி விவேகானந்தர் மேலும் கூறியுள்ளார்: "ஓர் இனம் என்ற முறையில் நாம் பெற்றதெல்லாமே நம்மைப் பலவீனர்கள் ஆக்கிவிட்டன. பலவீனர் களான நம்மை எப்படி மேலும் பலவீனர்களாக ஆக்கிக்கொள்வது என்பதே நம் வாழ்க்கையின் ஒரே நோக்கமாக இருந்ததாகத் தோன்றுகிறது. இறுதியில் நாம் மண்புழுக்களாக ஆகிவிட்டோம் - கத்தியை நீட்டி நம்மை வீழ்த்தியவனின் காலடியில் கிடப்பதற்காக."

"நான் வேண்டுவது இரும்புத் தசைகளும் ஆரோக்கியமும்; உறுதியான தாதுவால் ஆன மனம். ஆண்மையைப் பூசை செய்."

"உன்னிடம் எல்லா சக்தியும் இருக்கிறது. உன்னால் எதுவும் முடியும் என்று நீ நம்பு. நீ பலவீனன் என்று நினைக்காதே. நீ எவரது ஆணையுமின்றி உனக்கு இஷ்டமானதைச் செய்யலாம். எல்லா சக்தியும் உன்னிடம் உள்ளது. நீ எழுந்திருந்து உன்னுள்ளே உள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்து."

"உன் நாட்டுக்கு வீரர்கள் தேவை. நீ வீரன் ஆகு. மலை போல உறுதியாக இரு. எப்போதும் வெற்றி பெறு. இனத்தின் ரத்த நாளங்களில் மின்சாரப் பிரவாகத்தை நாட்டு மக்கள் வேண்டுகிறார்கள். நாட்டில் உயிர்ச் சக்தியை விழித்தெழச் செய். துணிவுள்ளவனாக இரு. சாவு ஒரு முறைதான் வரும்.

இந்துக்கள் கோழைகளாக இருக்கக் கூடாது. நான் கோழைத்தனத்தை வெறுக்கிறேன். மனதில் ஆழ்ந்த அமைதியைப் பேண். உனக்கு எதிராக அற்பர்கள் பேசும் பேச்சைப் பொருட்படுத்தாதே. அதை அலட்சியம் செய்! அலட்சியம் செய்! அலட்சியம் செய்! மிகப் பெரிய தடைகளைக் கடந்துதான் பெரிய * ஒரு அயுத ஆண்டு = 10 இலட்சம் ஆண்டுகள். சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. ஆண் புலி போல முயற்சியில் ஈடுபடு."

"நண்பா ஏன் அழுகிறாய்? எல்லா சக்தியும் உன்னுள்ளே இருக்கிறது. சர்வ சக்தி உள்ள உன் இயற்கைத் தன்மையைத் தட்டியெழுப்பு. அப்படிச் செய்தால் இந்த உலகம் முழுதும் உன் காலடியில் விழும். முட்டாள்கள் 'நாங்கள் பலவீனர்கள்' என்று முனகுகிறார்கள். நம் இனம் வேண்டுவது

வேலையும் அறிவியல் திறனும். நமக்குத் தேவை மகான் ஆத்மா, வலிமை, எல்லையற்ற ஆர்வம்.

முயற்சியுள்ள ஆண் தான் இலட்சுமியை அடைகிறான். பின்னால் திரும்பிப் பார்க்கத் தேவையில்லை.

நாம் வேண்டுவது எல்லையற்ற உயிர்ச்சக்தி, உற்சாகம், துணிவு, பொறுமை. இவை இருந்தால் பெரிய சாதனைகள் நிகழ்த்தலாம்."

"வேதம் எதையும் பாவமாகக் கருதுவதில்லை,அது தவறுகளைப் பற்றித்தான் சொல்கிறது. 'நான் பலவீனன், பாவி, அதிருஷ்டங்கெட்ட ஜீவன், நான் வலிமையற்றவன், ஒரு காரியத்தைச் செய்யத் தகுதியற்றவன்' என்று கருதுவதை வேதம் பெரிய தவறு என்று சொல்கிறது."

"வலிமையே ஜீவன், பலவீனமே சாவு. சக்தியே சுகம். வாழ்வு முடிவற்றது, மரணமற்றது. பல்வீனம் என்பது எப்போதும் துன்பம் அனுபவிப்பது, அது மரணம். ஆக்கபூர்வமான மனப்போக்கை மேற்கொள்."

"பலவானாக இரு. உனக்கு உதவக்கூடிய எண்ணங்களையே குழந்தைப் பருவத்திலிருந்து போற்றி வளர்த்துக்கொள். நாம் துன்பங்கள் அனுபவிப்பதற்கு முக்கியக் காரணம் நமது பலவீனமே. நாம் பலவீனராக இருப்பதால் தான் பொய் சொல்கிறோம், திருடுகிறோம், கொலையும் மற்ற குற்றங்களும் செய்கிறோம். அதன் காரணமாகவே துன்பம் அனுபவிக்கிறோம். நமது மரணத்துக்குக் காரணம் நமது பலவீனம்தான். பலவீனமில்லையேல் துக்கமில்லை, மரணமில்லை. சக்திதான் வேண்டும். அதுதான் உலகத்தின் நோய்களுக்கு மருந்து. வலியவனால் துன்புறுத்தப்படும் பலவீனனுக்கு மருந்து வலிமைதான்."

"எழுந்து நில், துணிவு கொள், வலிமையைப் பேண், உன் பாக்கியத்துக்கு நீயே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள். உனக்குத் தேவையான வலிமையும், உதவியும் உன்னிடமேயுள்ளன. ஆகையால் உன் எதிர்காலத்தை நீயே சமைத்துக்கொள்."

"நாம் நோயாளிகள் என்று எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தால் நோய் தீர்ந்துவிடாது. கோழைத்தனத்தை நினைவு கூர்வதால் லாபம் எதுவுமில்லை. எப்போதும் பலவீனத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால் பலவீனம் தீராது, பலம் வந்துவிடாது. வலிமையைப் பற்றியே நினைத்தால் பலவீனம் ஒழியும்."

"இந்த உலகத்திலும் சமயத்தின் உலகத்திலும் இதுவே சத்தியம். வீழ்ச்சிக்கும் பாவத்துக்கும் உண்மையான காரணம் பயம்தான். பயம் துக்கத்தைக் கொணர்கிறது, மரணத்தைக் கொணர்கிறது, கேட்டை விளைவிக்கிறது."

"பயம் எங்கிருந்து வருகிறது? நமது இயற்கையான தன்மை பற்றிய அறியாமையிலிருந்து. நம்மில் ஒவ்வொருவரும் ராஜாதிராஜனின், அதாவது

கடவுளின் இளவரசன். எல்லாப் பாவங்களையும், எல்லாக் கேடுகளையும் ஒரே சொல்லில் 'பலவீனம்' என்று சொல்லி விடலாம். எல்லாக் கெட்ட காரியங்களுக்கும் பின்னாலிருந்து தூண்டிவிடுவது பலவீனந்தான். பலவீனமே எல்லாச் சுயநலங்களுக்கும் வேர்."

"பலவீனத்தால்தான் மனிதன் மனிதனைத் தாக்குகிறான். தான் எப்படி இல்லையோ அப்படியெல்லாம் காட்டிக்கொள்கிறான்."

"நமது பொது மக்களுக்கு இப்போது தேவை - இரும்பு போன்ற தசை, எஃகு போன்ற நரம்புகள், உறுதியான, தடுக்கப்படமுடியாத தீர்மானம். அதன் மூலம் பிரபஞ்சத்தின் ரகசியத்தைப் பிளந்துகொண்டு நம் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். எப்படியாவது இதற்காகக் கடலின் ஆழத்துக்குப் போக வேண்டியிருந்தாலும் சரி, சாவை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் சரி."

"நாம் வெகு காலம் அழுதுகொண்டிருந்து விட்டோம். இப்போது உன் கால்களில் நில், மனிதனாக ஆகு, மனிதனைத் தயாரிக்கும் தருமம் அல்லது சமயந்தான் நமக்கு வேண்டும். மனிதனைத் தயாரிக்கக்கூடிய முழுமையான கல்வி வேண்டும். இங்குதான் சத்தியம் சோதிக்கப்படும். உன் உடலை, அறிவை, ஆன்மீக சக்தியைப் பலவீனப்படுத்தும் எல்லாவற்றையும் உதறிவிடு. உயிரற்றது சத்தியமானதாக இருக்க முடியாது. சத்தியம் வலிமை தரும், சத்தியம் காப்பாற்றும், சத்தியமே முழுமையான அறிவு. சத்தியமே வலிமை தரும், ஒளியைத் தரும்."

"நாம் கிளிப்பிள்ளையைப்போல் நிறையப் பேசுகிறோம், காரியம் செய்வதில்லை. வெறும் பேச்சுப் பேசுவதும், வேலை செய்யாமல் சோம்பிக் கிடப்பதும் நமது சுபாவமாகிவிட்டது. இதற்குக் காரணமென்ன? உடல் வலிமையின்மை. வலிமையற்ற மூளையால் ஒரு காரியமும் நடைபெறாது. நாம் நம் மூளையின் சக்தியைப் பலப்படுத்த வேண்டும். முதலில் நம் இளைஞர்களை வலிமை படைத்தவர்களாக ஆக்கவேண்டும். மதம் அதற்குப் பிறகு வரும். உங்கள் ரத்த நாளங்களில் வலிமையான ரத்தம் பெருகும்போதுதான் நீங்கள் கிருஷ்ணரின் மகத்தான அறிவுத் திறனையும் சக்தியயும் பெறுவீர்கள். உங்கள் உடம்பு உங்கள் கால்களின் மேல் உறுதியாக நிற்கும்போது நீங்கள் உபநிடதங்கள் மற்றும் ஆத்மாவின் மகிமையை உணர்ந்துகொள்ள முடியும்; அப்போது நீங்கள் உங்களை உண்மையான மனிதர்களாக உணர்ந்து கொள்வீர்கள்."

"நீதியைக் கடைப்பிடிப்பவர்களாக, துணிவுள்ளவர்களாக, எதற்கும் அஞ்சாதவர்களாக ஆகுங்கள். கோழைகள் தான் பாவம் செய்கிறார்கள். துணிவுள்ளவர்கள் பாவம் செய்வதில்லை. எல்லோரும் மற்றவர்களை நேசிக்க முயற்சி செய்யுங்கள்."

"எழுந்து நில், நுகத்தடியைத் தோள்மேல் போட்டுக்கொள். எவ்வளவு நாள் இந்த உலக வாழ்க்கை ? எப்போது உலகில் பிறந்துவிட்டாயோ, போவதற்குள் ஒரு அடையாளத்தை விட்டுச் செல். இல்லையேல் உனக்கும் மரத்துக்கும் கல்லுக்கும் என்ன வித்தியாசம் ? அவையும் பிறக்கின்றன, தேய்கின்றன, அழிகின்றன."

"துணிவு மேற்கொள். என் குழந்தைகள் எல்லோரையும் விடத் துணிவுள்ளவர்களாக வேண்டும். எந்தக் காரணமாகவும் சமரசம் செய்து கொள்ளாதே. மிக உயர்ந்த சத்தியத்தைக் கற்பி. கவுரவம் போய் விடும் என்றோ மோதல் நேரும் என்றோ அஞ்சாதே. சத்தியத்தைத் துறக்கச் சொல்லி எவ்வளவு தூண்டுதல் இருந்தாலும் சத்தியத்துக்கே சேவை செய்ய வேண்டும் என்று அறிந்து கொள்."

# சில சொற்களின் விளக்கம்

**அவதாரவாதம் -** இந்துக்கள் மறுபிறப்பில் நம்பிக்கையுள்ளவர்கள், அதாவது ஒருவன் இறுதி விடுதலை (மோட்சம்) அடையும் வரையில் மீண்டும் மீண்டும் பிறக்கிறான், அப்படிப் பிறக்கும்போது முன் பிறவியின் சில குணங்கள் அவனிடம் மறுபிறப்பிலும் தொடர்கின்றன என்று நம்புகிறார்கள். இந்து சமயத்தின் மூன்று முக்கியத் தேவதைகள் பிரும்மா, விஷ்ணு, சிவன். உலகத்தைத் துன்பங்களிலிருந்து காப்பாற்றுவதற்காகக் கடவுள் அவ்வப்போது உலகத்தில் பிறப்பதாக இந்துக்கள் நம்புகிறார்கள். இப்படிப் பிறந்தவர்களை கடவுளின் அவதாரங்கள் என்று சொல்கிறார்கள். விஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்ததாகவும் ராமரும் கிருஷ்ணரும் அத்தகைய அவதாரங்கள் என்றும் கருதப்படுகிறது.

**பிரும்மம் -** முதலும் முடிவும் உருவமும் குணங்களுமற்ற கடவுளின் ஒரு பெயர்.


**பிரும்மசரியம் -** புலனடக்கம்; காமம், கோபம், ஆசை போன்ற உணர்வுகளை அடக்கி வாழும் வாழ்க்கை.


**வேதங்கள் -** சநாதன தருமத்தின் ஆதிசாத்திரங்கள். இவை மனிதன் நல் வாழ்வு வாழ வழிகாட்டுபவை. ஆதிதேவதைகள் மூலம் கடவுள் உலகிற்கு அளித்த கொடை.


**தருமம் -** நீதி அடிப்படையில் அமைந்த வாழ்க்கை நெறி. இதைக் கடைப்பிடிப்பவன் இம்மையிலும் மறுமையிலும் சுகம் பெறுவான்.

**சநாதன தருமம் -** மனிதப் பண்பாட்டின் ஆதிப்பெயர். பிற்காலத்தில் இது இந்து மதம் எனப் பெயர் பெற்றது.

| | |
|---|---|
| பிராமணன் - | கல்வி கற்பது, கற்பிப்பது இவற்றையே தொழிலாகக் கொண்டவன். |
| க்ஷத்திரியன் - | போர்த் தொழில் செய்பவன்; மக்களை ஆட்சி செய்பவன். |
| வைசியன் - | வாணிகம் மூலம் நாட்டின் செல்வத்தை வளர்ப்பவன். |
| சூத்திரன் - | உடலுழைப்பின் மூலம் பொருளுற்பத்தி செய்பவன். |
| தலித் - | மேலே கூறப்பட்ட நான்கு பிரிவுகளடங்கிய சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவன், தாழ்த்த ப்பட்டவன். |
| அசுரன், ராக்ஷசன்- | கொடுமையான குணங்கள் வாய்ந்தவன், மக்களுக்குக் கேடிழைப்பவன். |






**Mahamrityunjoy Trisul**

**Mahamrityunjoy Axe**

**Mahamrityunjoy Sword**

This sword or axe or Trisul containing replica of Ishwar's angels becomes "Mahamrityunjoy", i.e., a guarantee against accidental disaster. Any one who keeps any one of these items at home and master the art of using these sword or axe or Trisul will be blessed by Ishwar to be healthy, wealthy, successful & very powerful.




Badrinath Dham existing since the time of Veda is the oldest Hindu shrine (Altitude 3133 M).

The Holy Book of Hindu religion has dealt with Veda, Gita, Manusanghita, Smriti Shastras etc, in capsule form. For a Hindu family person, this much knowledge about Hinduism is minimum requirement & is almost adequate.

Pandit Pradip Ramnath, Priest of Badrinath Dham



Indian Space Research Organisation Ministry of Science & Technology, India.

Every chapter of The Holy Book of Hindu Religion bears the stamp of a scientific mind and eternal human values. I recommend to all the young people to go through the chapters like Idol Worship, Caste System & Ten Incarnations of Vishnu etc. This book covers almost 90% of the knowledge required for an ordinary person to understand the strength of this humanist religion.

Dr Samiran Das, Space Scientist , ISRO,INDIA




Kedarnath Dham existing since the time of Mahabharat is the holiest Hindu shrine (Altitude 3584M).

I have liked The Holy Book of Hindu Religion. I think that all Hindus should read this book.

Pandit MahendarSukla, Priest of Kedarnath Dham



Indian Institute of Technology, Kharagpur, Ministry of Human Resource Development, India.

Throughout my life I served science and neither had time nor had any interest to read scriptures. Recently I studied The Holy Book of Hindu Religion. It was a turning point. Had I read this book during my student days, I would have surely achieved much more in life.

Prof. Dr. B.B.Ghosh, I.I.T. Kharagpur

ISBN 81-903418-7-1